# திருமறைத்தீபம்



**BIBLE LAMP**

**திருமறைத்தீபம்**

**Issue No. 2 of 2023**

**ISBN 1173-7255**

இக்காலாண்டுப் பத்திரிகையில் வெளிவரும் பெயர் குறிப்பிடப் படாத ஆக்கங்கள் அனைத்தும் ஆசிரியரால் எழுதப்பட்டவை. ஆசிரியரின் எழுத்துமூல அனுமதியின்றி பத்திரிகையின் எப்பகுதியையும் எவ்விதத்திலும் பிரசுரிக்கக் கூடாது.

**ஆசிரியர்: ஆர். பாலா**

**Editor:** R. Bala

**Sovereign Grace Publications**
P O Box 62 159, Sylvia Park,
Auckland 1644, New Zealand
+64 9 272 8061
biblelamp1995@gmail.com
www.biblelamp.me

**Reformed Publications**
6/87 Kamarajar Street,
Thiruvalluvar Nagar,
Ayanavaram,
Chennai 600023. South India.
+91 9445671113

"சத்தியத்தைக் கபடமில்லாமல் எடுத்துக்கூறாமலும், கொள்கைப் பஞ்சத்தோடும் இருக்கும் பத்திரிகையை இலக்கியத்தொல்லை என்றுதான் கூறவேண்டும்."

சி. எச். ஸ்பர்ஜன் (1834-1892)

# வாசகர்களே!

*வணக்கம் வாசகர்களே! இன்னுமொரு இதழைப் பூர்த்தி செய்து உங்கள் முன் படைக்க கர்த்தர் உதவியிருக்கிறார். என்னோடிணைந்து இதழ் பணியில் தொடர்ந்து உழைத்து வருபவர்களுக்கு நான் நன்றி சொல்லாமல் இருக்கமுடியாது. வாசகர்களாகிய உங்களுக்கு இந்த இதழும் இதற்கு முன் வந்திருப்பவை போலவே ஆவிக்குரிய பலன்களை அளிக்க ஜெபத்தோடு அனுப்பி வைக்கிறோம்.*

*பரிசுத்த வேதாகமத்தைப் பற்றிய அவசியமான இறையியல் விளக்கங்களை சுமந்து நீளமான ஒரு ஆக்கம் இந்த இதழில் வந்திருக்கிறது. பரிசுத்த வேதாகமத்தைப் பற்றிய நம்முடைய நம்பிக்கைகள் ஏனோதானோவென்று இருந்துவிடக்கூடாது. நீங்கள் உங்களுடைய வேதம் பற்றிய நம்பிக்கைகளைச் சரிசெய்துகொள்ள இந்த ஆக்கம் உதவட்டும்.*

*இந்த நூற்றாண்டில் திருச்சபைக்கு மதிப்பளிப்பவர்கள் மிகக்குறைவு. திருச்சபை இல்லாமலேயே கிறிஸ்தவ வாழ்க்கையை வாழ்ந்து, கிறிஸ்தவ பணிகளையும் செய்துவரலாம் என்ற மிகத்தவறான போக்கைப் பின்பற்றுகிறவர்கள் தொகை வேகமாக அதிகரித்து வருகிறது. இதையெல்லாம் திருச்சபையின் நாயகனான இயேசு கவனிக்காமலில்லை. திருச்சபையின் மகிமையைப் பற்றிய ஒரு ஆக்கத்தை இதில் தந்திருக்கிறேன். வாசகர்களாகிய நீங்கள் திருச்சபைக்கு உங்கள் வாழ்க்கையில் முக்கிய இடத்தை அளித்து கிறிஸ்தவ வாழ்க்கையை வாழ்ந்து கிறிஸ்துவை மகிமைப்படுத்துங்கள். அதற்கு இந்த ஆக்கம் துணைபோகுமானால் கர்த்தருக்கே எல்லா மகிமையும் சேர வேண்டும்.*

*இந்த இதழில் ஆர்த்தர் பிங்கின் வேதவிளக்க விதிமுறைகள் பற்றிய நூலில் இருந்து இன்னுமொரு அதிகாரத்தை மொழியாக்கம் செய்து தந்திருக்கிறோம்.*

*பலவிதமான பணிகளுக்கு மத்தியில் இந்த ஆக்கத்தைத் தயாரிக்க வேண்டிய சூழ்நிலை இருந்தது. இத்தனைக் காலமும் வழிநடத்தி வந்திருக்கும் தேவன் இதையும் கவனத்தோடு தயாரித்து உங்கள் முன் படைக்க உதவியிருக்கிறார். இதழை வாசிக்கிறவர்கள் தொகையும் அதிகரித்து வருகிறது. இதைப் பயன்படுத்தி வரும் கர்த்தரின் அளவற்ற கிருபையை நினைத்து அவருக்கு இருதயபூர்வமாக நன்றி செலுத்துகிறேன். என்னை இப்பணியில் ஊக்குவித்து வரும் சபையாருக்கும் நன்றி. – ஆசிரியர்*

# பரிசுத்த வேதாகமம்

இந்த ஆக்கம் பரிசுத்த வேதாகமத்தைப் பற்றியது. அதிலிருந்தே நாம் கிறிஸ்தவ இறையியல் தொர்பான எதையும் கற்க ஆரம்பிக்க வேண்டும். பரிசுத்த வேதாகமத்தைப் பற்றிய நம்முடைய நம்பிக்கைகள் தவறாக இருக்குமானால் நாம் வேதபூர்வமான கிறிஸ்தவர்களாகவோ, சபையாகவோ இருக்கமுடியாது. கத்தோலிக்க மதம் வேதம் மட்டுமே கர்த்தருடைய வார்த்தை என்பதை நம்புவதில்லை. கெரிஸ்மெட்டிக் குழுவினர் வேதத்திற்குப் புறத்தில் இருந்தும் கர்த்தர் தொடர்ந்து வெளிப்படுத்தலைத் தந்துகொண்டிருக்கிறார் என்று நம்புகிறார்கள். வேதத்தில் சத்தியமும், மனித சிந்தனைகளும் கலந்து காணப்படுகின்றன என்று தாராளவாதப் போக்குடையவர்கள் (Liberal) நம்புகிறார்கள். வேதத்தைப் பற்றிய நம்முடைய நம்பிக்கைகள் தவறாக இருக்குமானால் நாம் சத்தியத்தை மட்டுமே நம்புகிறோம் என்று சொல்லமுடியாது. வேதம் பற்றிய உங்களுடைய நம்பிக்கை என்ன?

***1. கடவுளையும், அவருடைய சித்தத்தையும் நமக்கு வெளிப்படுத்தும் கர்த்தரின் சர்வ அதிகாரமுள்ள தெய்வீக வெளிப்படுத்தல் வேதம் மட்டுமே.***

இந்த நம்பிக்கை இல்லாவிட்டால் நாம் சபைகூடிவருதலில் எந்தப் பயனுமில்லை. இன்று கிறிஸ்தவர்கள் மத்தியில் வேதத்தைப் பற்றிய நம்பிக்கை பலவீனமாக இருக்கிறது. அந்த பலவீனமே அவர்கள் தாங்கள் நினைத்தபடி எதையும் செய்வதற்குக் காரணமாக இருக்கிறது. கடவுளைப் பற்றியும், மனிதனைப் பற்றியும், இரட்சிப்பைப் பற்றியும், திருச்சபையைப் பற்றியும், உலகத்தைப் பற்றியும் நம்முடைய நம்பிக்கைகள் எப்படிப்பட்டதாக இருக்க வேண்டும் என்பதைத் தெள்ளத்தெளிவாக விளக்குகின்ற ஒரே நூல் வேதம் மட்டுமே. அதில் நமக்குத் தெளிவில்லாமல் இருந்தால் நம்முடைய நம்பிக்கைகளும், செயல்களும் கர்த்தருக்கு எதிராகவே எப்போதும் இருக்கும்.

இன்று நம்மினத்தில் திருச்சபை நல்ல நிலையில் இல்லாமல் இருப்பதற்கும், திருச்சபை தலைமை சரியில்லாமல் இருப்பதற்கும், ஆத்துமாக்கள் தடுமாற்றமான வாழ்க்கையை வாழ்ந்து வருவதற்கும் இது முக்கிய காரணம். வேதம் அவசியமென்பதை எல்லோருமே ஏற்றுக்கொண்டாலும், அதன் தன்மையைப் பற்றியும், அது விளக்கும் உண்மைகளைப் பற்றியும் தெளிவான விளக்கமில்லாமலும், அதை முறையாகப் பயன்படுத்தத் தெரியாமலும் ஆத்துமாக்களும், போதகர்களும், சபைகளும் இருந்து வருகின்றன. அதன் காரணமாக ஆத்மீக வலிமையின்றி சபைகள் போலிப்போதனைகளுக்கு இலகுவாக இடங்கொடுத்து விடுகின்றன.

வேதம் சர்வ அதிகாரம் கொண்டதாக கர்த்தருடைய சித்தத்தை வெளிப்படுத்தும் ஒரே நூலாக இருக்கிறது என்ற உண்மையில் மலையளவுக்கு

உண்மைகள் காணப்படுகின்றன. அதாவது, வேதம் சர்வ அதிகாரம் கொண்டது என்று கூறும்போது, அதன் அதிகாரத்திற்கான காரணத்தை ஆராய்வது அவசியம். கடவுள் சர்வ அதிகாரம் கொண்டவர் என்று கூறும்போது, அத்தகைய அதிகாரத்திற்கான குணாதிசயங்களையும், தகுதிகளையும் அவர் தன்னில் கொண்டிருப்பதே அதற்குக் காரணம். அவருக்கிருக்கும் அத்தகைய குணாதிசயங்களைக் கொண்டிருக்கும் இன்னுமொரு நபரோ, சக்தியோ உலகத்தில் இல்லை. அதுவே கடவுளை சர்வ அதிகாரமுள்ளவராக்குகிறது.

அதேபோல வேதத்திற்கு சர்வ அதிகாரம் இருக்கிறது என்று கூறும்போது அந்த அதிகாரத்திற்கான குணாதிசயங்களையும், தகுதிகளையும் வேதம் தன்னில் கொண்டிருக்கிறது என்பது மட்டுமல்லாமல், அத்தகைய அதிகாரத்தைக் கொண்டிருக்கும் வேறு எந்த நூல்களும் இந்த உலகத்தில் இல்லை என்பது அதற்குக் காரணம். வேதத்திற்கு மட்டும் இருக்கும் அந்த சர்வ அதிகாரமே நம்மோடு பேசி, வழிநடத்தி, நம்மை ஆளும் அதிகாரமாக அது இருப்பதற்குக் காரணம். அந்தக் குணாதிசயங்கள் யாவை :

அ. வேதம் தன் அதிகாரத்திற்கான சாட்சிகளைத் தன்னில் கொண்டிருக்கும் தன்மை.

ஆ. பரிசுத்த ஆவியானவர் வேதம் உண்மையென்பதை நம்ப வைக்கிறார்.

இ. திருச்சபை வேதத்தின் அதிகாரத்தை உறுதிப்படுத்துகிறது.

ஈ. வேதம் அளிக்கப்பட்டிருக்கும் முறை – அது தெய்வீக வெளிப்படுத்தல்.

### 1.1 கடவுள் வேதத்தின் மூலம் மட்டுமே தன்னை வெளிப்படுத்துகிறார்.

எபிரெ 1:1–2

“பூர்வகாலங்களில் பங்குபங்காகவும் வகைவகையாகவும், தீர்க்கதரிசிகள் மூலமாய்ப் பிதாக்களுக்குத் திருவுளம் பற்றின தேவன், இந்தக் கடைசி நாட்களில் குமாரன் மூலமாய் நமக்குத் திருவுளம் பற்றினார்; இவரைச் சர்வத்துக்கும் சுதந்தரவாளியாக நியமித்தார், இவரைக்கொண்டு உலகங்களையும் உண்டாக்கினார்.”

கடவுள் சத்தியத்தை எந்த விதத்தில் ஆதியில் இருந்து வெளிப்படுத்தினார் என்பதை இந்த வசனம் விளக்குகிறது.

**பூர்வகாலங்களில்** – ஆதியில் – In the beginning – உலகத்தோற்றத்தின் ஆரம்பத்தில் இருந்து பங்குபங்காகவும், வகைவகையாகவும் – சிறிது சிறிதாகவும், (மொத்தமாக அல்லாமல் சிறிது சிறிதாக), வகைவகையாகவும் (வெவ்வேறு விதங்களில்). அதாவது, ஆரம்பத்தில் இருந்தே கடவுள் மனிதனோடு பேசி தான் யார் என்பதை வெளிப்படுத்தினார். சிலவேளைகளில் மனிதர் முன் மானுடத்தோற்றத்திலும், தூதர்களைப்போலவும், ஆண்டவரின் தூதனாகவும் தோன்றி வெளிப்படுத்தினார். அற்புதங்களைச் செய்து தானே

*தேவன் என்பதை வெளிப்படுத்தினார். அதற்குப் பிறகு மோசேயின் மூலம் தன்னுடைய கட்டளைகளை அவர்களுக்கு எழுத்தில் எழுதிக்கொடுத்தார். அதற்குப் பிறகு தீர்க்கதரிசிகளை எழுப்பி அவர்கள் மூலம் தன் சித்தத்தை மக்களுக்கு வெளிப்படுத்தினார். இந்த முறையிலேயே பழைய ஏற்பாட்டில் (ஆதியாகமம் முதல் மல்கியா வரை) கர்த்தர் தன்னை வெளிப்படுத்தியிருக்கிறார்.*

***தீர்க்கதரிசிகள் மூலம்*** *– இந்த இடத்தில் இந்த வார்த்தை வேதம் யார் மூலமாக பழைய ஏற்பாட்டில் வெளிப்படுத்தப்பட்டதோ அவர்கள் அனைவரையும் தீர்க்கதரிசிகளாக விளக்குகிறது. முதல் ஐந்து நூல்களை எழுதிய மோசே முதற்கொண்டு மல்கியாவரையுள்ள நூல்கள் தீர்க்கதரிசிகள் மூலமே வெளிப்படுத்தப்பட்டன. தீர்க்கதரிசிகளின் பணி கர்த்தரின் செய்தியை நேரடியாக உள்வாங்கி மக்களுக்கு அறிவிப்பது.*

***இந்தக் கடைசி நாட்களில்*** *–* In the last days *– இந்தக் கடைசி நாட்கள் என்பது இயேசு கிறிஸ்துவின் முதலாம் வருகையில் இருந்து அவருடைய இரண்டாம் வருகையுள்ள காலத்தைக் குறிக்கும் வார்த்தைப் பிரயோகம்.*

***குமாரன் மூலமாய்த் திருவுளம் பற்றினார்*** *–* spoke *– பேசினார் – வெளிப்படுத்தினார். ஆகவே முதல் நூற்றாண்டில் இயேசுவின் மூலம் சத்தியம் வெளிப்படுத்தப்பட்டு, பெந்தகொஸ்தே நாளில் இருந்து அப்போஸ்தலர்கள் அவற்றை மக்களுக்குப் போதித்து இறுதியில் புதிய ஏற்பாடாக அப்போதனைகள் அனைத்தும் எழுத்தில் எழுதி முடிக்கப்பட்டன. இந்த முறையிலேயே வேதம் முடிவுக்கு வந்தது.*

*1689 பாப்திஸ்து விசுவாச அறிக்கை தரும் விளக்கம் இதுதான்:*

> *“ஆகவே, தேவன் தமது திருச்சபைக்கு வெவ்வேறு காலங்களில் பல்வேறு விதத்தில் தம்மையும், தமது சித்தத்தையும் வெளிப் படுத்தினார். அதுமட்டுமல்லாது, சத்தியத்தின் பாதுகாப்பிற்காகவும், பரப்புதலுக்காகவும், தீய மனிதர்கள், பிசாசு, உலகம் ஆகியவற்றின் தொல்லைகளின் மூலம் திருச்சபை பாதிப்புறாதபடி நிலைநிறுத்தப் பட்டு ஆறுதல் பெறவும், தம் சித்தத்தைக் குறித்தும், தம்மைக் குறித்ததுமான வெளிப்பாட்டை எழுத்து வடிவில் அருளத்திருவுளங் கொண்டார்.”*

***இதிலிருந்து நாம் கற்றுக்கொள்ளும் பாடம்*** *– கர்த்தரால் எழுத்தில் தரப்பட்டு நம் கையில் இருக்கும் வேதம் மட்டுமே கர்த்தருடைய சித்தம் முழுவதையும் நாம் அறிந்துகொள்ள உதவுகின்ற ஒரே வெளிப்படுத்தல். அதனால், இன்றும், உலக முடிவு வரையிலும் கர்த்தருடைய சித்தத்தை அறிந்துகொள்ள வேதம் மட்டுமே உதவும். முற்காலங்களில் செய்ததுபோல் கர்த்தர் தன் சித்தத்தை நேரடியாக இனிப் பேசி அளிப்பதில்லை. வேதம் தெரியாவிட்டால் கர்த்தரின் சித்தம் நமக்குத் தெரியவில்லை என்று தான் அர்த்தம்.*

***1.2 ஆவியினால் அருளப்பட்டிருக்கும் வேதம் மட்டுமே நமக்குப் போது மானதாகவும், தவறிழைக்க முடியாத (Infallible) கர்த்தரின் வெளிப் படுத்தலாகவும் உள்ளது.***

*2 தீமோ 3:16–17*

*“வேதவாக்கியங்களெல்லாம் தேவ ஆவியினால் அருளப்பட்டிருக்கிறது; தேவனுடைய மனுஷன் தேறினவனாகவும், எந்த நற்கிரியையுஞ் செய்யத் தகுதியுள்ளவனாகவும் இருக்கும்படியாக, அவைகள் உபதேசத்துக்கும், கடிந்துகொள்ளுதலுக்கும், சீர்திருத்தலுக்கும், நீதியைப் படிப்பிக்குதலுக்கும் பிரயோஜனமுள்ளவைகளாயிருக்கிறது (*Sufficient *– போதுமானதாக).”*

*அ.* ***தேவ ஆவியினால் அருளப்பட்டது*** *– ஸ்ரீ லங்கா வேதாகம சங்கம் 2002 மொழிபெயர்ப்பில் “இறைவனின் உயிர்மூச்சினால்” என்றிருக்கிறது.* ILS Bible *– “கர்த்தரின் சுவாசத்தால்” என்றிருக்கிறது.* Θεόπνευστος – theopneustos - God-breathed - breathed out *‘தேவஆவியினால்’ என்ற வார்த்தை மூல மொழியில் பயன்படுத்தப்படவில்லை; இருந்தாலும்* theopneustos *என்ற கிரேக்க வார்த்தையில் கடவுள், ஆவி ஆகிய பதங்கள் இரண்டும் காணப்படுகின்றன. ‘கர்த்தரால் ஊதி அளிக்கப்பட்டது’ என்பதே எழுத்துபூர்வமான மொழிபெயர்ப்பு.* (Inspired)

*ஆ.* ***போதுமானது*** *–* Sufficient *அதில் காணப்படும் அனைத்தும் நமக்குப் போதுமானவை; அதற்கு மேல் எதுவும் நமக்கு அவசியமில்லை; விசுவாசத்திற்கும், விசுவாச வாழ்க்கைக்கும் தேவையான அனைத்தையும் அது தன்னில் உள்ளடக்கியிருக்கிறது. கிறிஸ்தவ வாழ்க்கையில் சகல விஷயங்களுக்கும் அது மட்டுமே நமக்கு வழிகாட்டி. தான் வேதத்தில் வெளிப்படுத்தியிருக்கும் சத்தியத்துக்கு மேலாக கர்த்தர் எதையும் தொடர்ந்து தனி மனிதர்கள் மூலமாகவோ, தரிசனங்கள் மூலமாகவோ, கனவிலோ வெளிப் படுத்துவதில்லை. இன்னொருவிதத்தில் சொல்லப்போனால், வெளிப்படுத்தல் முடிவுக்கு வந்திருக்கிறது. கர்த்தரின் வெளிப்படுத்தலாகிய வேதத்தின் மூலமே கர்த்தர் தொடர்ந்து பேசிக்கொண்டிருப்பதால் அது நம்முடைய ஆவிக்குரிய தேவைகள் அனைத்தையும் தீர்க்கப்போதுமானதாக இருக்கின்றது.*

*இ.* ***தேவனுடைய மனிதன் தேறினவனாக*** *– ஸ்ரீ லங்கா வேதாகம சங்கம் 2002* IBS *– ‘மனிதனுக்குக் கற்பிக்கவும்’ என்று மொழிபெயர்த்திருக்கிறது. இது தவறு. ‘தேவனுடைய மனிதன்’ என்பதே சரியான மொழிபெயர்ப்பு. தேவனுடைய மனிதன் என்பது ஊழியக்காரன் என்பதற்கான வார்த்தைப் பிரயோகம். அதாவது, ஒருவன் போதக ஊழியம் செய்யத்தேவையான அனைத்தையும் வேதம் அவனுக்குத் தரக்கூடியதாக இருக்கிறது என்பதே இதன் கருத்து. ஆவியால் அருளப்பட்ட வேதத்தில் தவறுகளுக்கு இடமில்லை. அது எல்லா நம்பிக்கைகளுக்கும் உரியது.*

*2 பேதுரு 1:20–21*

*“வேதத்திலுள்ள எந்தத் தீர்க்கதரிசனமும் சுயதோற்றமான பொருளையுடையதாயிராதென்று நீங்கள் முந்தி அறியவேண்டியது.*

> *தீர்க்கதரிசனமானது ஒருகாலத்திலும் மனுஷருடைய சித்தத்தினாலே உண்டாகவில்லை; தேவனுடைய பரிசுத்த மனுஷர்கள் பரிசுத்த ஆவியினாலே ஏவப்பட்டுப் பேசினார்கள்."* (This translation is close to the truth)

வேதத்திலுள்ள எந்தப் போதனையும் தீர்க்கதரிசிகளின் மனதில் சுயமாகத் தோன்றிய விளக்கங்கள் அல்ல என்பதை நீங்கள் அறிய வேண்டும். தீர்க்கதரிசனம் (கர்த்தரின் வார்த்தை) மனிதருடைய சித்தத்தில் இருந்து உருவாகவில்லை. அதை வெளிப்படுத்திய மனிதர்கள் பரிசுத்த ஆவியினால் வழிநடத்தப்பட்டு அவர் வெளிப்படுத்தியதை மட்டுமே பேசினார்கள். 'As they were carried along by the Holy Spirit', *(ஆவியினால் தூக்கிச் செல்லப்படுவதைப் போல)*. இது ஒரு தெய்வீக அற்புதச் செயல். எழுதியவர்கள் பிசாசு பிடித்ததைப்போல சுயஉணர்வை இழந்து ஆவியின் ஆளுகைக்குள் வரவில்லை; எழுதியவர்கள் இயந்திரத்தைப்போல செயல்படவில்லை. எழுதியவர்கள் முழுச் சுயஉணர்வோடும், முழுச் சுதந்திரத்தோடும் இருந்து இயங்கிய நிலையில் ஆவியானவர் அவர்களை ஆட்கொண்டு அவர்களுடைய சகல ஆற்றலையும், அறிவையும் பயன்படுத்தி கர்த்தரின் சித்தத்தை மட்டுமே அவர்களைக்கொண்டு எழுதவைத்தார்.

> *1 தெசலோ 2:13*
>
> *"ஆகையால், நீங்கள் தேவவசனத்தை எங்களாலே கேள்விப்பட்டு ஏற்றுக்கொண்டபோது, அதை மனுஷர் வசனமாக ஏற்றுக் கொள்ளாமல், தேவவசனமாகவே ஏற்றுக்கொண்டதினாலே. . . . அது மெய்யாகவே தேவவசனந்தான், விசுவாசிக்கிற உங்களுக்குள்ளே அது பெலனும் செய்கிறது."*
>
> *லூக்கா 24:27, 44*
>
> *27. "மோசே முதலிய சகல தீர்க்கதரிசிகளும் எழுதின வேதவாக்கியங் களெல்லாவற்றிலும் தம்மைக்குறித்துச் சொல்லியவைகளை அவர்களுக்கு விவரித்துக் காண்பித்தார்."*
>
> *44. "அவர்களை நோக்கி: மோசேயின் நியாயப்பிரமாணத்திலும் தீர்க்கதரிசிகளின் ஆகமங்களிலும் சங்கீதங்களிலும் என்னைக்குறித்து எழுதியிருக்கிறவைகளெல்லாம் நிறைவேற வேண்டியதென்று, நான் உங்களோடிருந்தபோது உங்களுக்குச் சொல்லிக்கொண்டுவந்த விசேஷங்கள் இவைகளே என்றார்."*

எம்மாவுக்குப் போகும் வழியில் இயேசுவுக்கு நிகழ்ந்தவற்றை ஏற்றுக்கொள்ள முடியாமல் தவித்த சீடர்களுக்கு அவையெல்லாம் நடந்திருக்கவேண்டிய அவசியத்தை அவர்களுக்கு உணர்த்தி அவர்களை நம்பவைக்க இயேசு எந்த அற்புதத்தையும் செய்யவில்லை; மனித சிந்தனையில் உருவான விஷயங்களை அவர்கள் முன் வைக்கவில்லை. புதிதாக எந்தப் போதனைகளையும் கொடுக்கவில்லை. அவர் செய்ததெல்லாம், பழைய ஏற்பாட்டில் மோசேயின் ஐந்து நூல்களில் இருந்தும், சங்கீத நூலில் இருந்தும்,

ஏனைய அனைத்துத் தீர்க்கதரிசன நூல்களிலிருந்தும் தம்மைப்பற்றிச் சொல்லியிருப்பவைகளை அவர்களுக்கு நினைவூட்டி அவை நிச்சயம் நிகழவேண்டும் என்றும் அவையே தனக்கு நிகழ்ந்தன என்றும் விளக்கினார். இன்னொருவிதத்தில் சொல்லப்போனால், அன்றைக்கு எழுத்தில் இருந்த பழைய ஏற்பாட்டு நூலை மட்டுமே பயன்படுத்தி இயேசு தான்தான் தேவகுமாரன் என்பதை அவர்களுக்கு நிரூபித்துக் காட்டினார், இதிலிருந்து இயேசு, தன்னை வெளிப்படுத்த வேதத்தில் மட்டுமே தங்கியிருந்து அதை மட்டுமே பயன்படுத்தியிருக்கிறாரென்றால் வேதத்தின் அதிகாரத்தையும், அதன் அழியாத்தன்மையையும், இயேசுவைப் போல அதை மட்டுமே நாம் நம்பிப் பயன்படுத்த வேண்டும் என்ற உண்மையையும் நாம் அறிந்துணர வேண்டும்.

## எது வேதம் ?

நம் கையில் இருக்கும் வேதத்திலுள்ள 66 நூல்கள் மட்டுமே பரிசுத்த வேதம். அவை மட்டுமே கர்த்தரின் வழிநடத்தலால் ஆதித் திருச்சபையால் ஏற்றுக்கொள்ளப்பட்டன. கர்த்தர் பரிசுத்த ஆவியின் மூலமாக திருச்சபையை வழிநடத்தி இந்த 66 நூல்களை மட்டுமே தன்னுடைய தெய்வீக வெளிப்படுத்தலாக ஏற்று அங்கீகரிக்கும்படிச் செய்திருக்கிறார். அவற்றிற்கு வெளியில் காணப்படும் தள்ளுபடி ஆகமங்கள் வெறும் மனித எழுத்துக்கள் மட்டுமே. வேதத்திற்கு இருக்கும் தகுதி அவற்றிற்கு இல்லை. கத்தோலிக்க மதம் இந்தத் தள்ளுபடி ஆகமங்களை அங்கீகரித்துப் பயன்படுத்துகிறது.

**வேதம் தவறுகளற்றது Inerrant** – வேதம் கர்த்தரால் தெரிவுசெய்யப்பட்ட மனிதர்களால், ஆவியின் செல்வாக்குக்கு அவர்கள் உட்பட்டு ஆவியின் வழிநடத்தலால் எழுதியிருந்தபோதும் எந்தவித மனித சிந்தனைகளோ, தவறுகளோ, பாவ எண்ணங்களோ அதில் சிறிதும் இடம்பெறாதபடி ஆவியானவர் பார்த்துக்கொண்டார். அதனாலேயே அதற்குப் பரிசுத்த வேதாகமம் என்று பெயர். வேதம் போதிக்கின்ற அனைத்தும், அதில் விளக்கப்பட்டிருக்கும் வரலாற்று உண்மைகள் உட்பட அனைத்தும் நம்பகமானவை. எந்தவிதத் தவறுகளுக்கும் வேதத்தில் இடம் இல்லை.

இது மிகவும் அவசியமாக உணர்ந்து பின்பற்ற வேண்டிய உண்மை. வேதம் எழுதி அளிக்கப்பட்ட வரலாற்றை வாசித்துப் பார்த்தால் எத்தனை கவனத்தோடு எழுதப்பட்டு, பாதுகாக்கப்பட்டு அது நம் கையில் வந்து சேரும்படிக் கர்த்தர் செய்திருக்கிறார் என்பதை அறிந்து கொள்ளலாம். சாதாரண மனிதனின் எழுத்துக்களில் காணப்படும் தவறுகளை வேதத்தில் காணமுடியாது. பரிசுத்த ஆவியானவர் அதில் எந்தத் தவறும் நுழைந்துவிடாதபடி பாதுகாத்திருக்கிறார். அதனால், நாம் நம்பிக்கையோடு வேதத்தை ஆராய்ந்து படிக்கவேண்டும். மொழிபெயர்ப்புகள் அனைத்திலும் நிச்சயம் குறைபாடுகள் இருக்கலாம்; கர்த்தர் பாதுகாத்தளித்த எபிரெய, கிரேக்க மூலப் பிரதிகள் எந்தத் தவறுகளும் இல்லாமலேயே நமக்குத் தரப்பட்டிருக்கின்றன.

**Verbal plenary inspiration – *வார்த்தைக்கு வார்த்தை முழுமையான தெய்வீக அற்புத வெளிப்படுத்தல்***

*மூல மொழிகளில் வேதத்தின் அத்தனை வரலாறும், சம்பவங்களும், போதனைகளும் மட்டுமல்லாமல் அதன் ஒவ்வொரு வார்த்தையும் ஆவியானவரால் வழிநடத்தப்பட்டு தேவமனிதர்கள் எழுதியிருக்கிறார்கள். சரியான வேதவார்த்தைகளைப் பயன்படுத்தும்படிப் பரிசுத்த ஆவியானவர் எழுதியவர்களை வழிநடத்தியிருக்கிறார். எழுதியவர்களுடைய தனித்தன்மையும், எழுத்தாற்றலும், ஞானமும் எந்தவிதத்திலும் பாதிக்காதபடி பரிசுத்த ஆவியானவர் அவர்களைப் பயன்படுத்தித் தான் எதை எழுத்தில் தரத் தீர்மானித்தாரோ அதை மட்டுமே அவர்கள் எழுதும்படிப் பார்த்துக்கொண்டார். அதனால் வேதத்தின் வரலாற்றையும், நிகழ்ச்சிகளையும் நம்புவது போல் அதன் ஒவ்வொரு வார்த்தைக்கும் மதிப்புக் கொடுத்து அவற்றை நாம் நம்பிப் புரிந்துகொள்ள வேண்டும். வேதத்தின் போதனைகளை சரிவரப் புரிந்துகொள்ள அதன் வார்த்தைகளுக்கான சரியான அர்த்தத்தை அறிந்து கொள்வதில் அதிக கவனம் செலுத்தவேண்டும். வேதத்தில் காணப்படும் வார்த்தைகளை ஒருபோதும் அலட்சியப்படுத்தக் கூடாது; அவற்றை மனம்போனபோக்கில் புரிந்துகொள்ளக்கூடாது.*

***வேதவார்த்தைகள் வல்லமையானவை.** அதனால் தான் இயேசு கிறிஸ்து, வேதத்தில் இருந்து ஒரு வார்த்தையும் அகற்றப்படக்கூடாது; அதோடு எதையும் சேர்க்கவும் கூடாது என்று சொல்லியிருக்கிறார். (உபா 4:2, 12:32; நீதி 30:5–6; வெளி 22:18–19).*

*இன்று வேதத்தில் காணப்படும் வார்த்தைகளை மாற்றி அதன் இறையியலையே சமுதாயப்போக்குக்கேற்றபடி மாற்றும் முயற்சிகள் நடந்து வருகின்றன.*

***ஆதியாகமம் 1:27** – ‘ஆதாம்’ என்ற எபிரெய வார்த்தை மனிதன் என்று தமிழில் மொழிபெயர்க்கப்பட்டிருக்கிறது. வேதத்தில் இது மூன்று விதங்களில் பயன்படுத்தப்பட்டிருக்கிறது. 1. ஆண் என்ற கருத்தில். 2. ஆண், பெண் இருபாலருக்கும் பொதுவானவிதத்தில். 3. ஆதாமின் பெயராகப் பயன்படுத்தப்பட்டிருக்கிறது. இதில் இரண்டாவது அர்த்தத்திலேயே இது ஆதி 1:27ல் பயன்படுத்தப்பட்டிருக்கிறது. ‘ஆதாம்’ என்ற வார்த்தை எபிரெய மொழியில் இந்த இடத்தில் (הָֽאָדָ֤ם - ā·ḏām) இலக்கணப்படி ஆண்பாலிலேயே காணப்படுகிறது. ஆதாமிலிருந்தே ஏவாள் உருவாகி, மனிதகுலத் தோற்றத்துக்கு ஆரம்பமானவனாக ஆதாம் இருந்திருப்பதால் அவனுடைய பெயர் மனிதரைக் குறிக்கப் பயன்படுத்தப்பட்டிருக்கிறது. இந்த வசனத்தில் இது ‘மனுஷர்’ அல்லது ‘மனிதன்’ என்று தமிழில் இருப்பது சரியானது. அதை வேறுவிதத்தில் மாற்றக்கூடாது. பரிசுத்த ஆவியானவர் வார்த்தைகளைத் தேர்ந்தெடுத்து காரணத்தோடுதான் பயன்படுத்தியிருக்கிறார். நவீன காலத்தில், ஆண், பெண் வேறுபாட்டை அகற்றவும், ஆணுக்கு சமமாக பெண்ணுக்கு சகலவிதத்திலும் முக்கியத்துவம் அளிக்கவேண்டும் என்பதற்காகவும் இந்த வார்த்தை ஆணுக்கு முக்கியத்துவம் அளிக்கிறது என்ற எண்ணத்தில் மொழிபெயர்ப்பாளர்கள் இதை மாற்ற*

முயற்சிக்கிறார்கள். அப்படிச் செய்வது முழுத்தவறு. ஆணில் இருந்து பெண் உருவானதையும், ஆணுக்குக் கர்த்தர் சமுதாயத்தில் அளித்திருக்கும் முக்கிய பொறுப்புகளையும் அகற்ற முயலக்கூடாது.

ஆங்கிலத்தில் ஆணைக்குறிக்கப் பயன்படுத்தப்படும் வார்த்தை Man. பெண்ணைக்குறிக்க woman என்ற வார்த்தை பயன்படுத்தப்படுகிறது. ஆங்கிலத்தில் Man என்ற வார்த்தை ஆணைத்தவிர வேறு எவருக்கும் பயன்படுத்தப்படுவதில்லை. தமிழில் அதற்கு 'ஆண்' என்ற வார்த்தையை மட்டுமே நாம் பயன்படுத்துகிறோம். தமிழில் 'மனிதன்', 'மனிதர்' என்ற வார்த்தைகள் ஆணை அல்லது ஆண்களைக் குறிக்கவே பயன்படுத்தப் படுகிறது. மதுரை பல்கலைக்கழக அகராதியில்கூட ஆண்களைக் குறிக்க மட்டுமே பயன்படுத்தப்பட்டிருக்கிறது. பெண்பாலில் அது பயன்படுத்தப்படவில்லை. ஒன்றுக்கு மேற்பட்ட ஆண்களைக் குறிக்கவும் ஆதாம் என்ற பதம் பயன்படுத்தப்பட்டிருக்கிறது. மனிதர்கள் என்று தமிழில் பொதுவாகச் சொல்லும்போது ஆண், பெண் இருபாலரையும் குறிக்க அதை நாம் பயன்படுத்துகிறோம்.

வேதமொழிப்பெயர்ப்பில் இந்த வார்த்தைகளை எப்படிப் பயன்படுத்தப்பட வேண்டும் என்பதில் கவனம் செலுத்த வேண்டும்.

முதல் மனிதனைக் கர்த்தர் படைத்தபோது அவனுக்கு ஆதாம் என்று அவர் பெயரிட்டார். (ஆதி 2:7). இந்த இடத்தில் எபிரெய வார்த்தையான ஆதாம் என்பது ஆண்பாலில் காணப்படுகிறது. ஆங்கில வேதம் அதை Man என்று ஆண்பாலில் ஆணைக்குறிக்கப் பயன்படுத்தப்பட்டிருக்கிறது. தமிழில் மனுஷன் என்றிருப்பது தவறில்லை. ஆனால், அது ஆணைக்குறிக்கப் பயன்படுத்தப்பட்டிருக்கிறது என்பதை உணரவேண்டும். அது பெண்ணைக் குறிக்கப் பயன்படுத்தப்படவில்லை. ஆதியாகமம் 2ம் அதிகாரம் முழுவதும் ஆணாகிய மனிதனைக் குறிக்க ஆதாம் என்ற வார்த்தையே ஆண்பாலில் எங்கும் பயன்படுத்தப்பட்டிருக்கிறது. 2:15ல் அதே வார்த்தை மனுஷன் என்று தமிழில் ஆதாமாகிய முதல் மனிதனைக் குறிக்கப் பயன்படுத்தப்பட்டிருக்கிறது. 20:21ம் வசனத்தில் ஆணாகிய ஆதாமில் இருந்து பெண்ணாகிய ஏவாள் உருவாக்கப்பட்டாள் என்பதைக் குறிப்பதற்காக, முதல் மனிதன் ஆதாம் என்று அழைக்கப்பட்டிருக்கிறான். அதற்குப் பிறகு 23ம் வசனத்திலும், 25ம் வசனத்திலும் ஆதாம் என்றே முதல் மனிதன் அழைக்கப்பட்டிருக்கிறான். இந்தப் பகுதியில் கவனிக்கவேண்டிய இன்னொன்று, 2:24ல், இந்த அதிகாரத்தில் முதல் தடவையாக தமிழில் 'புருஷன்' என்ற வார்த்தை ஆணைக்குறிக்கப் பயன்படுத்தப்பட்டிருக்கிறது. ஆங்கிலத்தில் அது Man என்று மொழி பெயர்க்கப்பட்டிருக்கிறது. முதல் தடவையாக இந்த இடத்தில் எபிரெயத்தில் அது ஆதாம் என்ற வார்த்தையாக இல்லாமல் (הָאָדָם), அதற்குப் பதிலாக ஆணைக் குறிக்கும் இன்னுமொரு வார்த்தையான (אִישׁ'') 'ஈஷ்' என்ற எபிரெய வார்த்தை பயன்படுத்தப்பட்டிருக்கிறது. முதல் மனிதனாகிய ஆணில் இருந்து உருவானவள் என்பதால் பெண்ணாகிய ஏவாள் 'ஈஷ்ஸா' என்று அழைக்கப்பட்டாள் (2:23). எபிரெய மொழியில் 'ஈஷ்' (ஆண்பால்), 'ஈஷ்ஸா' (பெண்பால்) என்ற வார்த்தைகளும் ஒத்திருப்பதைக் கவனிக்க வேண்டும்.

*இதையெல்லாம் நான் விளக்கியிருப்பதற்குக் காரணம் எந்தளவுக்கு வார்த்தைகளைப் பரிசுத்த ஆவியானவர் கவனத்தோடு பயன்படுத்தியிருக்கிறார் என்பதையும், வெளிப்படுத்தல் வார்த்தைக்கு வார்த்தை முழுமையான தெய்வீக வெளிப்படுத்தலாக இருந்திருக்கிறது என்பதையும் நீங்கள் உணர வேண்டும் என்பதற்காகத்தான். வேதத்தில் காணப்படும் வார்த்தைகளை அலட்சியப்படுத்தாமல் கவனத்தோடு ஆராய்ந்து வேதத்தைப் படிக்கவேண்டும். வார்த்தைகளுக்கு நாம் நினைத்தபடி விளக்கமளிக்கக்கூடாது. வார்த்தைகளுக்கு முக்கியத்துவம் அளிக்காமல் மொழிபெயர்க்கப் பட்டிருக்கும் வேதமொழிப்பெயர்ப்புகளை நாம் ஒருபோதும் பயன்படுத்தக் கூடாது.*

*1 தீமோ 2:5, 8 – இந்தப் பகுதியில் 5, 8 ஆகிய வசனங்களில் ஆண், ஆண்கள் என்றே இருக்கவேண்டும். இருபாலரையும் குறிக்க இவை பயன்படுத்தப்படவில்லை. ஆணைக்குறிக்க மட்டுமே பயன்படுத்தப் பட்டிருக்கிறது.*

*ரோமர் 3:26 –* Propitiation, RSV – Expiation *கிருபாதார பலி (கிருபையை ஆதாரமாகக் கொண்ட பலி) என்று தமிழ் வேதாகமத்தில் இருப்பது சரியான மொழிபெயர்ப்பல்ல. கிரேக்க மூலத்தில் இந்த வார்த்தை தேவகோபத்தைப் போக்கிய பலி என்ற அர்த்தத்தைத் தருகின்றது.* (a sin offering, by which the wrath of the deity shall be appeased). (Hilaskomai - to propitiate). *இதே கிரேக்க வார்த்தை,* Hilasterion *கிருபாசனம்* (mercy seat) *என்று எபிரெயரில் மொழிபெயர்க்கப்பட்டிருக்கிறது. கிருபாசனத்திலேயே தேவகோபத்தைத் தணிக்க பழைய ஏற்பாட்டில் இரத்தப்பலி கொடுக்கப்பட்டது. ரோமர் 3:26ல் காணப்படும்* Propitiation *என்ற ஆங்கில வார்த்தை தமிழில் 'கோபநிவாரண பலி' என்று இருக்க வேண்டும். அதுவே சரியான மொழிபெயர்ப்பு. இந்த வார்த்தையை நான் உருவாக்கி சில வருடங்களாகவே பயன்படுத்தி வருகிறேன். நான் எழுதி வெளியிட்டிருக்கும் 'தேவகோபம்' என்ற நூலில் இதுபற்றி அதிகமாக விளக்கி எழுதியிருக்கிறேன்.*

*1 கொரி 6:9 – 'சுயபுணர்ச்சிக்காரரும்' –* Gk: Malakos - Effeminate - Literally: soft - a soft character - Dictionary - having characteristics regarded as typical of a woman. *பெண்ணுக்கரிய தன்மைகளை வெளிப்படுத்தி பெண்ணைப்போல நடந்து கொள்கிறவன். மத்தேயு 11:8 – இயேசு யோவானைக்குறித்து, அவன் அப்படிப்பட்டவனா என்று கேட்டார். 1 கொரி 6:9ல் 'சுயபுணர்ச்சிக்காரர்' சரியான மொழிபெயர்ப்பல்ல* (musturbation). *இந்த இடத்தில் சரியான வார்த்தைகள், 'சிற்றின்பக்காரரும்'* (passive), *'ஆண்புணர்ச்சிக்காரரும்'* (active).

*1 பேதுரு 3:1 –* Submisive – IBS Lanka *– பணிந்து. 'கீழ்ப்படிதல்' என்பதே சரியானது.*

*1 பேதுரு 2:18 –* Slave *– பழைய திருப்புதலில் 'வேலைக்காரர்' என்றிருப்பது சரியல்ல. அடிமைகள் என்பதே சரியானது. இன்று அடிமைமுறை சமுதாயத்தில் இல்லை என்பதற்காக வார்த்தையைக் காலத்துக்கேற்றதாக மாற்றி எழுதக்கூடாது. அடிமைகளிடம் அன்று காணப்பட்ட பயபக்தியுள்ள*

கீழ்ப்படிவு இன்று வேலைக்காரர்களிடம் காணப்பட வேண்டும். இன்னொருவருக்குக் கீழிருந்து பணிபுரியும் எவருமே வேலைக்காரர்கள்தான். நமக்கு மேலிருப்பவர்களுக்குக் கீழ்ப்படிந்து நாம் நடக்க வேண்டும்.

*1 தீமோ 1:5*

*"கற்பனையின் பொருள் என்னவெனில், சுத்தமான இருதயத்திலும் நல்மனச்சாட்சியிலும் மாயமற்ற விசுவாசத்திலும் பிறக்கும் அன்பே."*

*1 தீமோ 1:5*ல் தமிழ் வேதாகமத்தில் "கற்பனை" என்றிருக்கும் மொழிபெயர்ப்பு தவறு, இந்த இடத்தில் மொழிபெயர்ப்பாளர் எழுத்து பூர்வமாக மொழிபெயர்க்காமல் இந்தப் பகுதிபற்றித் தான் கொண்டிருக்கும் எண்ணத்திற்கேற்ப மொழிபெயர்த்திருக்கிறார். அதாவது, அவரைப் பொறுத்தவரையில் வசனத்திற்கு முன்னால் வரும் பகுதியும், பின்னால் வரும் பகுதியும் நியாயப்பிரமாணத்தைப் பற்றி விளக்குகின்றதாகத் தீர்மானித்து "கற்பனை" என்ற பதத்தை நியாயப்பிரமாணத்தின் கற்பனை என்ற அர்த்தத்தில் தந்திருக்கிறார். தமிழ் வேதாகமம் பத்துக் கட்டளையைக் குறிக்கவே எல்லா இடங்களிலும் கற்பனை என்ற வார்த்தையைப் பயன்படுத்துகிறது. ஆனால், இது கட்டளை என்றிருக்க வேண்டும். ஏனெனில், இது அப்போஸ்தலர் அவர்களுக்கு இட்ட கட்டளையைக் குறிக்கிறது.

இந்தப் பகுதியில் *1 தீமோ 1:5*ஐ எழுத்துபூர்வமாக மொழிபெயர்த்தால் 'அது இப்போது எங்கள் கட்டளையின் நோக்கம், சுத்தமான இருதயத்திலும் நல்மனச்சாட்சியிலும் மாயமற்ற விசுவாசத்திலும் பிறக்கும் அன்பே' என்றிருக்கவேண்டும். இதன் பொருள் என்னவென்றால், 'நாங்கள் கிறிஸ்துவின் போதனைகளை விளக்கி நீங்கள் பின்பற்றும்படியாகக் கொடுத்த கட்டளையின் நோக்கம் நல்ல மனச்சாட்சியிலும், உண்மையான விசுவாசத்திலும் இருந்து பிறக்கும் அன்பே' என்பது தான். அதாவது, எங்களுடைய கட்டளை உங்கள் மத்தியில் வளரவேண்டிய அன்பை இலக்காகவே கொண்டு கொடுக்கப்பட்டது என்கிறார் பவுல்.

*1 யோவான் 5:18*

*"தேவனால் பிறந்த எவனும் பாவஞ்செய்யானென்று அறிந்திருக்கிறோம்; தேவனால் பிறந்தவன் தன்னைக் காக்கிறான், பொல்லாங்கன் அவனைத் தொடான்."*

ESV - We know that everyone who has been born of God does not keep on sinning, but he who was born of God protects him, and the evil one does not touch him.

இந்த இடத்தில் இது, "தொடர்ந்து (தொடர்ச்சியாகப்) பாவஞ் செய்யானென்று" என்றிருந்திருக்க வேண்டும். தமிழிலக்கியத்தில் வினைச்சொல் இறந்தகாலம், நிகழ்காலம், எதிர்காலம் என்று மட்டுமே இருக்கின்றது. ஒரு செயல் நிகழ்காலத்தில் தொடர்ச்சியாக செய்யப்பட்டு வருவதைக் குறிக்கும் இலக்கண வார்த்தை தமிழில் இல்லை. கிரேக்க மொழியிலும், ஆங்கிலத்திலும் அது இருக்கிறது. (Present continuous tense)

**வார்த்தைக்கு வார்த்தை மூலமொழியை ஒத்து மொழிபெயர்ப்பு இருக்க வேண்டிய அவசியத்தை நான் வலியுறுத்துவதற்குக் காரணமென்ன?**

வார்த்தைகள் வசனத்தில் அநாவசியத்துக்குப் பயன்படுத்தப்படவில்லை. வார்த்தைகள் மாறினால் வசனமும், அது சொல்லவரும் உண்மையும் மாறிவிடும். வேதத்தில் வார்த்தைகள் சரியானபடி மொழிபெயர்க்கப்படாவிட்டால் வாசிக்கிறவர் அதன் மெய்ப்பொருளை அறிந்துகொள்ள முடியாது. சத்தியம் சிதைக்கப்பட்டுவிடும்.

பரிசுத்த ஆவியானவர் ஒவ்வொரு வார்த்தையையும் கவனத்தோடு பயன்படுத்தியிருப்பதால் வார்த்தைகளுக்கு முக்கியத்துவம் தரவேண்டும். தவறான மொழிபெயர்ப்பு தவறான செய்தியைத் தருவதோடு கர்த்தரின் வார்த்தை என்பதற்கான அதிகாரத்தை இழந்துவிடும்; போலிப்போதனைகளை உருவாக்கி விடும்.

அத்தோடு பிரசங்கிக்கிறவனின் செய்தியில் கர்த்தரின் அதிகாரம் இருக்காது. அதிகாரமில்லாத பிரசங்கத்தை ஆவியானவர் பயன்படுத்தமாட்டார்.

சத்தியத்தை உறுதியாகப் பின்பற்றி சத்தியத்தின் அடிப்படையில் வாழும் சபையாக இருக்க வேதத்தின் ஒவ்வொரு வார்த்தைக்கும் மதிப்புக்கொடுத்து சத்தியத்தைப் பாதுகாக்கும் சபையாக நாம் இருக்கவேண்டும்.

*1 தீமோ 3:15*

*அந்த வீடு ஜீவனுள்ள தேவனுடைய சபையாய்ச் சத்தியத்துக்குத் தூணும் ஆதாரமுமாயிருக்கிறது.*

வேதாகமத்தைப் பற்றிய விளக்கத்தைக் கொடுக்கும் 1689 விசுவாச அறிக்கை அதன் முதலாம் அதிகாரம், பத்தி 6ல் பின்வருமாறு விளக்குகிறது.

> தேவனுடைய மகிமைக்கும், மனிதனுடைய இரட்சிப்புக்கும், விசுவாசத்திற்கும், வாழ்க்கைக்கும் அவசியமான தேவனுடைய எல்லாத் திட்டங்களும் பரிசுத்த வேதாகமத்தில் திட்டவட்டமாக (வெளிப்படையாக) அல்லது உள்ளடக்கமாக (இன்றியமையா நிலையில், – Implicitly or inference or by good and necessary consequence to be deduced) காணப்படுகின்றது. இவற்றோடு எக்காலத்திலும், ஆவியின் பெயரில் எந்தவித புதிய வெளிப்பாடுகளையோ அல்லது மனித மரபுசார்ந்த வழிமுறைகளையோ சேர்க்கக்கூடாது. (இன்றியமையா நிலையில் என்ற பதம் நேரிடையான கட்டளைகளாக இல்லாமல் பொதுவான வகையில் கொடுக்கப்பட்டுள்ள தேவ போதனைகளைக் குறிப்பதாகும். இத்தகைய போதனைகளை நாம் வேதப்பகுதிகளை ஆராய்ந்து அதில் காணப்படும் தெளிவானதும், எளிதில் நிலைநாட்டக் கூடியதுமான முடிவுகளைக் கொண்டு அறிந்துகொள்ளலாம்.) ஆயினும், தேவனுடைய வார்த்தையில் வெளிப்படுத்தப்பட்டுள்ள இத்தகைய போதனைகளில் சரியான விளக்கத்தைப் பெற்றுக்கொள்ள நமக்கு தேவ ஆவியானவரின் ஆன்மீக அறிவொளி அவசியமானதாகும்.

இனித் தொடர்ந்து உள்ளடக்கமாக, மேலெழுந்தவாரியாகக் கண்களுக்கு நேரடியாகப் புலப்படாமல் காணப்படும் சத்தியங்களை எவ்வாறு அறிந்து கொள்வது என்பதற்கான மேலும் சில உதாரணங்களைக் கவனிப்போம்.

**உதாரணம் 4: கர்த்தரின் ஆராதனை**

திருச்சபை ஆராதனை மிகவும் அவசியமான வேதபோதனை. அதாவது, நம்மைப் படைத்து நமக்கு இரட்சிப்பை இலவசமாக வழங்கிய தேவன், நாம் அவருடைய மகிமைக்காகவே படைக்கப்பட்டிருப்பதாலும், அவருடைய வார்த்தைக்குக் கீழ்ப்படிந்து வாழவேண்டியவர்களாகவும் இருப்பதால் அவரை நித்தமும் ஆராதித்து வாழும்படியாகக் கட்டளையிட்டிருக்கிறார். மனிதன் படைக்கப்பட்டதன் நோக்கம் கர்த்தரைத் தன் வாழ்வில் மகிமைப்படுத்தி, அவரில் ஆனந்தித்து வாழ்வதே என்று வினாவிடைப்போதனையின் முதலாம் வினாவிடை விளக்குகிறது. வீட்டிலும், திருச்சபையிலும் அவரை ஆராதித்து வாழவேண்டியது இரட்சிப்படைந்த ஒவ்வொருவரின் பொறுப்பு. ஆராதனை என்பது சபை ஆராதனையை மட்டும் குறிக்கும் பதமல்ல; நம் வாழ்க்கையை அவருடைய மகிமைக்காக, அவருடைய வார்த்தையை அனைத்து விஷயங்களிலும் பின்பற்றி வாழ்வதே ஆராதனையான வாழ்க்கை. இந்த முறையில் வாழவே கர்த்தர் இஸ்ரவேலை உருவாக்கினார். அவர்கள் அந்த முறையில் வாழத்தவறினார்கள். கர்த்தரை நேசித்து ஆராதிக்கும் சுபாவத்தை இரட்சிப்பு நமக்குள் ஏற்படுத்தியிருக்கிறது. சபை ஆராதனை இதில் ஒரு முக்கிய பகுதி. (உதா: ஏதேனில் ஆதாம், இவ்வுலகில் இரட்சிப்படைந்தவர்கள்).

இத்தனை பெரிய அவசியமான ஆராதனைக்குரிய கட்டளைபற்றிய அத்தனை போதனைகளும் வெளிப்படையாக வேதத்தில் நமக்குத் தரப்பட்டிருக்கும் என்றுதான் நாம் எதிர்பார்ப்போம்; அதுதான் இயற்கை. ஆனால், அவை வெளிப்படையாக அல்லாமல் பரவலாக பல பகுதிகளில் வேதம் முழுவதிலும் உள்ளடக்கமாகவே தரப்பட்டிருக்கின்றன. இது நமக்கு ஆச்சரியமாக இருக்கலாம். ஆனால், அதுதான் உண்மை. அந்தவிதத்தில்தான் வேதம் நமக்கு அதைப் போதிக்கிறது. ஆகவே, உள்ளடக்கமாகத் தரப்பட்டிருக்கும் ஆராதனைபற்றிய சத்தியங்களை நாம் ஆராய்ந்து கவனத்தோடு படித்துப் பயன்படுத்தவேண்டியது நம்முடைய கீழ்ப்படிதலோடு தொடர்புடைய கடமை.

இதற்கான உதாரணங்களை இப்போது கவனிப்போம்:

கர்த்தரை நாம் ஆராதிக்க வேண்டும் என்ற உண்மையைப் படைப்பில் ஓய்வு நாளை ஏற்படுத்தியதன் மூலம் கர்த்தர் நமக்கு உணர்த்துகிறார். (ஆதி 2:1–3). ஓய்வுநாள் ஆராதனைக்காகவே ஏற்படுத்தப்பட்டது. இந்தப் பகுதி பற்றிப் பல கேள்விகள் உங்களுக்கு இருக்கலாம். முதலில், ஆதியாகமம் 1ம், 2ம் ஒரே படைப்பை விளக்குகின்றன. இவற்றில் இரண்டு படைப்புகள் இல்லை. முதலாவது ஆறாம் நாள்வரை படைப்பை விளக்கும்போது, இரண்டாவது 7ம் நாள் படைப்பை விளக்குகிறது. அதற்குப் பிறகு மறுபடியும் படைப்பில் முக்கியமான அம்சத்தை விளக்க ஆரம்பிக்கிறது. 7ம் நாள் உருவாக்கப்பட்டது மனித ஆராதனைக்காகவே. அது எத்தனை உயர்ந்தது

என்பதை உணர்த்த கர்த்தரே ஓய்வெடுக்கிறார். இந்த ஓய்வு (சபாட் – Sabbat) என்ற வார்த்தை ஆவிக்குரிய ஆராதனை ஓய்வைக் குறிக்கின்ற விசேஷமான எபிரெய வார்த்தை. இதைப் புதிய ஏற்பாட்டில் எபிரெயருக்கு எழுதியவர் பயன்படுத்தியிருக்கிறார்.

> எபிரெ 4:8–10, "யோசுவா அவர்களை இளைப்பாறுதலுக்குட் படுத்தியிருந்தால், பின்பு அவர் வேறொரு நாளைக்குறித்துச் சொல்லியிருக்கமாட்டாரே. ஆகையால், தேவனுடைய ஜனங்களுக்கு இளைப்பாறுகிற காலம் இனிவருகிறதாயிருக்கிறது. ஏனெனில், அவருடைய இளைப்பாறுதலில் பிரவேசித்தவன், தேவன் தம்முடைய கிரியைகளை முடித்து ஓய்ந்ததுபோல, தானும் தன் கிரியைகளை முடித்து ஓய்ந்திருப்பான்."

இந்த வசனங்களில் 'இளைப்பாறுதல்' என்ற வார்த்தை மூன்று தடவைகள் வந்திருக்கின்றன. அவற்றில் ஒரு வார்த்தை மட்டுமே ஆதியாகமம் 2:2ல் (ஓய்ந்திருந்தபடியால் – Sabbatismos) ஆவிக்குரிய ஓய்வுநாளைக் குறிக்கும் 'சபத்து' நாளாக இருக்கிறது. இந்த வார்த்தையையே எபிரெயரை எழுதியவர் புதிய உடன்படிக்கை காலத்திலும் அந்த நாள் தொடர்கிறது என்பதை எடுத்துக்காட்டப் பயன்படுத்தியிருக்கிறார். இத்தனை முக்கியமான இந்த 'சபத்து ஓய்வு நாளைக்' குறிக்கும் போதனை வெளிப்படையாக அல்லாமல் நாம் தர்க்கரீதியில் ஆராய்ந்து படித்துப் புரிந்துகொள்ளக் கூடியவிதத்தில் உள்ளடக்கமாகவே தரப்பட்டிருக்கிறது.

7ம் நாளை உருவாக்கி கர்த்தர் ஓய்வெடுத்தபோது அதை ஏற்கனவே படைக்கப்பட்டிருந்த ஆதாமும் ஏவாளும் கவனத்தோடு பார்த்துக் கொண்டிருந்தனர். அவர்கள் தன்னைப் பார்த்துக் கற்றுக்கொள்ளவேண்டு மென்பதற்காகவே கர்த்தர் தான் ஓய்வெடுத்ததை உதாரணமாகக் காட்டியிருக்கிறார். இது மிகவும் அற்புதமானதும், வல்லமையானதுமான வேதப்பகுதி. இது விளக்கும் ஆராதனை மற்றும் ஆராதனை நாள் பற்றிய சத்தியம் ஆழமானதும், அவசியமானதுமாகும்.

கர்த்தரை நாம் ஆராதிக்க வேண்டும் என்பதும், அதை வாரத்தின் முதல் நாளில் செய்யவேண்டும் என்ற கட்டளையும் படைப்பில் இருந்தே ஆரம்பித்துவிட்டன. படைப்பில் ஏற்படுத்தப்பட்டவை எக்காலத்திலும் தொடர வேண்டியவையாக இருக்கின்றன.

அவை:

1. உழைப்பு,
2. திருமணம்,
3. ஓய்வுநாள் ஆராதனை.

எந்த விஷயத்தை அறிந்துகொள்ளுவதற்கும் புதிய ஏற்பாட்டை மட்டும் ஆராய்வது மிகவும் தவறானது. புதிய ஏற்பாடுகூட பழைய ஏற்பாட்டைத்தான் ஆராதனை பற்றிய போதனைகளுக்கு ஆதாரமாகக் காட்டுகிறது. இந்தப் பகுதியில் உள்ளடக்கமாக விளக்கப்பட்டிருப்பதையே யாத்திராகமம் 20லும்,

உபாகமம் 5ம் அதிகாரத்திலும் மறுபடியும் வாசிக்கிறோம். இங்கே படைப்பில் ஏற்படுத்தப்பட்டது அந்தப் பகுதியில் எழுத்தில் நியாயப்பிரமாணத்தின் பகுதியாக மக்களுக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது. ஆராதனைபற்றிய கர்த்தரின் இந்த நியமத்தை இஸ்ரவேல் மக்கள் பழைய ஏற்பாட்டுக் காலத்தில் பின்பற்றி வந்திருந்தனர்.

இதைப் பற்றி ஏசாயா 58:13–14 விளக்குகிறது. இதில் ஓய்வுநாளைக்குறிக்க 'சபத்து' என்ற வார்த்தை இருமுறை வந்திருக்கிறது. அது பரிசுத்தநாள் என்றும் இருமுறை அழைக்கப்பட்டிருக்கிறது.

*ஏசாயா 58:13–14*

*என் பரிசுத்தநாளாகிய ஓய்வுநாளிலே உனக்கு இஷ்டமானதைச் செய்யாதபடி, உன் காலை விலக்கி, உன்வழிகளின்படி, நடவாமலும், உனக்கு இஷ்டமானதைச் செய்யாமலும், உன் சொந்தப்பேச்சைப் பேசாமலிருந்து, ஓய்வுநாளை மனமகிழ்ச்சியின் நாளென்றும், கர்த்தருடைய பரிசுத்த நாளை மகிமையுள்ள நாளென்றும் சொல்லி, அதை மகிமையாக எண்ணுவாயானால், அப்பொழுது கர்த்தரில் மனமகிழ்ச்சியாயிருப்பாய், பூமியின் உயர்ந்த இடங்களில் உன்னை ஏறியிருக்கும்படி பண்ணி, உன் தகப்பனாகிய யாக்கோபுடைய சுதந்தரத்தால் உன்னைப் போஷிப்பேன்; கர்த்தருடைய வாய் இதைச் சொல்லிற்று.*

இதுவரை படைப்பில் ஆராதனையைக் கவனித்தோம். அதற்கு அடுத்த கட்டமாக ஆராதனை பற்றிய போதனையை ஆதியாகமம் 4ல் கவனிக்கிறோம். இடைப்பட்ட காலத்தில் மனிதன் பாவம் செய்து மனுக்குலம் பாவத்தில் வீழ்ந்து, கர்த்தர் ஆதாமைத் தேடிக்கண்டுபிடித்து அவனுக்கு இரட்சிப்பளித்தபின் ஆதாமின் சந்ததி பற்றி ஆதியாகமம் 4ல் வாசிக்கிறோம். அதில் ஆரம்பத்திலேயே மிகமுக்கியமாக நமக்கு விளக்கப்பட்டிருப்பது, ஆதாமின் சந்ததி எவ்வாறு கர்த்தரை ஆராதனை செய்தது என்பதுதான். இதிலிருந்தே ஆராதனைக்கு கர்த்தர் அளித்திருக்கும் மிக உயர்ந்த இடத்தைக் கவனிக்காமல் இருக்கமுடியாது. (ஆதி 4:1–5).

இந்தப் பகுதியிலும் ஆராதனைபற்றிய விளக்கங்கள் உள்ளடக்கமாகவே காணப்படுகின்றன என்பதை உணரவேண்டும். இது ஆராதனை பற்றிய பகுதி என்பது அந்தப் பகுதியில் நேரடியாகக் குறிப்பிடப்படவில்லை. ஆராதனைத் தத்துவங்கள் இதில் உள்ளடக்கமாகக் காணப்படுவதால் தான் அநேகர் இந்தப் பகுதிக்குத் தவறாக விளக்கமளித்து வருகிறார்கள். உள்ளடக்கமாகக் காணப்படுவதை ஆராய்ந்து வெளியில் கொண்டு வருவதற்குத்தான் நாம் வேதவிளக்கவிதிகளைப் (Rules of Interpretation) பயன்படுத்தவேண்டியவர்களாக இருக்கிறோம்.

விதி 1: வார்த்தைகளுக்கான சரியான அர்த்தம் தெரியவேண்டும்.

விதி 2: வசனப்பகுதி அமைந்திருக்கும் சந்தர்ப்பம் தெரிய வேண்டும்.

விதி 3: வசனப்பகுதியில் உள்ளடக்கமாகக் காணப்படும் உண்மை தெரியவேண்டும்.

*விதி 4: தர்க்கத்தை பயன்படுத்தி பகுதி பற்றிச் சிந்திக்க வேண்டும்.*

*விதி 5: இதேபோன்ற ஏனைய வேதபகுதிகளோடு தொடர்புபடுத்தி இதன் போதனையை விளங்கிக்கொள்ள வேண்டும்.*

ஆதியாகமம் 4:3–5 வரையுள்ள வசனங்களில் காணப்படும் 'காணிக்கை' என்ற வார்த்தைக்கான அர்த்தத்தைக் கண்டுபிடிப்பது அவசியம். ஆராய்ந்து பார்க்கும்போது அது நாம் சபையில் கொடுக்கும் காணிக்கை அல்ல, அந்தக் காலத்தில் ஆராதனைக்காகக் கொண்டுவரப்பட்ட கர்த்தருக்கு செலுத்தப்பட்ட பலி என்பதை அறிந்துகொள்கிறோம்.

அடுத்ததாக உள்ளடக்கமாக அந்தப் பகுதியில் காணப்படும் உண்மைகள்:

1. அத்தகைய ஆராதனை செய்யப்பட்ட நாள் ஓய்வுநாள்.
2. ஓய்வுநாள் ஆராதனைபற்றி பெற்றோர் பிள்ளைகளுக்குக் கற்றுத் தந்திருந்தனர்.
3. காயீன், ஆபேல் இருவரில் ஆபேல் மட்டுமே கர்த்தரை விசுவாசித்தவனாக இருந்தான்.
4. ஆபேல் விசுவாசத்துக்குரிய கர்த்தருக்கேற்ற பலியைச் செலுத்தினான். காயீன் அவிசுவாசியாக இருந்து மனித சுபாவத்திற்கேற்ற பலியைச் செலுத்தினான்.
5. ஆபேலின் பலியைக் கர்த்தர் அங்கீகரித்தார். காயீனின் பலியைக் கர்த்தர் நிராகரித்தார்.

இந்தப் பகுதியில் உள்ளடக்கமாகக் காணப்படும் இத்தனை உண்மைகளுக்கும் வேதத்தின் ஏனைய பகுதிகளை வைத்து ஆதாரங்காட்ட முடியும். ஆராதனை பற்றிய இந்த உண்மைகள் ஏனைய பகுதிகளில் வெளிப்படையாக விளக்கப்பட்டிருக்கின்றன. ஆகவே, வெளிப்படையாக விளக்கும் பகுதிகள் இந்தப் பகுதியில் உள்ளடக்கமாகக் காணப்படுகிறவைகளைக் கண்டுகொள்ளத் துணைசெய்கின்றன.

புதிய ஏற்பாட்டுக்காலம் ஆரம்பமானபோது அப்போஸ்தலர்கள் கிறிஸ்துவின் உயிர்த்தெழுதல் நாளான வாரத்தின் முதல் நாளைக் 'கிறிஸ்தவ சபத்து நாளாக' ஆண்டவரின் நாளாக ஏற்படுத்தினர். அவர்கள் கிறிஸ்துவின் அதிகாரத்தின்படி அதைச் செய்தனர். இதுவும் வெளிப்படையாக அல்லாமல் உள்ளடக்கமாகவே விளக்கப்பட்டிருக்கிறது. ஓரிரு வசனங்களாக இருந்தாலும் அந்த வசனங்களில் தெளிவாக விளக்கப்பட்டிருக்கும் சத்தியத்தை நாம் முழுமனத்தோடும் பின்பற்ற வேண்டும்.

- இயேசு உயிர்த்தெழுந்தது வாரத்தின் முதல் நாளில்
- இயேசு, மனித குமாரனே 'சபத்தின் ஆண்டவர்' என்று குறிப்பிட்டிருக்கிறார் (மத்தேயு 12:8)

- பரிசுத்த ஆவியானவர் இயேசுவின் வாக்குத்தத்தத்தின்படி வந்தது வாரத்தின் முதல் நாளில் (பெந்தகொஸ்தே தினம் வாரத்தின் முதல் நாள்)
- அப்போஸ்தல சபைகூடி வந்து ஆராதனை செய்தது வாரத்தின் முதல் நாளில் (அப் 20:7; 1 கொரி 16:2)
- யோவானுக்கு ஆண்டவர் வெளிப்படுத்தல் விசேஷத்தைத் தந்தது வாரத்தின் முதல் நாளில் (வெளி 1:10)
- முதல் மூன்று நூற்றாண்டுகளுக்குப் பேரரசன் கொன்ஸ்டன்டைன் காலத்தில் வாரத்தின் முதல் நாளில் ஆதிசபைகூடி வந்திருந்தது.

1689 விசுவாச அறிக்கையும், வினாவிடைப்போதனையும் வாரத்தின் முதல் நாளை ஓய்வுநாளாக, கிறிஸ்தவ சபத்து நாளாகக் (ஆண்டவருடைய நாள்) கணித்து ஆராதனை செய்யும்படிப் போதிக்கின்றன. அதற்குக் காரணம் வேதத்தில் அந்த முறையில் அது விளக்கப்பட்டிருப்பதால்தான். திருச்சபை ஆரம்பித்த காலத்தில் இருந்து இதுவே வழக்கமாக இருந்து வந்திருக்கிறது.

இது தவிர புதிய உடன்படிக்கை திருச்சபை ஆராதனை பற்றிய போதனைகளை ஆராயும்போது மிகமுக்கியமானதொரு உண்மையை மனதிலிருத்திக்கொள்ள வேண்டும்.

நாம் வேதத்தை ஆராயும்போது பின்பற்ற வேண்டிய மிகமுக்கியமான விதி:

> "சபை ஆராதனை பற்றிய வேதபோதனைகளை வெளிப்படையாகத் தரப்பட்டிருக்கும் போதனைகள் மூலமும், அது பற்றி உள்ளடக்கமாகக் காணப்படும் போதனைகளின் மூலமும், வேதம் இனங் காட்டும் பொதுவான கோட்பாடுகள் மூலமும், நேர்மறையான கட்டளைகளின் மூலமும், அதுபற்றிய தெளிவான உதாரணங்கள் மூலமும், தர்க்கரீதியில் ஆராய்ந்து பெற்றுக்கொள்ளக்கூடிய இன்றியமையாநிலையில் உள்ளடக்கமாகத் தரப்பட்டிருக்கும் போதனைகள் மூலமும் பெற்றுக் கொள்ளுகிறோம்" என்கிறார் சீர்திருத்த அறிஞர் லீஜன் டங்கன்.

இந்த விதியைப் பயன்படுத்திப் பெற்றுக்கொள்ளும் உண்மைகளுக்கு மேல் வேறு எதையும் கர்த்தரின் ஆராதனையில் இணைக்கக்கூடாது.

மேலே நான் விளக்கிய விதிகளைப் பின்பற்றியே ஆராதனைக்குரிய தத்துவங்களை 1689 விசுவாச அறிக்கை தொகுத்து அதன் 22ம் அதிகாரத்தில் தந்திருக்கிறது. இந்த வேதவிதியைப் பயன்படுத்தி அவற்றைத் தொகுத்திருக்கிறோம் என்று சொல்லாமல், இந்த விதிகளின் மூலம் பெற்றுக்கொண்ட சத்தியங்களையே சீர்திருத்த பேரறிஞர்கள் அதில் விளக்கியிருக்கிறார்கள். இவற்றையே ஆராதனையில் சீர்திருத்த திருச்சபைகள்

பின்பற்றி வருகின்றன. இந்த அதிகாரம் விளக்கும் போதனையை "வரையறுக்கப்பட்ட அல்லது முறைப்படுத்தப்பட்ட ஆராதனை முறை" என்று அழைக்கிறார்கள்.

இதுவரை கவனித்திருக்கும் வேதவிதிகளின்படி பெறப்பட்டிருக்கும் ஆராதனைபற்றிய புதிய உடன்படிக்கைப் போதனைகளைக் கவனிப்போம்.

- இயேசு யோவான் 3ல் – 3:23 – ஆவியோடும், உண்மையோடும்.
- அப்போ 2:42 – அப்போஸ். உபதேசம், ஐக்கியம், அப்பம் பிட்குதல், சபை ஜெபம்.
- பவுல் ஆராதனை பற்றி எபேசி 5:18–21; கொலோ 3:16–17ம் விளக்குகிறார்
- இயேசு திருவிருந்து பற்றி (சுவிசேஷ நூல்களிலும்), பவுல் 1 கொரி 11லும் திருவிருந்து பற்றி
- இயேசு ஞானஸ்நானம் பற்றியும், அதுபற்றிய அப்போஸ்தல உதாரணங்களும்
- சபை ஜெபத்தைப்பற்றி பவுல் 1 தீமோ 2; 1 கொரி
- பிரசங்கத்தைப்பற்றிப் பவுல் பரவலாகப் பல இடங்களில்
- வேத வாசிப்பைப்பற்றி பவுல் 1 தீமோ 4:13;

மேலே காணப்படும் ஆராதனை பற்றிய புதிய ஏற்பாட்டுப் போதனைகளில் இரண்டு உதாரணங்களை இப்போது கவனிப்போம். பவுலின் நிருபங்களில் காணப்படும் ஆராதனை பற்றிய இந்த வசனங்களை ஆராய்ந்து புரிந்துகொள்ளுவது அவசியம். மேலெழுந்தவாரியாகப் பார்க்கிறபோது இவற்றில் ஆராதனை பற்றி என்ன இருக்கிறது என்று சிந்திக்கலாம். ஆனால், எபேசிய, கொலோசெய சபை விசுவாசிகளுக்கு பவுலின் வார்த்தைகள் ஆராதனை பற்றியவை என்பது தெளிவாகத் தெரிந்திருந்தன. அதனால்தான் பவுல் நான் ஆராதனையைப் பற்றித்தான் விளக்கிக்கொண்டிருக்கிறேன் என்று சொல்லாமல் அதுபற்றிய விளக்கத்தை அளிக்கிறார்.

எபேசியர் 5:18–21

துன்மார்க்கத்திற்கு ஏதுவான மதுபான வெறிகொள்ளாமல், ஆவியினால் நிறைந்து; சங்கீதங்களினாலும் கீர்த்தனைகளினாலும் ஞானப்பாட்டுகளினாலும் ஒருவருக்கொருவர் புத்திசொல்லிக் கொண்டு, உங்கள் இருதயத்தில் கர்த்தரைப் பாடிக் கீர்த்தனம்பண்ணி, நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் நாமத்தினாலே எப்பொழுதும் எல்லாவற்றிற்காகவும் பிதாவாகிய தேவனை ஸ்தோத்திரித்து, தெய்வ பயத்தோடே ஒருவருக்கொருவர் கீழ்ப்படிந்திருங்கள்.

இந்தப் பகுதியில் 19–21 வசனங்கள் எழுத்துபூர்வமான மொழிபெயர்ப்பின்படி பின்வருமாறு இருந்திருக்க வேண்டும். –

> "சங்கீதங்களினாலும் கீர்த்தனைகளினாலும் ஞானப்பாட்டுக் களினாலும் ஒருவருக்கொருவர் பேசிக்கொண்டு, உங்கள் இருதயங்களில் ஆண்டவருக்கு சங்கீதம் பாடி, நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் நாமத்தினாலே எப்பொழுதும் எல்லாவற்றிற்காகவும் பிதாவாகிய கர்த்தருக்கு நன்றி செலுத்தி, கிறிஸ்துவில் இருக்கும் தெய்வ பயத்தோடு ஒருவருக்கொருவர் கீழ்ப்படிந்திருங்கள்."

மேலே பார்த்திருக்கும் வசனங்களில் தமிழ் மொழிபெயர்ப்பில் காணப்படும் 'ஸ்தோத்திரம்' என்ற வார்த்தை 'நன்றி' என்று வந்திருக்கவேண்டும். கர்த்தருக்கு நன்றியுள்ளவர்களாக ஜெபத்தின் மூலம் நன்றி சொல்லுவதையே பவுல் இங்கு விளக்குகிறார். வடமொழி வார்த்தையான ஸ்தோத்திரம் இந்த இடத்தில் சரியான மொழிபெயர்ப்பல்ல.

> கொலோ 3:16–17
>
> கிறிஸ்துவின் வசனம் உங்களுக்குள்ளே சகல ஞானத்தோடும் பரிபூரணமாக வாசமாயிருப்பதாக; சங்கீதங்களினாலும் கீர்த்தனை களினாலும் ஞானப்பாட்டுகளினாலும் ஒருவருக்கொருவர் போதித்து புத்திசொல்லிக்கொண்டு, உங்கள் இருதயத்திலே கர்த்தரைப் பக்தியுடன் பாடி; வார்த்தையினாலாவது கிரியையினாலாவது, நீங்கள் எதைச் செய்தாலும், அதையெல்லாம் கர்த்தராகிய இயேசுவின் நாமத்தினாலே செய்து, அவர் முன்னிலையாகப் பிதாவாகிய தேவனை ஸ்தோத்திரியுங்கள்.

இந்தப் பகுதி தவறான அர்த்தத்தைத் தந்துவிடுகிறது. இது எப்படி இருந்திருக்கவேண்டுமென்றால்,

> "கிறிஸ்துவின் வசனம் உங்களுக்குள்ளே பெருமளவுக்கு (richly, abundantly) வாசமாயிருக்கட்டும், சகல ஞானத்தோடும் ஒவ்வொரு வருக்கும் போதித்தும், ஆலோசனைகளைக் கொடுத்தும்; சங்கீதத்தாலும், கீர்த்தனைகளாலும், ஞானப்பாட்டுக்களினாலும் பாடி, உங்கள் இருதயத்தில் கர்த்தருக்கு நன்றி செலுத்திக் கொண்டு"
>
> ESV - Let the word of Christ dwell in you richly, teaching and admonishing one another in all wisdom, singing psalms and hymns and spiritual songs, with thankfulness in your hearts to God.

இதுவரை ஆராதனை பற்றிய புதிய ஏற்பாட்டு விளக்கங்களைக் கவனிக்கும்போது, ஆராதனை பற்றிய அனைத்துப் போதனைகளும் ஒரே இடத்தில் காணப்படாமல், பரவலாக பல்வேறு பகுதிகளில் இயேசு கிறிஸ்துவாலும், அப்போஸ்தலர்களாலும் விளக்கப்பட்டிருப்பதைக் கவனிக்கிறோம். அந்தவிதத்தில் காணப்படும் சத்தியங்களைத் தொகுத்து

நாம் ஆராதனை பற்றிய போதனைகள் அனைத்தையும் பெற்றுக்கொள்ள வேண்டியவர்களாக இருக்கிறோம்.

இந்த முறையிலேயே வேதத்தை ஆராய்ந்து படித்து திருச்சபை ஆராதனை முறைகள் பற்றிய போதனைகளை நாம் பெற்றுக்கொள்ள வேண்டும். இந்த விஷயத்தில் மட்டுமல்லாமல் திருச்சபைக் கோட்பாடுகள் பற்றியதிலும் இதே வேதவிதிமுறையைப் பின்பற்றியே நாம் அதற்குரிய போதனைகளைப் பெற்றுக்கொள்ளுகிறோம். இம்முறையில் வேதசத்தியங்களை நாம் கண்டுகொள்ளவேண்டும் என்ற விதியை வேதமே தனக்குள் கொண்டிருந்து நமக்கு விளக்குகிறது. உதாரணத்திற்கு,

*2 தீமோ 3:16–17*

*"வேதவாக்கியங்களெல்லாம் தேவஆவியினால் அருளப்பட்டிருக்கிறது; தேவனுடைய மனுஷன் தேறினவனாகவும், எந்த நற்கிரியையுஞ் செய்யத் தகுதியுள்ளவனாகவும் இருக்கும்படி, அவைகள் உபதேசத்துக்கும், கடிந்துகொள்ளுதலுக்கும் சீர்திருத்தலுக்கும், நீதியைப் படிப்பிக்குதலுக்கும் பிரயோஜனமுள்ளவைகளாயிருக்கிறது. (அவசியமானதாக இருக்கிறது – profitable)*

பழைய திருப்புதலின் இந்த வசனங்களில் இரண்டு இலக்கணப்பிழைகள் உள்ளன. முதலாவது, 'அவைகள்' என்ற வார்த்தை. 'அவை' என்ற வார்த்தையில் ஒன்றுக்கு மேற்பட்ட என்ற அர்த்தம் காணப்படும்போது (பன்மை) 'அவைகள்' என்று எழுதுவது இலக்கணப்படித் தவறானது. இரண்டாவது, 17ம் வசனம் பன்மையில், 'பிரயோஜனமுள்ளவைகளாயிருக்கின்றன' என்று முடிந்திருக்க வேண்டும். இது பவுலின் தவறல்ல; பரிசுத்த ஆவியானவரின் தவறுமல்ல, தமிழில் வேதத்தை மொழிபெயர்த்த மனிதர்களின் தவறு.

### வேதத்தோடு எதையும் சேர்க்கக்கூடாது; அதிலிருந்து எதையும் விலக்கக்கூடாது

இதுவரை நாம் பார்த்திருக்கும் இருமுறைகளின் மூலம் பெறப்படும் உண்மைகளுக்கு மேல் வேறு எதையும் நாம் வேதத்தோடு இணைக்கக்கூடாது. ஆவியினால் பெறப்பட்ட வெளிப்படுத்தல் என்ற பெயரிலோ அல்லது சொந்த அனுபவத்தின் அடிப்படையிலோ பாரம்பரியத்தின் பெயரிலோ எதையும் வேத உண்மைகளாகக் கருதக்கூடாது. ஏற்கனவே கர்த்தர் வேதத்தில் தந்திருக்கும் அவரின் சித்தத்திற்கு மேலாக எதையும் இணைப்பது இயேசு கிறிஸ்துவுக்குச் செய்யும் துரோகம்; சத்தியப் புரட்டல். அத்தோடு வேதத்தில் இருப்பதை அகற்றவும் கூடாது.

- **புதிய வெளிப்படுத்தல்கள் இல்லை** – இதன் அடிப்படையில் இந்தக் கடைசிக் காலங்களில் கர்த்தர் தொடர்ந்து புதிய வெளிப்படுத்தல்களைத் தருவதில்லை. வெளிப்படுத்தல் முழுமையடைந்து விட்டது. அது வேதத்தில் மட்டுமே காணப்படுகிறது. அதனால் இன்று தீர்க்கதரிசனங்களுக்கோ, அந்நிய பாஷைக்கோ, தனி மனிதனால் செய்யப்படும் அற்புத

செயல்களுக்கோ இடமில்லாமலும், அவசியமில்லாமலும் போய்விட்டது. வெளிப்படுத்தலாகிய வேதசத்தியங்கள் எழுத்தில் எழுதப்பட்டு நமக்களிக்கப்படுவதற்கு முன்பு முதல் நூற்றாண்டு காலத்தில் காணப்பட்ட இவற்றைக் கர்த்தரே நிறுத்திக்கொண்டார்.

- **நடைமுறைவாத ஆபத்து** – அத்தோடு, வேதம் மட்டுமே சத்தியமாக இருப்பதாலும், அதோடு எதையும் இணைக்கக்கூடாததாலும், வேதம் தெளிவாக வெளிப்படுத்தாத, நம் வாழ்க்கை மற்றும், திருச்சபை பற்றிய எந்த முடிவும் வேத சத்தியமாகாது. அதை 'நடைமுறைவாதம்' (pragmatism) என்று அழைப்பார்கள். வேதத்தில் இல்லைதான், இருந்தாலும் இதைச் செய்வதில் என்ன தவறிருக்கிறது என்று கேட்பதும், இருக்கும் சூழ்நிலையில் இதுதான் சரியாகப்படுகிறது என்று ஒன்றைச் செய்வதையுமே 'நடைமுறைவாதம்' என்று அழைப்பார்கள். இதைச் செய்துதான் யெரொபெயாம் இஸ்ரவேலை கர்த்தருக்கு விரோதமாகப் பாவம் செய்யவைத்தான்.

இன்று கிறிஸ்தவனுக்குத் தேவைப்படுவது வேத அறிவு. அதை அளிப்பதற்காகவும், அதன் மூலம் கிறிஸ்தவர்கள் கிறிஸ்தவ வாழ்க்கையைப் பரிசுத்தமாக வாழ்வதற்கும் கர்த்தர் தன் சபையை இந்த உலகத்தில் நிறுவியிருக்கிறார். அந்த சபையின் பொறுப்பு வேதத்தை நம்பி அதைத் தெளிவாக விளக்குவதும், அதிலிருந்து சுவிசேஷத்தைப் பிரசங்கிப்பதும், அதிலிருந்து ஆத்மீக ஆலோசனைகளை வழங்கிவருவதும் மட்டுமே. சத்தியம் வெளிப்படையாக ஆத்துமாக்களிலும், போதகர்களிலும், திருச்சபை ஊழியங்களிலும், நடைமுறைகளிலும் ஆட்சி செய்யாத திருச்சபை உண்மையான சபையல்ல. அதனால்தான் ஒவ்வொரு சபையும் கர்த்தரால் அழைக்கப்பட்ட பரிசுத்தமான, கற்றறிந்த, வேதத்தில் ஆழ்ந்த அறிவும், நம்பிக்கையும் கொண்ட போதகர்களைக் (மூப்பர்கள்) கொண்டிருக்கவேண்டும்.

சாதாரண மக்களுக்கு நம் சமூகத்தில் வேத அறிவு மிகவும் குறைவாக இருக்கிறது. அவர்களுடைய கண்களைத் திறந்துவைத்து ஆத்தும வழிநடத்துகிறவன் சத்தியக் குருடனாக இருந்துவிடக்கூடாது. குருடன் குருடனுக்கு வழிகாட்ட முடியாது. அதனால், திருச்சபையில் போதனை செய்யும், பிரசங்கம் செய்யும் பணியில் இருப்பவர்கள் கிடைக்கும் அத்தனை வழிகளையும் பயன்படுத்தி வேத அறிவில் மேலான வளர்ச்சியைப் பெற்றுக்கொள்ளுவதற்கான நடவடிக்கைகளில் ஈடுபடவேண்டும்.

வேத அறிவு இல்லாமல் வேதத்தின் ஆளுகைக்குக் கீழ் நாம் வரமுடியாது. வேதம் நம்மையும், திருச்சபையையும் ஆளுகிறது என்பதற்கான சாட்சி வேதத்தை மட்டும் பின்பற்றி வாழும் நம்வாழ்க்கையும், திருச்சபைப் பணிகளுந்தான்.

- பரிசுத்த வேதாகமத்தை எவரும் புரிந்துகொள்ள அவர்கள் இரட்சிப்புக்குரிய தெளிவை ஆவியானவரிடம் இருந்து அடைந்திருக்கவேண்டும். ஆவியானவரே வார்த்தையில் நமக்குத் தெளிவைத் தருகிறவர். எபேசிய கிறிஸ்தவர்களுக்கு அது

*கிடைக்க பவுல் ஜெபித்திருக்கிறார். வேத அறிவைத் தந்து நம்மை வழிநடத்துகிறவர் பரிசுத்த ஆவியானவரே. வேதத்தை ஆராய்ந்து படிக்கும்போது தாழ்மையோடு அவரில் தங்கியிருந்து அதைச் செய்யவேண்டும்.*

- *சந்தர்ப்பசூழலோடு தொடர்புடைய சில விஷயங்களில் (சபை ஆராதனை, சபை அரசமைப்பு ஆகியவை சம்பந்தப்பட்ட) நாம் கிறிஸ்தவ விவேகத்தையும், இயற்கையையும், கர்த்தர் உலகம் செயல்பட ஏற்படுத்தியிருக்கும் பொதுவான விதிகளையும் பின்பற்றி முடிவுகளை எடுக்க வேண்டும்.*

*1689 விசுவாச அறிக்கை 6ம் அதிகாரத்தில் இதுபற்றி விளக்குவதைக் கவனியுங்கள்:*

> *'அதேவேளை, கடவுள் வழிபாடு மற்றும் சபை ஆட்சியமைப்பு தொடர்புடைய – பொதுவாக எல்லா மனித நடவடிக்கைகளிலும், அமைப்புக்களிலும் கவனிக்கக் கூடியதுமான – சில சந்தர்ப்பங்களை நாம் இயற்கையின் விதிகள், கிறிஸ்தவ விவேகம், வேதாகமத்தின் பொதுவான விதிகள் ஆகியவற்றைப் பயன்படுத்தித் தீர்மானித்து அவற்றை எக்காலத்திலும் கடைபிடிக்க வேண்டும். (உதாரணமாக வாரத்தின் முதல் நாளில் வழிபாட்டிற்காக சபைகூடிவர வேண்டும் என்றுதான் வேதம் சொல்கிறதே தவிர, எந்தெந்த நேரங்களில் கூடிவரவேண்டுமென்று கூறவில்லை. நாம் இயற்கையின் விதிகளைப் பயன்படுத்தி எல்லோருக்கும் வசதியான நேரத்தில் கூடிவர வேண்டும்.)'*

*வேதத்தில் எல்லாப் பகுதிகளும், அதன் போதனைகளும் சமமானவிதத்தில், இலகுவாகப் புரிந்துகொள்ளக்கூடியவிதத்தில் காணப்படுவதில்லை. மாற்கு சுவிசேஷத்தை வாசித்து விளங்கிக்கொள்ளக்கூடிய விதத்தில் இலகுவாக வெளிப்படுத்தல் விசேஷம் காணப்படவில்லை. இருந்தபோதும் விசுவாசத்திற்குரிய போதனைகள் எல்லோரும் புரிந்து கொள்ளக்கூடிய விதத்தில் காணப்படுகின்றன. கல்லாதவர்களும், கற்றறிந்தவர்களும் சாதாரண வேதவிதிகளைப் பயன்படுத்தி அவற்றைப் போதுமான விதத்தில் அறிந்து கொள்ள முடியும்.*

**எல்லா விஷயங்களிலும் வேதம் மட்டுமே இறுதித் தீர்ப்பு வழங்கும் அதிகாரம் கொண்டது.**

*வேதம் எப்போதும் ஒரே அர்த்தத்தைக் கொண்டிருக்கும். ஒரு வசனத்தில் இருந்து நாம் பல உண்மைகளைப் பெறமுடியாது. ஆதிசபைக்காலத்தில் ஒரிகன் போன்றோர் அதை நம்பினார்கள். அவர் ஒருவசனத்தில் நான்கு அர்த்தங்களைப் பார்த்தார். அது முழுத் தவறு. ஆவியானவர் வசனத்தில் ஒரு அர்த்தத்தையே தருகிறார். பல அர்த்தங்களை வசனத்தில் பார்த்து விளக்குவது அதிகப்பிரசங்கித்தனம் என்கிறார் மார்டின் லூத்தர். ஒரு வேதப்பகுதியில் இருந்து பல பயன்பாடுகளைப் பெறலாம்; பல அர்த்தங்கள் அதற்கு இருக்காது. அதனால் ஒரு வசனம் விளங்காதபோது பொறுமையாக*

அது பற்றி வேதத்தில் ஏனைய இடங்களில் காணப்படும் தெளிவான வசனங்களைப் பயன்படுத்தி தெளிவைப் பெற்றுக்கொள்ள வேண்டும்.

சமயம் சம்பந்தப்பட்ட அனைத்து முரண்பாடுகளையும், சபைக் கவுன்சில் முடிவுகள், பழங்காலத்து எழுத்துக்கள், மனிதர்களின் போதனைகள், தனிப்பட்ட நபர்களின் கருத்துக்கள் அனைத்தையும் ஆவியானவரால் நமக்கு அருளப்பட்டிருக்கும் வேதத்தை வைத்து ஆராய்ந்தே உண்மையைத் தீர்மானிக்கவேண்டும். வேதம் சொல்லுவது மட்டுமே எந்த விஷயத்திலும் இறுதி முடிவாக இருக்கவேண்டும்.

எந்தப் பிரச்சனையாக இருந்தாலும் அவற்றைத் தீர்க்க திருச்சபை வேதத்தின் முடிவையே நம்பியிருக்கவேண்டும்.

### சில இறுதி வார்த்தைகள்

பரிசுத்த வேதாகமம் ஆரம்பத்தில் எபிரெய, கிரேக்க மொழிகளிலேயே எழுதப்பட்டிருந்தது. அவற்றையே நாம் மூலமொழிகள் என்று அழைக்கிறோம். அந்த மூலமொழிகளில் கர்த்தர் வேதத்தை அருளிச் செய்தபோது அவற்றில் எந்தத் தவறுக்கும் இடமிருக்கவில்லை. அந்த மூலப்பிரதிகளில் இருந்தே வேதம் உலகின் பல மொழிகளிலும் மொழிபெயர்க்கப்பட்டிருக் கிறது. மூலமொழிகளில் எந்தத் தவறும் இல்லாதிருந்தபோதும் மொழிபெயர்ப்புகள் மூலத்தைப்போலத் தவறற்றவையாக இருந்துவிடாது. அதனால் முடிந்தவரை மூலத்தை ஒத்து மொழிபெயர்க்கப்பட்டிருக்கும் எழுத்துபூர்வமான (Literal translation) மொழிபெயர்ப்புகளையே பயன்படுத்தவேண்டும். ஆங்கிலத்தில் அத்தகைய நல்ல நம்பத்தகுந்த மொழி பெயர்ப்புகள் இருக்கின்றன. தமிழ் மொழிபெயர்ப்புகள் அந்தளவுக்குத் தரமானவையாக இல்லை. அதைச் செய்யத் தகுதியுள்ளவர்கள் அரிதாக உள்ளனர்.

பழைய திருத்துதலில் (OV) இறையியல் தவறுகள் இல்லை. ஆனால், அது துல்லியமாக மூலத்தைத் தழுவி மொழிபெயர்க்கப்படவில்லை. அதன் தமிழும் மிகப்பழமையானது; இந்நூற்றாண்டு மக்களுக்குப் புரியாதது. இந்திய வேதாகம இலக்கியம் (Indian Bible Literature) ஒரு புதிய மொழிபெயர்ப்பைக் கொண்டுவந்தது. அதைப் பயன்படுத்தலாம். ஸ்ரீலங்கா சர்வதேச வேதாகம சங்க (International Bible Society) மொழிபெயர்ப்பில் பல பிரச்சனைகள் உள்ளன. இருந்தாலும் தமிழ் நடை நன்றாகவே இருக்கிறது.

பிரசங்கம் செய்கிறவர்கள் ஒரளவுக்குக் கற்றறிந்தவர்களாக, மொழி வளமுள்ளவர்களாக, பிரசங்கம் தயாரிக்கக்கூடிய ஆற்றல் கொண்டவர்களாக, வசனத்தில் உழைப்பவர்களாக இருக்கும்படி எதிர்பார்க்கப்படுவதால் அவர்கள் நல்ல தரமான ஆங்கில மொழிபெயர்ப்பைப் பயன்படுத்தி தமிழ் வேதத்தில் வசனங்கள் சரியாக இருக்கின்றனவா என்று தீர்மானித்துக் கொள்ள வேண்டிய அவசியம் இருக்கிறது.

இதுவரை பரிசுத்த வேதாகமம் பற்றிய இந்த ஆக்கத்தில் நாம் கற்றிருக்கும் அனைத்தையும் சுருக்கமாகக் கீழே தந்திருக்கிறேன்.

## பரிசுத்த வேதாகமம்

1. *வேதம் கர்த்தரின் சித்தத்தின் மொத்த வடிவம்; அதற்கு மேல் மனிதன் அறிந்து கொள்ள அவசியமான அவருடைய சித்தம் எதுவும் இல்லை. கர்த்தர் வேதத்தின் மூலமாக மட்டுமே தன் சித்தத்தை வெளிப்படுத்துகிறார்; அவர் நேரடியாக இன்று பேசுவதில்லை. இன்னொரு வகையில் சொல்லப்போனால் கர்த்தரின் வெளிப்படுத்தல் நிறைவு பெற்றுவிட்டது.*

2. *வேதத்தின் மூலம் மட்டுமே மனிதன் நேரடியாகக் கடவுளைப் பற்றிய அறிவை அடைந்து, இரட்சிப்பை அடைய முடியும்.*

3. *வேதம், விசேஷமான முறையில் கர்த்தர் பரிசுத்த ஆவியினால் ஊதி அருளப்பட்ட தெய்வீகத் தன்மைகொண்ட வெளிப்படுத்தல். அதுபோன்று வேறெந்த எழுத்தோ, இலக்கியமோ உலகத்தில் இல்லை.*

4. *எபிரெய, கிரேக்க மொழியில் எழுத்தில் கர்த்தர் தந்து பாதுகாக்கப் பட்டிருக்கும் வேதம் தன்னில் எந்தத் தவறுகளையும் கொண்டிருக்க வில்லை; ஆனால், மொழிபெயர்ப்புகள் குறை பாடுள்ளவையாக இருந்துவிடலாம்.*

5. *கர்த்தரின் வேதத்தோடு எதையும் சேர்க்கக்கூடாது; அதிலிருந்து எதையும் நீக்கவும் கூடாது. வேதத்தில் காணப்படுபவை மட்டுமே வேதம்; கர்த்தரின் வார்த்தை.*

6. *தெய்வீக வெளிப்படுத்தலாகிய வேதம் கர்த்தருக்குரிய சர்வஅதிகாரம் கொண்டது. வேதம் தன் அதிகாரத்தைத் தனக்குள்ளேயே கொண்டிருக்கிறது; அது தன் அதிகாரத்தை நிரூபிக்க படைக்கப்பட்ட எதிலும் தங்கியிருக்கவில்லை.*

7. *வேதம் அழியாது. அதாவது அதில் கொடுக்கப்பட்டிருப்பவைகள் நிச்சயம் நிறைவேறும்; அது வீண்போகாது.*

8. *கர்த்தரின் சித்தத்தின் மொத்த வடிவமாகிய வேதம், அவருடைய சித்தத்தை இரண்டு விதங்களில் வெளிப்படுத்துகின்றது:*

   *அ. வெளிப்படையாகவும்,*

   *ஆ. உள்ளடக்கமாகவும் கொண்டிருந்து வெளிப்படுத்துகின்றது.*

   *இரகசியமானவற்றைக் கர்த்தர் நமக்கு வெளிப்படுத்தவில்லை. அவர் மட்டுமே அதை அறிந்திருக்கிறார்.*

9. *வேதம் எப்போதும் ஒரு அர்த்தத்தை மட்டுமே கொண்டிருக்கும்* (One sense); *அதற்குப் பல அர்த்தங்கள் கிடையாது. ஒரு வேதபோதனையில் பல பயன்பாடுகள் இருக்கலாம், ஆனால், வேதத்தின் அர்த்தம் எப்போதும் ஒன்று மட்டுமே.*

10. *கிறிஸ்தவ வாழ்க்கை, திருச்சபை மற்றும் அனைத்து விஷயங்களிலும் வேதத்தின் தீர்ப்பு மட்டுமே இறுதியானது.*

# மகிமையுள்ள திருச்சபை

திருச்சபைக் கோட்பாடுகள் வேதத்தில் கர்த்தர் தந்திருக்கும் அதிமுக்கியமான அடிப்படைப் போதனைகளில் ஒன்று. அநேகர் அதுபற்றிக் கர்த்தர் வேதத்தில் விளக்கமாக எதையும் நமக்குத் தரவில்லை என்று எண்ணி வருகிறார்கள். அதற்குக் காரணம் அப்போதனைகளை எவ்வாறு வேதத்தில் இருந்து பெற்றுக்கொள்வது என்பது அவர்களுக்குத் தெரியவில்லை. கர்த்தர் இந்த உலகத்தில் சபையைக் கட்டியெழுப்புவதற்காகத் தன்னுடைய ஒரே மகனை அனுப்பியிருக்கும்போது, அது பற்றி வேதத்தில் விளக்காமலா இருந்துவிடப் போகிறார்? எந்தளவுக்குத் திருச்சபை முக்கியமானது, அவசியமானது, மகிமையானது என்பதை இந்த ஆக்கத்தில் விளக்கப்போகிறேன்.

வரலாற்றில் கர்த்தரின் மீட்பின் திட்டத்தில், அவரால் தெரிந்து கொள்ளப்பட்டவர்கள் கிறிஸ்துவில் இரட்சிப்பை அடைவதே இலக்காகக் காணப்படுகிறது. பிதாவும், குமாரனும் இணைந்து உலகம் படைக்கப்படுவதற்கு முன்பாக ஏற்படுத்திய திட்டத்திற்குப் பெயரே மீட்பின் திட்டம். இதை எபேசியர் 1 போன்ற வேதப்பகுதிகளில் வாசிக்கிறோம். இந்தத் திட்டத்தின்படி கர்த்தர் தன்னால் தெரிந்துகொள்ளப்பட்ட மக்களை வரலாற்றில் கிறிஸ்துவின் மூலம் இரட்சிக்கிறார். கிறிஸ்துவால் நிறைவேற்றப்பட்ட பாவிகளுக்கான மீட்பு எவ்வாறு படைக்கப்பட்ட உலகத்தில் நிறைவேற்றப்படுகிறது என்பதை ‘மீட்பின் வரலாறு’ விளக்குகிறது. மீட்பின் வரலாறு படைப்பிலிருந்து ஆரம்பித்து கிறிஸ்துவின் இரண்டாம் வருகையில் முடிவடைகிறது.

இரட்சிக்கப்பட்ட கர்த்தருடைய மக்கள் புதிய உடன்படிக்கையின் காலத்தில் சபையாகக் கூடிவந்து, அவரை ஆராதித்து, அவருக்காக வாழ்ந்து சுவிசேஷப்பணியில் ஈடுபடுவது மீட்பின் திட்டத்தின் ஒரு பகுதி. இந்தச் சபையைத் தன்னோடு அழைத்துச் செல்லவே கிறிஸ்துவின் இரண்டாவது வருகை அமைந்திருக்கும். இன்னொருவிதத்தில் சொல்லப்போனால், கர்த்தரின் மீட்பின் உச்சகட்டத் திட்டமாக அமைந்திருந்து அவருக்கு மகிமையளிப்பது திருச்சபையே. கர்த்தரின் வார்த்தையில் இதைக் கவனிக்கத் தவறினால் நாம் திருச்சபை பற்றிய விஷயங்களில் கவனக்குறைவாக இருந்தோ அல்லது அதை அலட்சியப்படுத்தியோ வருவோம். அநேகர் இன்று திருச்சபைக்கு அளிக்கவேண்டிய மரியாதையை அளிக்கத் தவறிச் செயல்பட்டும், வாழ்ந்தும் வருவதற்கு இதுவே காரணம். கர்த்தரின் திட்டத்தில் திருச்சபை இத்தகைய உயரிய இடத்தைக் கொண்டிருப்பதால்தான் வேதம் அதுபற்றித் தேவையான அளவுக்கு அசைக்க முடியாத போதனைகளைத் தந்திருக்கின்றது. அத்தோடு, மீட்பின் வரலாற்றில் திருச்சபையின் மகிமையைப் பார்க்கத் தவறுகிறவர்களே அநாவசியமாக வரலாற்றில் இஸ்ரவேலுக்கு முதன்மை கொடுத்து கால வரலாற்றுக் கோட்பாட்டிற்கு இரையாகிப் போனவர்களாக இருக்கிறார்கள்.

## மீட்பின் திட்டம்

திருச்சபை பற்றிய கோட்பாடுகளில் தவறான கருத்துக்களைக் கொண்ட அனேகர் நம் மத்தியில் காணப்படுகிறார்கள். அது வேத அறியாமையின் காரணமாகவும், வேதத்தை அலட்சியப்படுத்துவதன் காரணமாகவும் நிகழ்ந்திருக்கிறது. திருச்சபைகள்கூட வேதபூர்வமான முறையில் இயங்கி வராமல் போவதற்குக் காரணம் இந்த வேத அறியாமையே.

## திருச்சபை பற்றிய மிகத் தவறான ஆபத்தான போதனைகள்

*1. முதலாவது தவறான போதனை பின்வருமாறு விளக்குகிறது – "வேதம் திருச்சபை பற்றி எந்தத் தெளிவான, துல்லியமான போதனைகளையும் அளிக்காமல், பொதுவான போதனைகளை மட்டும் தந்து அதுபற்றிய விஷயங்களில் நம்முடைய நாட்டுச் சூழ்நிலையின்படியும், சந்தர்ப்பத்திற்கேற்றபடியும் நடந்துகொள்ள அனுமதிக்கிறது." வேதத்தில் நல்லறிவு இல்லாதபடியால் இப்படிப்பட்ட சிந்தனைகளைப் பலர் தங்களில் வளர்த்துக் கொண்டிருக்கிறார்கள். மீட்பின் வரலாற்றில் அதிமுக்கியமான திருச்சபையைப் பற்றிக் கர்த்தர் தெளிவான போதனைகளை எப்படித் தராமல் இருந்திருப்பார். வேதத்தைக் கவனத்தோடு ஆராய்ந்து படித்தால் திருச்சபைபற்றிய தெளிவான அத்தனை போதனைகளையும் வேதம் பல்வேறு பகுதிகளில் விளக்கமாகத் தந்திருப்பதைக் கண்டுகொள்ளலாம். சீர்திருத்தவாதியான ஜோன் கல்வின் எழுதிய மிகப்பெரிய நூலான "கிறிஸ்தவப் போதனைகளின் தொகுப்பில்" அரைவாசிக்கு மேல் திருச்சபையைப் பற்றித்தான் விளக்கியிருக்கிறார். வேதத்தில் அந்தளவுக்குத் திருச்சபை பற்றிய போதனைகள் இல்லாமலிருந்திருந்தால் கல்வின் திருச்சபை பற்றிப் பாதி நூலுக்கு மேல் விளக்கமளித்திருக்க முடியாது. 1689 விசுவாச அறிக்கையில் நீளமான அதிகாரம் (26) திருச்சபை பற்றியது. திருச்சபை பற்றிப் பொதுவான விளக்கங்களை மட்டுமே வேதம் தந்திருந்தால் பாப்திஸ்து பெரியவர்கள் இத்தனைப் பெரிய அதிகாரத்தை எழுதியிருப்பார்களா?*

*2. இரண்டாவது தவறான போதனை, "பழைய ஏற்பாட்டில் விசுவாசிகளையோ, திருச்சபையையோ காணமுடியாது. புதிய ஏற்பாட்டுக்காலத்தில் மட்டுமே அதைக் காணலாம். திருச்சபை ஒரு தற்காலிக இடைக்கால அமைப்பு மட்டுமே. கர்த்தரின் இறுதி நோக்கம் இரண்டாம் வருகைக்குப் பின் மறுபடியும் இஸ்ரவேலை ஆசீர்வாதமுள்ள நாடாக்குவது மட்டுமே" என்கிறது.*

*இந்தத் தவறான விளக்கத்தைக் காலவரையறைக் கோட்பாட்டினால் (டிஸ்பென்சேஷனலிசம்) பாதிக்கப்பட்டிருக்கும் சகோதரத்துவ சபைகளும், கெரிஸ்மெட்டிக் சபைகளும், ஏன், சுவிசேஷ சபைகளில் பெரும்பாலானவையும் நம்பி வருகின்றன. இது மிகவும் தவறான இறையியல் விளக்கம். இவர்கள் புதிய ஏற்பாட்டுக்கு மட்டுமே முக்கியத்துவம் அளித்து பழைய ஏற்பாட்டை உதாசீனம் செய்கிறார்கள். சீர்திருத்த பாப்திஸ்துகள் இறையியல் ரீதியில் இவர்களோடு முரண்படுகிறார்கள். இவர்கள் இஸ்ரவேலுக்கு மட்டுமே முக்கியத்துவமளித்து அந்நாடு கிறிஸ்துவின் இரண்டாம் வருகைக்குப் பின்*

வளமான நாடாக கிறிஸ்துவின் நேரடி ஆட்சியின் கீழ் ஆயிரம் வருடங்கள் இந்த உலகில் காணப்படும் என்று தவறாக நம்பி வருகிறார்கள். இஸ்ரவேல் ஒரு வல்லமையான தேசமாக இருந்து வந்த காலம் முடிந்துவிட்டது என்பதை இவர்கள் உணரவில்லை. இன்று கர்த்தர் சலக ஜாதிகளுக்குள்ளும் பாவிகளை இரட்சித்து திருச்சபையைக் கட்டிவருகிறாரே தவிர யூதர்களுக்கு மட்டுமான விசேஷ திட்டங்களைக் கொண்டிருந்து செயல்படவில்லை.

பழைய ஏற்பாட்டில் ஆதாமும், ஏவாளும் மனந்திரும்பி இரட்சிப்பை அடைந்தார்கள். அவர்களுக்கு கர்த்தர் போதித்த சுவிசேஷமே ஆதி 3:15ல் காணப்படுகிறது. அவர்கள் விசுவாசிகள் என்பதை ஆதி 4ம் அதிகாரத்தின் ஆரம்ப வசனங்களே விளக்குகின்றன. ஆதாமின் பின் வந்த விசுவாச சந்ததிகளாகவே ஆபேலும், சேத்தும், நோவாவும், ஆபிரகாமும் காணப்படுகிறார்கள். புதிய ஏற்பாட்டில் அமைக்கப்பட்ட விதத்தில் தெய்வீக நிறுவனமாக திருச்சபை பழைய ஏற்பாட்டில் முழுமையாகக் காணப்படாவிட்டாலும் திருச்சபையின் ஆரம்ப அடிப்படைக் குறியீடுகளைக் கொண்டதாக சபை இஸ்ரவேலர்களுக்கு மத்தியில் காணப்பட்டது. பழைய ஏற்பாட்டில் விசுவாசிகளின் தொகை மிகக் குறைவானது. அவர்கள் பெருந்தொகையில் காணப்படவில்லை. நாம் இந்தக் காலத்தில் எந்தவிதத்தில் சுவிசேஷத்தைக் கேட்டுப் பரிசுத்த ஆவியால் இரட்சிப்பை அடைகிறோமோ அதேபோல் பழைய ஏற்பாட்டில் ஆதாமும், ஆபிரகாமும் இரட்சிப்பை அடைந்திருந்தார்கள். அவர்களே பழைய ஏற்பாட்டுத் திருச்சபை அங்கத்தவர்கள். ரோமர் 4ல் பவுல் ஆபிரகாமின் விசுவாசத்தைக் கொண்டிருந்தவர்களே விசுவாசிகள் என்று விளக்கியிருக்கிறார். விசுவாசிகளைக் கொண்டமைந்ததே திருச்சபை. ஆபிரகாம் விசுவாசத்தின் மூலம் நீதிமானாகி கிறிஸ்துவின் சரீரமாகிய சபையில் இணைக்கப்பட்டிருந்தார். அந்தச் சரீரம், புதிய ஏற்பாட்டுக்காலத்தில் இருப்பதுபோல நிறுவனமாக, யூதர்களையும், புறஜாதியினரையும் தனக்குள் கொண்டிருந்து, தனக்கே உரிய திருநியமங்களைக் கொண்டிருந்து வெளிப்படையாகக் கூடிவரவில்லை. அதற்குக் காரணம் புதிய உடன்படிக்கையின் காலம் ஆரம்பிக்காததுதான். அத்தோடு, புதிய ஏற்பாட்டுக்கால அமைப்பை அன்று திருச்சபை கொண்டிராமல் இருந்தபோதும், அது அடியோடு பழைய ஏற்பாட்டில் இல்லை என்று வாதிடுவது மிகவும் தவறான இறையியல் கண்ணோட்டம்.

3. மூன்றாவது தவறான போதனை, “திருச்சபை எங்கும் ஆவிக்குரியதாக செயலிழந்து காணப்படுவதால், வேறுவிதங்களில் அதன் பணிகளைச் செய்வதில் எந்தத் தவறும் இல்லை” (நிறுவனங்கள் மூலம், தனி ஊழியங்களின் மூலம்) என்பது.

இதை நடைமுறைவாதக் (பிரெக்மெட்டிஷம்) கணிப்பு என்பார்கள். நடைமுறைவாதம் வேதத்திற்கு மதிப்பளிக்காது; எது சாதகமாகவும், வசதியாகவும் இருக்கிறதோ அதையே நடைமுறைவாதம் வேதமாகப் பின்பற்றும். வேதம் நடைமுறைவாதப் போக்கிற்கு எதிரி. நடைமுறைவாதப் போக்குள்ளவர்கள், உலகத்தில் சில திருச்சபைகள் சத்தியத்தை விட்டுப் பிரிந்து தவறாக நடந்து ஆவிக்குரிய இலக்கணங்களைக் கொண்டிராமல்

*இருப்பதைப் பார்த்து திருச்சபை அமைத்துச் செயல்படுவதைக் கர்த்தர் நிறுத்திக்கொண்டுவிட்டார் என்று கூறுவது முட்டாள்த்தனமான வாதம். உலகத்தில் திருச்சபைகள் எல்லாமே எப்போதும் பரிசுத்தமாகவும், பூரணமாகவும் இருந்துவிடாது (வெளி 1–3 அதிகாரங்கள்). நல்ல விசுவாசமான சபைகள் மத்தியில் போலிகளும் இருந்துவிடலாம். அதை வரலாறே விளக்குகிறது. அதற்காகக் கர்த்தரின் திட்டம் நிறைவேறவில்லை என்று தவறாகக் கணிப்பிடக்கூடாது. இயேசு கிறிஸ்துவின் இரண்டாம் வருகைவரை இந்த உலகத்தில் திருச்சபை தொடர்ந்திருந்து வளர்ந்து வரும். அதனால் கர்த்தர் திருச்சபை செய்யும்படிக் கொடுக்கப்பட்டிருக்கும் பணிகளை வேறுவிதங்களில் கிறிஸ்தவ நிறுவனங்களை அமைத்தும், தனி ஊழியங்கள் என்ற பெயரிலும், கமிட்டிகளை அமைத்தும் செய்து வருவது கர்த்தரையும், அவருடைய வேதத்தையும் கலங்கப்படுத்தி உதாசீனம் செய்கின்ற பாவமான செயல்கள். திருச்சபைக்கு மதிப்புக்கொடுத்து அதிலிருந்து வாழ்ந்து, அது செய்யவேண்டிய செயல்களில் ஈடுபாடு காட்டாமலிருப்பவர்கள் கிறிஸ்தவத்தைப் பற்றிய மிகத் தவறான எண்ணங்களைக் கொண்டிருந்து வருகிறார்கள்.*

*கிறிஸ்துவினால் அனுப்பப்பட்டு சுவிசேஷத்தைச் சொல்லித் திருச்சபைகளை அமைத்த அப்போஸ்தலர்கள் திருச்சபைப் பணியைத் தவிர வேறு பணிகளில் ஒருபோதும் ஈடுபட்டிருக்கவில்லை. அவர்களுடைய வாழ்க்கையில் திருச்சபையைத் தவிர வேறெதற்கும் அவர்கள் இடங்கொடுக்கவில்லை. முதல் நூற்றாண்டு அப்போஸ்தலப் பாணியைப் பின்பற்றாமல் மனம்போன போக்கில் சுயநல நோக்கத்தோடு திருச்சபைக்கு மதிப்புக்கொடுக்காமல் இருந்துவரும் ஊழியங்களே தமிழினத்தில் இன்று அதிகம். வேதத்தின் பூரண அதிகாரத்தையும், அதன் போதுமான தன்மையையும் விசுவாசிப்பவர்கள் திருச்சபையைத் தவிர வேறெதற்கும் தங்களுடைய சிந்தனையிலும், வாழ்க்கையிலும் இடங்கொடுக்க மாட்டார்கள்.*

**கர்த்தரின் மீட்பின் வரலாற்றில் திருச்சபை**

*இந்த வரைபடம் ஆதாம் இரட்சிப்படைந்தபின் அவனுடைய சந்ததியில் விசுவாச சந்ததி எவ்வாறு வளர்ந்து பழைய ஏற்பாட்டுக்காலத்தில் இஸ்ரவேல் தேசத்து மக்கள் மத்தியில் விசுவாசிகள் குறைந்தளவில் இருந்து வந்திருக்கின்றனர் என்பதையும், ஆபிரகாமின் உடன்படிக்கையின் வாக்குத்தத்தங்கள் புதிய உடன்படிக்கை காலத்தில் திருச்சபையிலேயே நிறைவேறுகின்றன என்பதையும் காட்டுகின்றது. இஸ்ரவேலுக்கு வெளியில் ஒருசிலரே புறஜாதிகள் மத்தியில் கர்த்தரை விசுவாசித்திருக்கின்றனர். புதிய ஏற்பாட்டுத் திருச்சபைக்கான வித்து பழைய ஏற்பாட்டிலேயே போடப்பட்டுவிட்டது என்பதை நாம் உணரவேண்டும். அத்தோடு புதிய உடன்படிக்கை காலத் திருச்சபையே கர்த்தரின் திட்டத்தில் உன்னதமான இடத்தைக் கொண்டிருந்து இயேசு கிறிஸ்துவின் இரண்டாம் வருகையை எதிர்நோக்கி நிற்கின்றது. சர்வவல்லவரான கிறிஸ்து தன்னுடைய சபையைக் கட்டுவதில் மும்முரமாக இன்று ஈடுபட்டுவருகிறார். அதை அவர் எவ்வாறு கண்ணும் கருத்துமாகப் போஷித்துப் பாதுகாத்து வருகிறார் என்பதை எபேசியர் 5:22–32 விளக்குகிறது.*

## திருச்சபையின் மகிமையை விளக்கும் வேதப்பகுதிகள்

*கிறிஸ்துவின் மீட்பின் திட்டத்தில் திருச்சபைக்குக் கொடுக்கப்பட்டிருக்கும் உயரிய இடத்தை விளக்கும் சில வேதப்பகுதிகளைக் கவனிப்போம். இந்த வசனங்கள் அசைக்கமுடியாதபடி கர்த்தரின் திட்டத்தில் உயரிய இடத்தைத் திருச்சபை கொண்டிருக்கிறது என்பதை விளக்குகின்றன. கர்த்தர் திருச்சபைக்கு அத்தனை மதிப்பளித்து அதன் மூலமாகவே தன்னுடைய திட்டங்களை இந்த உலகில் நிறைவேற்றி வருகிறாரென்றால், எந்தளவுக்கு நாம் கர்த்தரின் வார்த்தைக்கு மதிப்பளித்து திருச்சபைக்கு விசுவாசமாக இருந்து வாழ்ந்து பணியாற்றவேண்டும் என்பதை உணரவேண்டும்.*

*திருச்சபை பற்றிய அசைக்கமுடியாத ஆழ்ந்த நம்பிக்கை இல்லாதவர்கள் திருச்சபைக்கு மதிப்பளிக்க மாட்டார்கள். இந்த ஆழ்ந்த வேதநம்பிக்கை நம்மில் ஊறிப்போயிருந்தால்தான் கர்த்தரின் வார்த்தையின்படி திருச்சபை அமைத்து, திருச்சபையில் வாழ்ந்து, திருச்சபைக்கு மதிப்பளித்துப் பணியாற்றுவோம். அத்தகைய நம்பிக்கையை நாம் கவனிக்கப்போகிற வசனங்கள் உங்களில் ஏற்படுத்தும் என்று நம்புகிறேன்.*

### முதலாவது வசனப்பகுதி

*எபேசி 1:15–23 வரையுள்ள வசனங்களில் பவுல் எபேசியத் திருச்சபைக் கிறிஸ்தவர்களுக்காக ஜெபிக்கிறார். அந்த ஜெபத்தில் என்னென்ன காரியங்களுக்காக ஜெபிக்கிறேன் என்பதையும் அவர் விளக்குகிறார். இறுதியில், 20–23ம் வசனங்களில் திருச்சபையின் மகிமையைப் பற்றி அவர் மிக அருமையாக விளக்கியிருக்கிறார்.*

> *ஆனபடியினாலே, கர்த்தராகிய இயேசுவின்மேலுள்ள உங்கள் விசுவாசத்தையும், பரிசுத்தவான்களெல்லார்மேலுள்ள உங்கள் அன்பையுங்குறித்து நான் கேள்விப்பட்டு, இடைவிடாமல் உங்களுக்காக ஸ்தோத்திரம்பண்ணி, என் ஜெபங்களில் உங்களை நினைத்து, நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் தேவனும் மகிமையின் பிதாவுமானவர் தம்மை நீங்கள் அறிந்துகொள்வதற்கான ஞானத்தையும் தெளிவையும் அளிக்கிற ஆவியை உங்களுக்குத் தந்தருளவேண்டுமென்றும், தாம் நம்மை அழைத்ததினாலே நமக்கு உண்டாயிருக்கிற நம்பிக்கை இன்னதென்றும், பரிசுத்தவான்களிடத்தில் தமக்கு உண்டாயிருக்கிற சுதந்தரத்தினுடைய மகிமையின் ஐசுவரியம் இன்னதென்றும்; தாம் கிறிஸ்துவை மரித்தோரிலிருந்து எழுப்பி, அவரிடத்தில் நடப்பித்த தமது பலத்த சத்துவத்தின் வல்லமைப்படியே விசுவாசிக்கிறவர்களாகிய நம்மிடத்திலே காண்பிக்கும் தம்முடைய வல்லமையின் மகா மேன்மையான மகத்துவம் இன்னதென்றும், நீங்கள் அறியும்படிக்கு, அவர் உங்களுக்குப் பிரகாசமுள்ள மனக்கண்களைக் கொடுக்கவேண்டுமென்றும் வேண்டிக் கொள்ளுகிறேன். எல்லாத் துரைத்தனத்துக்கும், அதிகாரத்துக்கும், வல்லமைக்கும், கர்த்தத்துவத்துக்கும், இம்மையில்மாத்திரமல்ல மறுமையிலும் பேர்பெற்றிருக்கும் எல்லா நாமத்துக்கும் மேலாய்*

*அவர் உயர்ந்திருக்கத்தக்கதாக, அவரை உன்னதங்களில் தம்முடைய வலதுபாரிசத்தில் உட்காரும்படி செய்து, எல்லாவற்றையும் அவருடைய பாதங்களுக்குக் கீழ்ப்படுத்தி, எல்லாவற்றையும் எல்லாவற்றாலும் நிரப்புகிறவருடைய நிறைவாகிய சரீரமான சபைக்கு அவரை எல்லாவற்றிற்கும் மேலான தலையாகத் தந்தருளினார்.*

*முதலில், இந்த வசனங்கள் கிரேக்க மொழியில் நீளமான ஒரே வசனமாகக் காணப்படுகிறது. ஆங்கில வேதாகமத்திலும் இவை ஒரே வசனமாக அமைந்திருந்தாலும் அவசியம் காரணமாக சில நிறுத்தக் குறியீடுகளைப் பயன்படுத்தி முற்றுப்புள்ளியை 23ம் வசனத்தின் இறுதியில் தந்திருக்கிறார்கள். அதனால் இந்த வசனங்களில் பவுல் எதை விளக்குகிறார் என்பதைக் கவனமாக ஆராய்ந்து விளங்கிக்கொள்ளுவது நம்முடைய கடமையாக இருக்கிறது.*

*தமிழ் வேதாகமத்தில் இந்த வசனங்களை இரண்டாகப் பிரித்திருக்கிறார்கள். 15–19 வையும் ஒரு வசனமாகவும், 20–23 வரையும் ஒரு வசனமாகவும் இந்த வசனங்கள் பிரிக்கப்பட்டிருக்கின்றன. இதன் காரணமாக இரண்டிற்கும் இடையில் காணப்படும் தொடர்பு அறுந்துவிடுகிறது. சாதாரணமாக இவற்றை வாசிக்கிறவர்கள் இவை இரண்டிற்குமான தொடர்பை உணரத் தவறிவிடுகிற ஆபத்து இதனால் ஏற்பட்டிருக்கிறது. இவற்றைப் பிரித்துவிடுவதால் மூலமொழியில் பரிசுத்த ஆவியானவர் விளக்கியிருக்கும் சத்தியத்தின் முழுமையை நாம் விளங்கிக்கொள்ள முடியாமல் போய்விடுகிறது. அதனால் போதிக்கின்ற பணியில் ஈடுபட்டிருப்பவர்கள் ஆங்கில வேதாகமத்தைப் பயன்படுத்தி தமிழில் வசனங்களை விளங்கிக்கொள்ள வேண்டிய அவசியம் இருக்கிறது.*

## *இது எப்படி இருந்திருக்க வேண்டும்?*

*கர்த்தராகிய இயேசுவின்மேலுள்ள உங்கள் விசுவாசத்தையும், பரிசுத்தவான்களெல்லார் மேலுமுள்ள உங்கள் அன்பையுங்குறித்து நான் கேள்விப்பட்டு, இடைவிடாமல் உங்களுக்காக ஸ்தோத்திரம்பண்ணி, என் ஜெபங்களில் உங்களை நினைத்து, நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் தேவனும் மகிமையின் பிதாவுமானவர் தம்மை நீங்கள் அறிந்துகொள்வதற்கான ஞானத்தையும் தெளிவையும் அளிக்கிற ஆவியை உங்களுக்குத் தந்தருளவேண்டுமென்றும், தாம் நம்மை அழைத்ததினாலே நமக்கு உண்டாயிருக்கிற நம்பிக்கை இன்னதென்றும், பரிசுத்தவான்களிடத்தில் தமக்கு உண்டாயிருக்கிற சுதந்தரத்தினுடைய மகிமையின் ஐசுவரியம் இன்னதென்றும்; தாம் கிறிஸ்துவை மரித்தோரிலிருந்து எழுப்பி, அவரிடத்தில் நடப்பித்த தமது பலத்த சத்துவத்தின் வல்லமைப்படியே விசுவாசிக்கிறவர்களாகிய நம்மிடத்திலே காண்பிக்கும் தம்முடைய வல்லமையின் மகா மேன்மையான மகத்துவம் இன்னதென்றும், அதே வல்லமையால் எல்லாத் துரைத்தனத்துக்கும், அதிகாரத்துக்கும், வல்லமைக்கும், கர்த்தத்துவத்துக்கும், இம்மையில்மாத்திரமல்ல மறுமையிலும்*

> *பேர்பெற்றிருக்கும் எல்லா நாமத்துக்கும் மேலாய் அவர் உயர்ந்திருக்கத் தக்கதாக, அவரை உன்னதங்களில் தம்முடைய வலதுபாரிசத்தில் உட்காரும்படி செய்து, எல்லாவற்றையும் அவருடைய பாதங்களுக்குக் கீழ்ப்படுத்தி, எல்லாவற்றையும் எல்லாவற்றாலும் நிரப்புகிறவருடைய நிறைவாகிய சரீரமான சபைக்கு அவரை எல்லாவற்றிற்கும் மேலான தலையாகத் தந்தருளினார் என்பதையும் நீங்கள் அறியும்படிக்கு, அவர் உங்களுக்குப் பிரகாசமுள்ள மனக்கண்களைக் கொடுக்கவேண்டுமென்று வேண்டிக்கொள்ளுகிறேன்.*

*இரண்டாவதாக, இதில் 23ம் வசனம், "சரீரமான சபைக்காக அவரை எல்லாவற்றிற்கும் மேலான தலையாகத் தந்தருளினார்" என்று இலக்கண பூர்வமாக, எழுத்துபூர்வமாக மொழிபெயர்க்கப்பட்டிருக்க வேண்டும்.*

*தமிழில் "சபைக்கு . . தலையாகத் தந்தருளினார்" என்றிருக்கிறது. இதன் மெய்யான அர்த்தம் "சபைக்காக, சபையின் நன்மைக்காக" இத்தனையையும் கர்த்தர் செய்திருக்கிறார் என்பதுதான். அதைக் குறிக்கும் "*Te*" என்ற அழுத்தமான வார்த்தை கிரேக்கமொழியில் "சபை" என்ற வார்த்தைக்கு முன்னால் காணப்படுகிறது. தமிழில் அதை நேரடியாக மொழிபெயர்ப்பது கடினம். தமிழிலக்கணத்தின்படி ஒரு வார்த்தையின் முக்கியத்துவத்தை குறிக்கும் அடையாளங்கள் அந்த வார்த்தையின் இறுதியில் தொக்கி நின்று காணப்படும். கிரேக்க மொழியிலும் ஆங்கிலத்திலும் அவை வார்த்தையின் முன்னால் காணப்படும். இத்தகைய அடையாளக்குறிகளுக்கு நாம் எப்போதுமே மதிப்புக்கொடுத்து வார்த்தைகளின் அர்த்தத்தை விளங்கிக்கொள்ள வேண்டும். ஆங்கில மொழிபெயர்ப்புகளில் இந்த வார்த்தையை "*To*" அல்லது "*for*" என்று மொழி பெயர்த்திருக்கிறார்கள். தமிழில் அதை "சபைக்காக" என்று மொழி பெயர்க்கும்போது அந்த வார்த்தையின் இறுதியில் "ஆக" என்று அது தொக்கி நிற்கிறது. இந்தளவுக்கு இதை விளக்குவது ஏன் அவசியமாகிறது?*

### *எபேசி 1:20–23 தரும் போதனை:*

*நமக்கு இரட்சிப்பளிப்பதில் வல்லமையாக செயல்பட்ட பரிசுத்த ஆவியானவரின் அதே மாபெரும் வல்லமை கிறிஸ்துவை மரணத்தில் இருந்து உயிர்த்தெழச் செய்து, சகலவிதமான அதிகாரங்களுக்கும், வல்லமைக்கும், கர்த்தத்துவத்துக்கும், இம்மையிலும் மறுமையிலும் காணப்படும் எல்லா நாமங்களுக்கும் மேலாய் கிறிஸ்து உயர்ந்திருக்கும்படி, அவருடைய பாதங்களுக்குக் கீழாகச் சகலத்தையும் கொண்டுவந்து, அவரை உன்னதங்களில் பிதாவாகிய கர்த்தரின் வலதுபக்கத்தில் அமரும் விதத்தில் அனைத்திற்கும் மேலாக அவரை உயர்த்தி, எல்லாவற்றையும் எல்லாவற்றாலும் நிரப்புகிற நிறைவாகிய சரீரமான சபைக்காக அனைத்திற்கும் மேலான தலையாக அவரைத் தந்தருளினார்.*

*இதிலிருந்து, அனைத்திற்கும் மேலான, அனைத்தையும் தன் கீழ் கொண்டிருக்கும் சர்வஅதிகாரமுள்ள தலையாக கிறிஸ்து உயர்த்தப்பட்டிருப்பது திருச்சபைக்காக, திருச்சபையின் பயனை நோக்கமாகக் கொண்டுதான் என்ற உயரிய போதனையை இந்தப் பகுதியில் இருந்து பெற்றுக்கொள்ளுகிறோம்.*

*திருச்சபை எந்தவிதத்தில் மகிமையுள்ள, உயர்வான தன்மையைக் கொண்டதாக இந்த உலகத்தில் இருக்கிறது என்பது இதிலிருந்து தெரிகிறது. அதனால் திருச்சபையைவிட உயர்வான எந்த நிறுவனத்தையும் இந்த உலகத்தில் கர்த்தர் அமைக்கவில்லை. இந்த உலகில் காணப்படும் சகல அதிகாரங்களிலும் மேலான அதிகாரம் கொண்ட தெய்வீக நிறுவனமாகக் காணப்படுவது திருச்சபை மட்டுமே.*

***எபேசியர் 3:9–11***

*எபேசியர் 3ம் அதிகாரத்தில், 1ல் இருந்து 8 வரையுள்ள வசனங்களில் பவுல், புதிய உடன்படிக்கையின் காலம் வரை மறைத்துவைக்கப்பட்டிருந்த ஒரு சத்தியத்தை விளக்குகிறார். 5ம் வசனத்தில் பவுல் அதை "இரகசியம்" என்று அழைக்கிறார். அதைக் கண்டுபிடிக்க முடியாத இரகசியம் என்று நினைத்துவிடக்கூடாது. இங்கே அது வேறு அர்த்தத்தில் பயன்படுத்தப்பட்டிருக்கிறது. அந்த இரகசியம் என்ன என்பதை 3ம் வசனத்தில் பவுல் விளக்குகிறார். அந்த இரகசியம் முற்காலங்களில் (பழைய ஏற்பாட்டுக் காலங்களில்) மறைவாக வைக்கபட்டிருந்தது புதிய உடன்படிக்கைக் காலத்தில் பரிசுத்த ஆவியானவரால் அப்போஸ்தலர்களுக்கும், தீர்க்கதரிசிகளுக்கும் வெளிப்படுத்தப்பட்டிருக்கிறது என்று 6ம் வசனத்தில் விளக்குகிறார் பவுல். இதுவரை மறைவாக இருந்து வந்திருக்கிற சுவிசேஷத்திற்கு தான் கட்டுப்பட்டிருப்பதாகவும், அதை அறிவிக்கும் கிருபை இப்போது தனக்கு அளிக்கப்பட்டிருக்கிறதாகவும் பவுல் 7ம், 8ம் வசனங்களில் விளக்குகிறார்.*

> *தேவன் நம்முடைய கர்த்தராகிய கிறிஸ்து இயேசுவுக்குள் கொண்டிருந்த அநாதி தீர்மானத்தின்படியே, உன்னதங்களிலுள்ள துரைத்தனங் களுக்கும் அதிகாரங்களுக்கும் அவருடைய அநந்த ஞானமானது சபையின்மூலமாய் இப்பொழுது தெரியவரும்பொருட்டாக, இயேசுகிறிஸ்துவைக்கொண்டு எல்லாவற்றையும் சிருஷ்டித்த தேவனுக்குள்ளே ஆதிகாலங்கள் முதல் மறைந்திருந்த இரகசியத் தினுடைய ஐக்கியம் இன்னதென்று, எல்லாருக்கும் வெளிப்படையாகக் காண்பிக்கிறதற்கு, இந்தக்கிருபை எனக்கு அளிக்கப்பட்டிருக்கிறது.*

*மேலே நாம் கவனித்திருக்கும் வசனங்களில் பவுல் மிகவும் முக்கியமானதொரு உண்மையை விளக்குகிறார். கிறிஸ்துவினால் அழைக்கப் பட்டிருந்தபோதும் பவுல், அப்போஸ்தலர்களுக்கு எதிராகவும், ஏற்கனவே அமைக்கப்பட்டிருந்த எருசலேம் திருச்சபைக்கு எதிராகவும் ஒருபோதும் நடந்து கொள்ளவில்லை. சபைக்குக் கட்டுப்பட்டு, சபையினால் அனுப்பப்பட்டு, சபை மூலமாகவே தனக்குக் கொடுக்கப்பட்டிருக்கும் சுவிசேஷத்தை அறிவிக்கும் கிருபையைத் தான் பயன்படுத்தியதாக பவுல் இப்பகுதியில் அறிவிக்கிறார்.*

***இந்தப்பகுதியில் இருந்து பின்வரும் பாடங்களை நாம் கற்றுக்கொள்கிறோம்:***

*1. பவுல் அறிவித்ததுபோல் இந்தப் புதிய உடன்படிக்கையின் காலத்தில் சுவிசேஷம் அறிவிக்கப்பட வேண்டும்.*

*2. சுவிசேஷத்தை அறிவிக்கும் பொறுப்பு கிறிஸ்துவால் புதிய உடன்படிக்கையின் காலத்தில் திருச்சபைக்கு மட்டுமே கொடுக்கப் பட்டிருக்கிறது. (எபே 3:10)*

*3. சுவிசேஷம் அறிவிக்கப்பட வேண்டுமானால் அதற்கு இந்த உலகில் திருச்சபை முறையாக அமைக்கப்பட வேண்டியது அவசியம். (எபே 3:10)*

*4. திருச்சபையின் மூலமாக அல்லாமல் சுவிசேஷப் பணியை வேறுவிதங்களில் செய்யமுயல்வது வேதம் காட்டும் வழியல்ல.*

*5. இந்தப் பகுதியில் இருந்து தேவனின் மீட்பின் திட்டத்தில் திருச்சபை வகிக்கும் உன்னத இடத்தை அறியமுடிகிறது.*

*திருச்சபையின் மகத்துவத்தை உணர்த்தும் மூன்றாவது வேத உதாரணத்தைக் கவனிப்போம்.*

**மத்தேயு 16:17–19**

> *இயேசு அவனை நோக்கி: யோனாவின் குமாரனாகிய சீமோனே, நீ பாக்கியவான்; மாம்சமும் இரத்தமும் இதை உனக்கு வெளிப்படுத்தவில்லை, பரலோகத்திலிருக்கிற என் பிதா இதை உனக்கு வெளிப்படுத்தினார். மேலும் நான் உனக்குச் சொல்லுகிறேன், நீ பேதுருவாயிருக்கிறாய், இந்தக்கல்லின் மேல் என் சபையைக் கட்டுவேன்; பாதாளத்தின் வாசல்கள் அதை மேற்கொள்வதில்லை. பரலோகராஜ்யத்தின் திறவுகோல்களை நான் உனக்குத் தருவேன்; பூலோகத்திலே நீ கட்டுகிறது எதுவோ அது பரலோகத்திலும் கட்டப்பட்டிருக்கும், பூலோகத்திலே நீ கட்டவிழ்ப்பது எதுவோ அது பரலோகத்திலும் கட்டவிழ்க்கப்பட்டிருக்கும் என்றார்.*

**இந்தப் பகுதி தரும் விளக்கம்:**

*1. இயேசு கிறிஸ்து தன்னை உண்மையாக, ஆணித்தரமாக விசுவாசித்து இரட்சிப்படைந்திருக்கிறவர்களை வைத்துத் தன்னுடைய திருச்சபையை இந்த உலகத்தில் அமைக்கிறார்.*

*2. தெய்வீக நிறுவனமாகிய திருச்சபையை அழிக்கும் வல்லமை எந்த சக்திக்கும் கிடையாது. (பாதாளத்தின் வாசல்கள் –* Gates of hell*) என்பது நரகத்தைக் குறிக்கின்றது).*

*3. இயேசு கிறிஸ்து திருச்சபைக்கு மட்டுமே பரலோகத்தின் திறவுகோல்களைத் தந்திருக்கிறார். (பரலோகத்துக்குரிய ஆவிக்குரிய செயல்களைச் செய்யும் அதிகாரம் – பிரசங்கிப்பது; விசுவாசிகளை அடையாளங்கண்டு சபையில் இணைப்பது; ஒழுங்குநடவடிக்கை மூலம் சபைப் பரிசுத்தத்தைப் பாதுகாப்பது.)*

*4. விசுவாசிகளை சபையில் இணைப்பதற்குப் பெயர் "கட்டுவது." சபையில் இருந்து ஒருவரை ஒழுங்குநடவடிக்கை மூலம் சபை நீக்கம் செய்வதற்குப் பெயர் "கட்டவிழ்ப்பது."*

*5. பரலோகத்தின் திறவுகோல்களை இந்த உலகத்தில் ஆவிக்குரியவிதத்தில் பரிசுத்தத்தையும், ஞானத்தையும், போதகத்தகுதிகளையும் கொண்டிருக்கும் மூப்பர்களைக் கொண்டு முறையாக அமைக்கப்பட்டு இயங்கிவரும் சபை மட்டுமே பயன்படுத்தக்கூடிய ஆவிக்குரிய அதிகாரத்தைக் கொண்டிருக்கிறது.*

***மத்தேயு 18:15–20***

> *உன் சகோதரன் உனக்கு விரோதமாகக் குற்றஞ்செய்தால், அவனிடத்தில் நீ போய், நீயும் அவனும் தனித்திருக்கையில், அவன் குற்றத்தை அவனுக்கு உணர்த்து; அவன் உனக்குச் செவிகொடுத்தால், உன் சகோதரனை ஆதாயப்படுத்திக்கொண்டாய். அவன் செவிகொடாமற்போனால், இரண்டு மூன்று சாட்சிகளுடைய வாக்கினாலே சங்கதிகளெல்லாம் நிலைவரப்படும்படி, இரண்டொருவரை உன்னுடனே கூட்டிக்கொண்டு போ. அவர்களுக்கும் அவன் செவிகொடாமற் போனால், அதைச் சபைக்குத் தெரியப்படுத்து; சபைக்கும் செவிகொடா திருப்பானானால், அவன் உனக்கு அஞ்ஞானியைப்போலவும் ஆயக்காரனைப்போலவும் இருப்பானாக. பூலோகத்திலே நீங்கள் எவைகளைக் கட்டுவீர்களோ அவைகள் பரலோகத்திலும் கட்டப்பட்டிருக்கும்; பூலோகத்திலே நீங்கள் எவைகளைக் கட்டவிழ்ப்பீர்களோ அவைகள் பரலோகத்திலும் கட்டவிழ்க்கப்படும் என்று மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன். அல்லாமலும், உங்களில் இரண்டுபேர் தாங்கள் வேண்டிக்கொள்ளப்போகிற எந்தக் காரியத்தைக் குறித்தாகிலும் பூமியிலே ஒருமனப்பட்டிருந்தால், பரலோகத்திலிருக்கிற என் பிதாவினால் அது அவர்களுக்கு உண்டாகும் என்று உங்களுக்குச் சொல்லுகிறேன். ஏனெனில், இரண்டு பேராவது மூன்று பேராவது என் நாமத்தினாலே எங்கே கூடியிருக் கிறார்களோ, அங்கே அவர்கள் நடுவிலே இருக்கிறேன் என்றார்.*

***இந்தப் பகுதியில் நாம் கவனிப்பதென்ன?***

*1. இரண்டு பேருக்கிடையில் திருச்சபையில் பிரச்சனை. ஒருவர் மற்றவருக்கெதிராகப் பாவம் செய்திருக்கிறார்.*

*2. பிரச்சனையை அவர்களால் தீர்த்துக்கொள்ள இயலாததால் நம்பிக்கைக்குரிய மூன்றாவது நபர் (நம்பிக்கைக்குரிய மூப்பர்களில் ஒருவர்) அதைத் தீர்க்க அழைக்கப்படுகிறார்.*

*3. இதுவரை எடுக்கப்பட்டிருக்கும் திருத்த நடவடிக்கை இதில் சம்பந்தப்பட்டிருப்பவர்களைத் தவிர வேறு எவருக்கும் தெரியவரவில்லை.*

*4. இத்தனையைச் செய்தும் பாவம் செய்தவன் திருந்தாததால், அந்த விஷயம் அங்கத்தவர்கள் கூடிய சபைக்கு அறிவிக்கப்பட்டு இறுதி ஒழுங்கு நடவடிக்கை எடுக்கப்படுகிறது.*

*5. பாவம் செய்தவன் திருந்த மறுப்பதால் அவன் அவிசுவாசியைப் போலக் கருதப்பட்டு சபையால் சபை நீக்கத்துக்குள்ளாகுகிறான்.*

*6. சபை நீக்கம் செய்யப்பட்டவனோடு ஆவிக்குரிய ஐக்கியத்தை சபை அங்கத்தவர்கள் வைத்துக்கொள்ளக்கூடாது. அவனைக் காண நேர்ந்தால் திருந்தும்படி மட்டுமே கேட்டுக்கொள்ள வேண்டும்.*

**இந்தப் பகுதி தரும் விளக்கமென்ன?**

*1. சபை ஒழுங்கு நடவடிக்கையைப் பற்றித்தான் விளக்குகிறேன் என்று சொல்லாமல் இயேசு கிறிஸ்து அதுபற்றிய விளக்கத்தை அளிக்கிறார். சபையைப் பற்றித்தான் விளக்குகிறார் என்பதற்கான அடையாள ஆதாரங்கள் பகுதியில் தெளிவாகக் காணப்படுகின்றன. 17ம் வசனத்தில் இரண்டு முறை "சபை" என்ற வார்த்தையைக் காண்கிறோம்.*

*2. சபை ஒழுங்கு நடவடிக்கைக்கான முறையைப் படிப்படியாக இந்தப் பகுதியில் இயேசு விளக்குகிறார். சபை ஒழுங்கு நடவடிக்கை எப்போதும் சபை மக்கள் அறியும்படியாகப் பகிரங்கமாகப் பாவம் செய்கிறவர்களைத் திருத்தவே கொண்டுவரப்படவேண்டும்.*

*3. ஆவிக்குரியதாக வேதத்துக்குக் கட்டுப்பட்டு திருச்சபை எடுக்கும் ஒழுங்கு நடவடிக்கையை இயேசு கிறிஸ்து ஏற்று அங்கீகரிக்கிறார். அதைச் செய்யும்படி அவரே சபைக்கு அதிகாரத்தைக் கொடுத்திருக்கிறார் 18ம் வசனத்தில் காணப்படும் கட்டுவது, கட்டவிழ்ப்பது ஆகிய பதங்கள் திருச்சபையில் அங்கத்தவர்களை இணைப்பதையும், நீக்குவதையும் குறிக்கும் பதங்களாகும்.*

*4. 20ம் வசனம் திருச்சபை கூடிவரும்போது அதன் மத்தியில் கிறிஸ்து பிரசன்னமாயிருக்கிறார் என்பதை உணர்த்துகிறது. இந்த வசனம் திருச்சபையைக் குறிக்கும் இன்னொரு வார்த்தைப் பிரயோகம்.*

*5. முறையாக எவர்மீதும் ஒழுங்கு நடவடிக்கை எடுக்க முறையான திருச்சபை அமைப்பு காணப்பட வேண்டும். – முறையான சபை அங்கத்துவ முறை, மூப்பர்கள், சபை சட்டவிதிகள், விசுவாச அறிக்கை.*

*6. இந்தப் பகுதி திருச்சபை எந்தளவுக்கு இவ்வுலக ஆவிக்குரிய பணிகளுக்கு அவசியமானதாக, தவிர்க்கமுடியாததாக இருக்கிறது என்பதை உணர்த்துகிறது.*

*இதுவரை நாம் கவனித்திருக்கும் பகுதிகளில் இருந்து திருச்சபைக்கு எந்தளவுக்கு வேதம் முக்கியத்துவமளிக்கிறது என்பதையும், மீட்பின் வரலாற்றில் திருச்சபையின் உன்னதமான, மகிமையான இடத்தையும் காணமுடிகின்றது. கிறிஸ்துவும் அவருடைய சபையுமே புதிய ஏற்பாட்டில் முதன்மையான இடத்தைக் கொண்டிருக்கிறார்கள். அந்த இடத்தை நாம் இந்த 21ம் நூற்றாண்டில் வேறு எவருக்குமோ அல்லது வேறு எதற்குமோ கொடுப்பது கிறிஸ்துவை நிந்திப்பதற்கு இணையான செயலாகும். கிறிஸ்து மீதும், அவருடைய திருச்சபை மீதும் ஆழ்ந்த அன்புள்ளவர்கள் திருச்சபைக்குக் கொடுக்கவேண்டிய இடத்தை வேறு எதற்கும் தாரைவார்த்துவிட மாட்டார்கள். நீங்கள் எப்படி?*

# வேதம் முரண்படாது

அதிகாரம் 5 – A.W. பின்க்

வேதத்தின் எந்தவொரு பகுதிக்கும், நாம் தரும் விளக்கம் வேதத்தின் ஏனைய பகுதிகளிலுள்ள போதனைகளோடு கண்டிப்பாக ஒத்திசைந்திருக்க வேண்டும் என்று நாம் கூறுவது (Analogy of Faith), சாதாரணமானதாகவும், யதார்த்தமானதாகவும் தோன்றலாம், ஆனால் வேதத்தை விளக்குவதில் திறமையற்றவர்கள் மட்டுமல்லாமல், அனுபவம் வாய்ந்த அநேகர்கூட இதைப் பின்பற்றாமல் விட்டுவிடுகிறார்கள் என்பது ஆச்சரியமாகவே இருக்கிறது. இந்த வேத விளக்க அடிப்படைக் கொள்கையைப் பொருட்படுத்தாமல், வேதத்தின் மெய்த்தன்மையை மறைத்து, தெளிவற்ற வேதப்பகுதிகளுக்கு, புதிதாகவோ அல்லது தூக்கிவாரப்போடச் செய்யும் ஏதாவதொரு விளக்கத்தையோ தர முயலுகிறவர்கள், வேதத்தை விளக்குவதில் நிச்சயமாகத் தவறிழைப்பார்கள். இது குறித்து ஜோன் ஓவன், "வேதத்தை விளக்குவதில் இந்த விதியை நாம் பொறுப்புடன் கையாளுகிறபோது, கடவுளுடைய வார்த்தையைச் சிதைக்கும் பாவகரமான ஆபத்து நமக்கு ஏற்படாது. ஒவ்வொரு வேதப்பகுதிக்கும் சரியான அர்த்தத்தை நாம் கண்டடைய முடியாமற்போனாலும், அதைச் சிதைக்கும் பாவத்திலிருந்து தப்பித்துக்கொள்ளலாம்" என்று சொல்லியிருக்கிறார். உதாரணமாக, "தேவன் ஆவியாயிருக்கிறார்" (யோவான் 4:24), அவர் உருவமற்றவரும் கண்ணுக்குப் புலப்படாதவராகவும் இருக்கிறார் என்பதை நாம் அறிந்துகொள்ளும்போது, அவருக்குக் கண், காது, கை, கால் இருப்பது போல் குறிப்பிடப்பட்டிருக்கிற வேதப்பகுதிகளை நாம் தவறாக விளங்கிக்கொள்ளுவதைத் தவிர்த்துக் கொள்ளலாம். மற்றொரு உதாரணம், அவரிடத்தில் "யாதொரு மாறுதலும் யாதொரு வேற்றுமையின் நிழலுமில்லை" (யாக்கோபு 1:17) என்பதை நாம் அறிந்திருக்கிறபோது, அவர் "மனஸ்தாபப்படுகிறார்" என்று குறிப்பிடப்பட்டிருக்கிற பகுதி, நம்முடைய புரிதலுக்காகவே அப்படிச் சொல்லப்பட்டிருக்கிறது என்பதைத் தெரிந்துகொள்ளுகிறோம். சங்கீதம் 19:11 மற்றும் வேறு சில வசனங்களில், விசுவாசிகளுடைய இரக்கமான நற்செயல்களுக்கு வெகுமதி அளிக்கப்படும் என்றும், வேறுசில பகுதிகள் அத்தகைய ஈடு செய்தல் அவர்களுடைய நற்செயலுக்கான வெகுமதியாக இல்லாமல், கடவுளுடைய கிருபையினால்தான் வழங்கப்படுகிறது என்றும் சொல்லுகிறபோது, மேலே பார்த்த விதத்தில்தான் நாம் இப்பகுதிகளை அணுக வேண்டும்.

வேதத்தில் தெளிவாகவும் ஏனைய பகுதிகளோடு ஒத்துப்போகிறதாகவும் இருக்கிற பகுதிகளுக்கு, முரண்படுகிற விதத்தில் எந்தவொரு வேதப்பகுதிக்கும் விளக்கம் தரக் கூடாது. அத்தோடு, அப்படியான முரண்படுகிற விளக்கங்களை நம்முடைய விசுவாசத்திற்கும், கீழ்ப்படிவுக்குமான விதிமுறையாக கருதக் கூடாது. தேவ ஆவியின் முழுமையான சித்தத்தை அறிவதற்கு, வேதத்தை

விளக்குகிறவர்கள் வேதத்தின் அனைத்துப் பகுதிகளையும் பற்றிய ஒரு பொதுவான நல்லறிவு இருக்க வேண்டும் என்பது மட்டுமல்லாமல், ஒரு வேதப்பகுதியை விளக்குகிறபோது, அதோடு தொடர்புடைய பகுதிகளை இனங்கண்டு, அவற்றை ஒன்றுதிரட்டி, ஒப்பிட்டுப் பார்த்து, அந்தப் பகுதிக்கான விளக்கத்தைத் திட்டவட்டமாக அறிந்துகொள்ளும் விதத்தில் வருந்தி உழைக்க வேண்டும் என்பதையும் இது வலியுறுத்துகிறது. இதையெல்லாம் செய்த பின்னும், ஒரு வேதப்பகுதி தெளிவற்றதாகவும் அல்லது சந்தேகத்திற்குரியதாகவும் இருந்தால், அதே விஷயத்தை விளக்குகிற தெளிவான இன்னுமொரு பகுதியைக் கொண்டுதான் அந்தப் பகுதிக்கு விளக்கம்தர வேண்டும். மொர்மனிய கூட்டத்தைப் (Mormonism) போல், ஒரு வேதப்பகுதியைக் கொண்டு ஒரு போதனையையே உருவாக்கக் கூடாது. அவர்கள் 1 கொரிந்தியர் 15:29ஐ சுட்டிக்காட்டி, தங்களுடைய மூதாதையர்களுக்காக ஞானஸ்நானம் பெறுகிற ஒரு போலிப் போதனையை உருவாக்கியிருக்கிறார்கள். அதேபோல், ரோமன் கத்தோலிக்கமும், யாக்கோபு 5:14, 15 வசனங்களைச் சுட்டிக்கட்டி, நோய்வாய்ப்பட்டவர்களுக்காக எண்ணெய் பூசி ஜெபித்தல் என்ற ஒரு முறையை ஏற்படுத்தியிருக்கிறார்கள். நம்முடைய கர்த்தர் தம்முடைய ஊழியத்தின்போது வலியுறுத்தியது போல் இரண்டு அல்லது மூன்று சாட்சிகளின் வாக்கினால் மட்டுமே எந்தவொரு உண்மையும் நிறுவப்பட வேண்டும் (யோவான் 5:31–39; 8:16–18). எந்தவொரு முக்கியமான போதனையும் முன்னடையாளங்கள், உருவகங்கள், அல்லது உவமைகளை மட்டுமே அடிப்படையாகக் கொண்டு அமையக் கூடாது என்பதில் அதிக கவனம் காட்டவேண்டும். முன்னடையாளங்கள், உருவகங்கள், அல்லது உவமைகள் போன்றவற்றை, தெளிவான மற்றும் எழுத்துபூர்வமான பகுதிகளை விளக்குகிறபோது உதாரணங்களாகப் பயன்படுத்தலாம்.

எந்தவொரு வேதப்பகுதியையும், அதனுடன் இணைந்திருக்கிற வேறு வேதப்பகுதியோடு தொடர்புபடுத்தி மட்டுமே விளக்கமளிக்க வேண்டும் என்பதை வேதத்தை விளக்குகிற எவரும் தன் மனதில் உறுதியாகக் கொண்டிருக்க வேண்டும். இந்த அடிப்படையான விதியைக் கடைபிடித்தால், பல வசனங்களைக் குதர்க்கமாக விளக்குவதிலிருந்து அது நம்மைப் பாதுகாக்கும். ஆகவே, "என் பிதா என்னிலும் பெரியவராயிருக்கிறார்" (யோவான் 14:28) என்று கிறிஸ்து சொல்வதை நாம் கேட்கும்போது, "நானும் பிதாவும் ஒன்றாயிருக்கிறோம்" (யோவான் 10:30) என்ற அவருடைய முந்தைய அறிவிப்பை நாம் கவனத்தில் கொண்டால், கிறிஸ்து பிதாவைவிட சற்றுக் கீழான நிலையில் இருக்கிறார் என்ற தவறான சிந்தனைக்கு இடமளிக்காமலிருக்கலாம். ஆகவே யோவான் 14:28ல் கிறிஸ்து விளக்கியது அவருடைய மத்தியஸ்தப் பணியைப் பற்றியதாகவே நிச்சயமாக இருக்க வேண்டும். ஏனென்றால், அந்தப் பணியில், பிதாவின் சித்தத்தை நிறைவேற்றுகிற ஊழியனாக அவர் இருக்கிறார். ஆகவே குமாரன், வேறு எவராகவும் இருக்க வாய்ப்பே இல்லை, அவர் "சர்வவல்லமையுள்ள தேவன்" (ஏசாயா 9:6), "மெய்யான தேவன்" (1 யோவான் 5:20) என்று நாம் உறுதியாகச் சொல்ல வேண்டும். அதேபோல், "ஞானஸ்நானம் பெற்று, உன் பாவங்கள் போகக் கழுவப்படு" (அப்போஸ்தலர் 22:16) என்பது போன்ற

*வசனம் "அவருடைய குமாரனாகிய இயேசுகிறிஸ்துவின் இரத்தம் சகல பாவங்களையும் நீக்கி, நம்மைச் சுத்திகரிக்கும்" (1 யோவான் 1:7) என்ற வசனத்திற்கு முரணானது என்று தவறாக விளங்கிக்கொள்ளக் கூடாது. "கழுவப்படுதல்" என்ற அடையாள விளக்கத்தை மட்டுமே நாம் அதில் கவனிக்க வேண்டும். "பூலோகத்திலுள்ளவைகள் பரலோகத்திலுள்ளவைகள் யாவையும் அவர் மூலமாய்த் தமக்கு ஒப்புரவாக்கிக்கொள்ளவும் அவருக்குப் பிரியமாயிற்று" (கொலோசெயர் 1:20) என்ற வசனம் "உலக மக்கள் அனைவரும் இரட்சிப்படைவார்கள்"* (Universalism) *என்று போதிக்கவில்லை. அல்லது, அது நித்திய தண்டனையை விவரிக்கிற வேதப்பகுதிகளுக்கெல்லாம் முரணாகவும் இல்லை. அதேபோல், 1 யோவான் 3:9ஐ 1 யோவான் 1:8டுடன் ஒத்துப்போகும் விதத்தில்தான் புரிந்து கொள்ள வேண்டும்.*

*எந்தவொரு வேதப்பகுதியையும் விளக்குகிறபோது அதன் சந்தர்ப்பச் சூழலைக் கூர்ந்து கவனிக்க வேண்டியது மிகவும் அவசியமானது. வேதத்திலுள்ள எந்தவொரு பகுதியையும் வேதத்தின் ஏனைய பகுதிகளோடு இசைந்துபோகிற விதத்தில் விளக்க வேண்டும் என்பது மட்டுமல்லாமல், அந்தப் பகுதி அமைந்திருக்கிற சந்தர்ப்பத்தின் பொதுவான தன்மையோடு முழுமையாக உடன்படும் விதத்தில் விளக்க வேண்டும். அப்பகுதியின் வெளிப்படையான எளிய விளக்கத்தை அறிவதில் கவனம் காட்ட வேண்டும். இந்த எளிய முறையை நிராகரித்து, வேறு அவசியமற்ற காரியங்களில் ஈடுபடுவது தவறான விளக்கங்களை உருவாக்குவதற்கே வழிவகுக்கும். ஒரு வசனத்தை அதன் சந்தர்ப்ப சூழலிலிருந்து பிரித்தோ, அல்லது அதன் ஒரு பிரிவைத் தனிமைப்படுத்தியோ விளக்குவது, அந்த வேதப்பகுதிக்கு அபத்தமான விளக்கம் தருவது மட்டுமல்ல, அதைப் பொய்யாகக் காட்ட முயலுவதாகும். உதாரணமாக, மத்தேயு 18:17ல் "சபைக்குச் செவிகொடுத்தல்" என்பது சபை தலைவர்களுடைய தீர்ப்புக்கு சபை அங்கத்தவர்கள் அடிப்பணிய வேண்டும் என்பதைக் குறிப்பிடவில்லை; அது அத்துமீறிச் செல்லும் சகோதரர் தனிப்பட்ட ஆலோசனைக்கு இணங்க மறுத்தால், உள்ளூர் சபை அந்த விஷயத்தில் கூடித் தீர்மானம் எடுக்க வேண்டும் என்பதையே வலியுறுத்துகிறது. ஒருவர் சொல்லியிருக்கிறார், "சாமர்த்தியமான வஞ்சக இருதயம் கொண்ட ஒருவர், வேதத்திலுள்ள சில வசனங்களை அவற்றின் சந்தர்ப்பங்களிலிருந்து பிரித்தெடுத்து, தன் மனம்போனபோக்கில் அவற்றை இணைத்துக்காட்ட முடியும், அப்படிக் காட்டப்படுகிற அனைத்தும் உண்மையிலேயே வேதத்தின் வார்த்தைகளாக இருந்தாலும், அவை அதைத் தொகுத்தவரின் எண்ணங்களைப் பிரதிபலிக்கிறதே தவிர, பரிசுத்த ஆவியின் எண்ணங்களை அல்ல."*

*சில நிகழ்வுகளின் முக்கியத்துவத்தைத் துல்லியமாகக் கண்டறிவதற்கு, அந்த நிகழ்வின் சந்தர்ப்பத்தையும், சூழலையும் கவனிப்பது பேருதவியாக இருக்கும். அநேக பிரசங்கிகள் இதைச் செய்ய தவறுவதால்தான், "ஆண்டவரே, என் உதடுகளைத் திறந்தருளும்; அப்பொழுது என் வாய் உம்முடைய புகழை அறிவிக்கும்" (சங்கீதம் 51:15) என்ற இந்த உண்மையின் வலிமையைத் தங்களுடைய வாழ்வில் உணராதிருக்கிறார்கள். பாவத்தின் காரணமாக தாவீதின் வாய் திறக்கவில்லை, தன் பாவத்தை அறிக்கையிடவும் இல்லை. அதன் காரணமாக,*

பரிசுத்த ஆவியின் தீ அணைக்கப்பட்டிருந்தது. இப்போது அவர் கடவுளிடம் ஒப்புரவானதால், வெட்கத்தால் மூடப்பட்டிருந்த தன் உதடுகள் தொடர்ந்து அந்நிலையில் இல்லாமலிருக்க வேண்டும் என்று கர்த்தரிடம் தன் ஏக்கத்தைத் தெரிவித்தார். ஒரு நிகழ்வின் ஆத்மீக முக்கியத்துவம், அது எந்தவிதத்தில் தொடருகிறது என்பதிலேயே வெளிப்படும். இதற்கான அருமையான பயன்பாட்டை நமக்குத் தருகிற விதத்திலான ஒரு உதாரணத்தை மத்தேயு 8:23–26 வசனங்களில் நாம் காணலாம். இதற்கான கருப்பொருள் 23 ஆவது வசனத்தின் கடைசியிலும், அதற்கு மேலுள்ள 19–22 வசனங்களை வாசிப்பதன் மூலம் அறிந்துகொள்ளலாம். இங்குள்ள வரிசைமுறை நல்லதொரு வழிகாட்டுதலாக இருக்கிறது. இந்தப் பகுதி முழுவதும் கிறிஸ்துவை “பின்தொடர்வதைப்” பற்றி விளக்குகிறது. 23–26 வசனங்கள், சூறாவளி ஏற்பட்ட சூழலில், கிறிஸ்துவினுடைய சீடனின் பாதையைப் பற்றிய அருமையானதொரு விளக்கத்தைத் தருகிறது. அதாவது, சோதனைகள், சிரமங்கள் மற்றும் ஆபத்துகளின் சூழலை எதிர்கொள்வதைப் பற்றி அது விளக்குகிறது. இப்படியான சூழலில், பெரும்பாலும் கர்த்தர் தூங்கிக்கொண்டிருக்கிறதாகவும், நமக்கு வரும் ஆபத்தைப பற்றிக் கவலைப்படாமலோ அல்லது அலட்சியமாகவோ இருக்கிறார் என்றும் தோன்றலாம். ஆனால் உண்மையில் இது நம்முடைய விசுவாசத்திற்கான சோதனை. நாம் பொறுமையுடன் காத்திருக்க வேண்டும் என்பதை இயேசு நமக்குத் தெரிவிக்கிறார். எத்தகைய சூறாவளியாக இருந்தாலும், அதிலிருந்து நம்மைக் காப்பதற்கு அவர் போதுமானவராக இருக்கிறார்.

லூக்கா 15:3–32ல் பதிவுசெய்யப்பட்டிருக்கிற உவமைகளை, அதன் சந்தர்ப்ப சூழலைப் புறக்கணித்துவிட்டு, அதைச் சரியாக விளங்கிக்கொள்ள முடியாது. இந்த உவமைகளைக் கிறிஸ்து தன் சீடர்களுக்கு அல்ல, தன்னுடைய எதிரிகளுக்கே சொன்னார் என்ற அடிப்படை உண்மையைக் கவனிக்கத் தவறுவதால், வனாந்தரத்தில் விடப்பட்ட தொண்ணூற்றொன்பது ஆடுகள், அதாவது மனந்திரும்ப அவசியமில்லாதவர்களாக அடையாளங் காட்டப்பட்டிருப்பது யாரைக் குறிக்கிறது என்பதைப் பற்றியும், தகப்பனுடைய தயாள குணத்தைக் குறை கண்ட “மூத்த மகன்” யாரைக் குறிக்கிறது என்பதைப் பற்றியும் வேத விளக்கவுரையாளர்கள் மத்தியில் தேவையற்ற குழப்பமும் பல்வேறுவிதமான விளக்கங்களும் உருவாகுவதற்குக் காரணமாக அமைகிறது. நம்முடைய கர்த்தர் பாவிகளை ஏற்றுக்கொண்டு அவர்களுடன் உணவருந்தியதைப் பற்றி முறுமுறுத்த பரிசேயர்களுக்கும் வேதபாரகர்களுக்கும் பதிலளிக்கிற விதமாகவே இந்த உவமைகள் கொடுக்கப்பட்டன. அவர்களுடைய இருதயத்தின் நிலையை அம்பலப்படுத்தவும், அவருடைய கிருபையான செயல்களை நிலைநிறுத்துகிற விதத்திலுமே இந்த உவமைகளைக் கர்த்தர் வடிவமைத்திருக்கிறார். அவர்மீது அவதூறான குற்றச்சாட்டுகளைச் சொல்லிவந்தவர்களின் சீரழிந்த நிலையை எடுத்துக்காட்டவும், பாவிகளைத் தம்முடன் ஏன் ஐக்கியங்கொள்ள ஏற்றுக்கொள்ளுகிறார் என்பதை அவர்களுக்குத் தெரிவிக்கவும், இவற்றின் மூலம் தெய்வீக செயற்பாடுகளின் கிருபைகளை வெளிப்படுத்தவுமே இந்த உவமைகளைச் சொல்லியிருக்கிறார். இத்தகைய பரவலான உண்மைகளை நாம் புரிந்துகொண்டால், இந்த உவமைகளிலுள்ள விவரங்களைப் புரிந்துகொள்வது சிரமமாக இருக்காது.

லூக்கா 15:1, 2 வசனங்களில், இருவேறுபட்ட அல்லது நேரெதிரான நிலையிலுள்ள மனிதர்களைப் பற்றிய விளக்கங்களை நாம் காண்கிறோம். ஒரு கூட்டத்தினர், இழிவானவர்களாகக் கருதப்பட்ட வரிவசூல் செய்பவர்களும், பாவிகளும். அவர்கள் கிறிஸ்துவினுடைய தேவையை ஆழமாக உணர்ந்தவர்களாக அவரால் ஈர்க்கப்பட்டவர்கள். மற்றொரு கூட்டத்தினர், பெருமையும் சுய நீதியும் கொண்ட பரிசேயர்களும் வேதபாரகர்களும். இந்த இரண்டு பிரிவினரை மையமாகக் கொண்டுதான் இந்தப் பகுதியிலுள்ள மூன்று உவமைகளும் தரப்பட்டிருக்கின்றன. முதலாவது உவமையில், காணாமற்போன தன்னுடைய ஆட்டைத் தேடிப் பாதுகாக்கிற நல்ல மேய்ப்பனைக் காண்கிறோம். இதுவே இரட்சிப்பிற்கு ஆதாரமான அவருடைய பணி. தங்களுக்கு மனந்திரும்புதல் அவசியமில்லை என்று எண்ணிக்கொண்டிருந்த சுயநீதிக்காரரான பரிசேயர்களே ஏனைய தொண்ணூற்றொன்பது ஆடுகள். தேடிக் கண்டுபிடிக்கப்பட்ட ஆடு வீட்டிற்குக் கொண்டுவரப்படுகிறது. ஏனைய தொண்ணூற்றொன்பதும் வனாந்திரத்திலேயே விடப்பட்டன. இரண்டாவது உவமை, ஒரு பெண்ணின் காணாமற்போன வெள்ளிக்காசு கண்டுபிடிக்கப்படுவதை விவரிக்கிறது. இந்த உவமையில் மனித இருதயத்திற்குள் நடக்கும் பரிசுத்த ஆவியானவரின் கிரியை விளக்கைக் கொளுத்தி வெள்ளிக்காசைக் கண்டு பிடிக்கும் செயலின் மூலம் விளக்கப்படுகிறது. மூன்றாவது உவமையில், மேய்ப்பனால் தேடப்பட்டவன், அதாவது, ஆவியால் பிரகாசிக்கப்பட்டவன், தகப்பனோடு இருக்கிறான். அதே சமயம் மூத்த மகன், “ஒருக்காலும் நான் உம்முடைய கற்பனையை மீறவில்லை” என்று தன்னைப் பற்றிப் பெருமிதமாகப் பேசுகிறான். இது பரிசேயர்களைப் படம் பிடித்துக் காட்டுகிறது. மூத்தவன் தகப்பன் கொடுத்த விருந்திலும், சந்தோஷத்திலும் பங்கு கொள்ளவில்லை. இதிலிருந்து, இந்த உவமைகளில் ஒரு பகுதி யாருக்குச் சொல்லப்படுகிறது என்பதையும், அதன் சந்தர்ப்பச் சூழலையும், அந்தப் பகுதியில் பேசுகிறவர் யார் என்பதையும், அதை வடிவமைத்திருக்கிற விதத்தையும் கண்டறியவேண்டியதன் முக்கியத்துவத்தை அறிந்து கொள்ளுங்கள்.

எங்கெல்லாம் “ஆகையால்” “ஆதலால்” “ஏனெனில்” போன்ற வார்த்தைகள் வருகிறதோ அங்கெல்லாம், அந்த வார்த்தைகள், அதற்கு மேலிருக்கிற பகுதியை நாம் ஆராய வேண்டியதன் அவசியத்தை உணர்த்துகின்றன. இப்படியான வார்த்தைகளை நாம் கூர்ந்து கவனிக்க வேண்டும். இந்த வார்த்தைகளைத் தொடர்ந்து வருகின்ற பகுதிகளின் விளக்கம், அதற்கு மேலிருக்கும் பகுதியில் விவரிக்கப்பட்டிருக்கிற வார்த்தைகளின் மூலமாகச் சொல்லப்படுகிறது என்பதை இது தெரிவிக்கிறது.

இந்த விஷயத்தில் கவனக்குறைவாக இருந்தால் என்ன நடக்கும் என்பதற்கு நல்ல உதாரணமாக, 2 கொரிந்தியர் 5:17ஐப் பற்றிப் பரவலாகக் காணப்படும் தவறான புரிதலைக் குறிப்பிடலாம். பத்தில் ஒன்பது வீதமானவர்கள் இந்த வசனம் “இப்படியிருக்க” என்று ஆரம்பிப்பதைக் குறிப்பிடுவதேயில்லை. இதன் காரணமாக, “ஒருவன் கிறிஸ்துவுக்குள்ளிருந்தால் புதுச்சிருஷ்டியாயிருக்கிறான்; பழையவைகள் ஒழிந்துபோயின, எல்லாம் புதிதாயின” என்ற வசனத்தைச் சரியாக விளங்கிக்கொள்ள முடியாமற் போவது மட்டுமல்லாமல்,

முற்றிலும் தவறாக விளங்கிக்கொள்ளுகிறார்கள். “இப்படியிருக்க” என்ற வார்த்தை, இந்த வசனத்தைத் தனியானதாகவோ, அல்லது தன்னில்தானே எல்லாவற்றையும் கொண்டுள்ளது என்ற விதத்திலோ அணுகக்கூடாது என்பதைத் தெரிவிக்கிறதோடு, இதற்கு மேலிருக்கிற வசனங்களோடு பிரிக்க முடியாத தொடர்பு கொண்டது என்பதையும் சுட்டிக்காட்டுகிறது. இதற்கு முந்தைய வசனத்தைக் கவனித்தால், அதுவும் “ஆகையால்” என்று துவங்குகிறது. இது, இந்தப் பகுதி முழுவதும் ஒரு போதனை அல்லது கோட்பாட்டை விளக்குகிற பகுதி என்பதைக் காட்டுவதோடு, இந்தப் பகுதி ஒரு ஆத்துமாவின் அனுபவத்தை விளக்குகின்ற பகுதியாகவோ அல்லது சில கடமைகளை அறிவுறுத்துகிற பகுதியாகவோ இல்லை என்பதையும் சுட்டிக்காட்டுகிறது.

2 கொரிந்தியர் 5:17ல் “ஒருவன்” என்ற வார்த்தையை நாம் கவனிக்க வேண்டியது அவசியம். இந்த வார்த்தை, இந்த வசனத்தில் விவரிக்கப்பட்டிருக்கிற விஷயம், விதிவிலக்கான சில முக்கியமான நபர்களைப் பற்றியோ, முதிர்ச்சியடைந்த கிறிஸ்தவர்களை மட்டுமோ குறிப்பதாகக் காணப்படவில்லை. மாறாக இது மறுபிறப்பு அடைந்த அனைவரையும் பற்றிய ஒரு பொதுவான உண்மையை முன்வைக்கிறது. உண்மையில், இந்த வசனம் கிறிஸ்தவ அனுபவத்தைப் பற்றியே சொல்லவில்லை; மாறாக மறுபிறப்பு நம்மில் ஏற்படுத்தியிருக்கிற புதிய உறவைப் பற்றித்தான் விவரிக்கிறது. சில கேள்விகளுக்கு விரிவான பதில் தரும் விதத்தில் இது நம்மை அழைத்துச் செல்லுகிறது: அப்போஸ்தலனாகிய பவுல் எதைக் குறித்து இங்கு எழுதியிருக்கிறார்? இதில் அவரைக் கவனம் காட்ட வைத்தது எது? இதை அவர் விளக்கியிருக்கிற விதத்தின் சிறப்பு என்ன? பவுல், யூதமத முறைமைகளையும் அதன் நம்பிக்கைகளையும் நேரடியாக மறுக்கிறார் என்பதை இங்கு தெரிவித்திருக்கிறார். 14 முதல் 16 வரையுள்ள வசனங்களில், பவுல், கிறிஸ்துவுடனான ஐக்கியம் நம்முடைய பிறப்பு வழி முறைமைகளை இல்லாமலாக்கிவிடும் என்றும் யூதர், யூதரல்லாதவர்கள் என்ற உலக முறைமைகளின்படியான வேறுபாடுகள் முடிவுக்கு வருகிறது என்றும் இது, நம்மை புதிய அல்லது உயிர்த்தெழுதலின் நிலையைக் கொண்டு, கடவுளுக்கு முன்பாக நம்முடைய புதிய நிலையை உறுதிப்படுத்துகிறது என்பதையும் வலியுறுத்துகிறார். நாம் புதிய படைப்பாக, புது உடன்படிக்கையின் கீழ் இப்போது வந்திருக்கிறோம். பழைய உடன்படிக்கையின் எல்லா வரையறைகளும் கட்டுப்பாடுகளும் அகற்றப்பட்டுவிட்டன. இந்தப் போதனையைத்தான் எபிரெயர் நிருபம் வெளிப்படுத்துகிறது.

வேதத்தை விளக்குகிறவர்கள், எந்தவொரு வேதப்பகுதியையும் விளக்குகிறபோது, அப்பகுதியின் நோக்கத்தை அறிவதற்கு, அந்தப் பகுதிக்கு முன்னும் பின்னுமுள்ள வசனங்களின் தொடர்பை அறிவதும் அவசியம். சிலவேளைகளில், ஒரு வேதப்பகுதியின் நோக்கத்தை அறிவதற்கு அந்தப் பகுதி அமைந்திருக்கும் முழுப் புத்தகத்தையும் முறையாக ஆராய வேண்டியிருக்கும். எபிரெயர் நிருபத்தை வாசிக்கிறபோது, இதைச் செய்ய வேண்டியது அவசியம். எபிரெயர் 6:4–6 மற்றும் 10:26–31 பகுதிகள், ஒருவன் மனந்திரும்பிய கிறிஸ்தவனாக இருந்தும், பிறகு மோசமான

வீழ்ச்சியடைந்து, பின்வாங்கிய நிலையிலேயே தொடர்ந்திருப்பதைத்தான் விளக்குகின்றன என்ற எண்ணத்தில், கிறிஸ்தவன் என்று நினைத்துக்கொண்டு தன்னைத்தானே சித்திரவதை செய்துகொள்ளுகிற எத்தனை பேர் இருக்கிறார்கள். இந்த வசனங்களில் குறிப்பிடப்பட்டிருக்கிறவர்களின் சூழல் முற்றிலும் வித்தியாசமானது என்பதை நாம் சொல்லித் தெரியவேண்டிய அவசியமில்லை. இந்தப் பகுதியில் குறிப்பிடப்பட்டிருக்கிற எபிரெயர்களின் நிலை தனித்துவமானது. இவர்கள் யூதமதத்தின் கீழ் வளர்ந்தவர்கள்; இருந்தும் சுவிசேஷத்தை ஏற்றுக்கொண்டவர்கள். ஆனால் மேசியாவைப் பற்றி அவர்கள் கொண்டிருந்த சரீரப்பிரகாரமான நம்பிக்கைகள் பொய்த்துப் போக, அவர்கள் அனுபவித்த துன்புறுத்தல்களும் அவர்களில் மனவுளைச்சலை ஏற்படுத்தி, கிறிஸ்தவ விசுவாசத்தை விட்டு, மீண்டும் யூதமத நம்பிக்கைகளுக்குத் திரும்புகிற சோதனைக்குள்ளானவர்கள். இத்தகைய போக்கு, பேராபத்தானது என்ற எச்சரிப்பு நேரடியாக அவர்களுக்குத் தரப்பட்டிருக்கிறது. ஆகவே, இந்தப் பகுதி கிறிஸ்தவர்களில் பின்வாங்கிப் போனவர்களைப் பற்றிச் சொல்லுகிறது என்பது ஆதாரமற்றது. அந்த விதத்தில் இந்தப் பகுதியை விளக்குவது இந்தப் பகுதி வடிவமைக்கப்பட்டிருக்கிற விதத்திற்கு முற்றிலும் எதிரானது.

சிலவேளைகளில், ஒரு வேதப்பகுதியின் முக்கிய போதனையை, அந்தப் பகுதி அந்தப் புத்தகத்தின் எந்த சந்தர்ப்பத்தில் அமைந்திருக்கிறது என்பதைக் கண்டறிவதில் இருந்தே அறிந்துகொள்ள முடியும். இதற்கு ஒரு பொருத்தமான உதாரணம் ரோமர் 2:6–10. இந்தப் பகுதியை அநேகர் கண்டபடி விளக்கியிருக்கிறார்கள். இந்த நிருபத்தின் கருப்பொருள் “விசுவாசத்தினாலே நீதிமான் பிழைப்பான்” என்பதுதான். இது ரோமர் 1:16–17 வசனங்களில் குறிப்பிடப்பட்டிருக்கிறது. இந்நிருபத்தின் முதற்பகுதி ரோமர் 1:18 முதல் 3:21 வரையுள்ள வசனங்களைக் கொண்டது. இதில் கடவுளின் நீதிக்கான உலகளாவிய தேவை நிரூபிக்கப்பட்டுள்ளது. இதன் இரண்டாவது பகுதி 3:21 முதல் 5:1 வரையுள்ள வசனங்களைக் கொண்டது. இதில் கடவுளுடைய நீதியின் வெளிப்பாடு முன்வைக்கப்படுகிறது. மூன்றாவது பகுதியான ரோமர் 5:1 முதல் 8:39 வரை, கடவுளின் நீதி நம்மை வந்தடைவதைப் பற்றி விவரிக்கிறது. ரோமர் 1:18–32ல், அப்போஸ்தலனாகிய பவுல், யூதரல்லாதவர்களின் குற்றத்தன்மையையும், ரோமர் 2 ஆவது அதிகாரத்தில் யூதர்களுடைய குற்றத்தன்மையையும் விவரித்துக்காட்டுகிறார். ரோமர் 2 ஆவது அதிகாரத்தின் முதல் பதினாறு வசனங்களில், நியாயத்தீர்ப்பின் செயல்வடிவம் எப்படியிருக்கும் என்பதை விவரிக்கிறார். 17 முதல் 24 வரையுள்ள பகுதியில், அதன் தாக்கம் யூதர்களின்மீது எப்படியிருக்கும் என்பதை விளக்கியிருக்கிறார். நியாயத்தீர்ப்பின் செயல்முறை எவற்றை அடிப்படையாகக் கொண்டதென்றால்:

1. கடவுளின் நியாயத்தீர்ப்பு, மனிதன் தன்னில்தானே கண்டனத்திற் குரியவன் என்பதை அடித்தளமாக கொண்டது (வசனம் 1);
2. கடவுளின் நியாயத்தீர்ப்பு, மனிதனுடைய உண்மையான நிலைக்கு ஏற்ப இருக்கும் (வசனம் 2);

3. இரக்கம் அலட்சியப்படுத்தப்படுகிறபோது குற்றத்தன்மை அதிகரிக்கும் (வசனங்கள் 3–5);
4. இதை வெளிப்புற சடங்குகளோ அல்லது உதட்டளவு அறிக்கையோ அல்ல, செயல்களே முடிவு செய்கின்றன (வசனங்கள் 6–10);
5. இதில் கடவுள் பாரபட்சமாகவோ, அல்லது ஒரு சாராருக்கு சாதகமாகவோ செயல்படுவதில்லை. (வசனம் 11);
6. இதில் மனிதர்கள் அவரவர் பெற்று அனுபவிக்கிற பல்வேறு வாய்ப்புகளுக்கேற்ப தீர்ப்பு அமையும். (வசனங்கள் 11–15);
7. நியாயத்தீர்ப்பு இயேசு கிறிஸ்துவால் நிறைவேற்றப்படும் (வசனம் 16).

இந்தச் சுருக்கமான ஆய்விலிருந்து, அப்போஸ்தலனாகிய பவுல், ரோமர் 2:6, 7 வசனங்களில், "உன் மனக்கடினத்திற்கும் குணப்படாத இருதயத்திற்கும் ஏற்றபடி, தேவனுடைய நீதியுள்ள தீர்ப்பு வெளிப்படும் கோபாக்கினைநாளிலே உனக்காகக் கோபாக்கினையைக் குவித்துக்கொள்ளுகிறாயே. தேவன் அவனவனுடைய கிரியைகளுக்குத்தக்கதாய் அவனவனுக்குப் பலனளிப்பார்" என்று குறிப்பிட்டிருப்பதன் மூலம் இரட்சிப்பிற்கான வழி இதுதான் என்று அவர் சொல்லவில்லை என்பது தெளிவாகத் தெரிகிறது. பாவத்தில் வீழ்ச்சியடைந்த மனிதன், தன்னுடைய சொந்த நற்செயலின் மூலமாகவோ அல்லது கடவுளுக்குக் கீழ்ப்படிவதன் மூலமாகவோ நித்திய பேரின்ப வாழ்வைப் பெறுவான் என்று சொல்லுவது, பவுலுடைய போதனைகளுக்கு நேர்எதிரானது. இந்தப் பகுதியில், கடவுளுடைய நியாயப்பிரமாணம் எதை வலியுறுத்துகிறது என்றும், அது நியாயத்தீர்ப்பு நாளில் எந்தளவுக்கு அவசியமானது என்பதையும் காட்டுவதுதான் பவுலுடைய நோக்கம். யூதனோ, யூதனல்லாதவனோ, யாராக இருந்தாலும், மனிதனுடைய சீரழிந்த தன்மை, கடவுளுடைய நியாயப்பிரமாணத்திற்குப் பூரணமாகவும் தொடர்ச்சியாகவும் கீழ்ப்படிய முடியாத நிலையை அவனில் ஏற்படுத்தியிருக்கிறது. இது மனிதனுடைய இயலாமையை வெளிப்படுத்துகிறதோடு, தேவநீதியைப் பெறுவதென்பது அவனுக்கு வெளியிலிருந்து நிகழ வேண்டியுள்ளது என்பதையும், அது கிறிஸ்துவின் மூலமாக வருகிறதென்பதையும் தெளிவாக எடுத்துக்காட்டுகிறது.

ஒரு வேதப்பகுதியின் நோக்கத்தை அறிவதில் கவனக்குறைவாக இருப்பது, தவறான போதனைக்கே வழிவகுக்கும் என்பதை நமக்குக் காட்டுகிற மற்றொரு வேதப்பகுதி, 1 கொரிந்தியர் 3:11–15. ஒரு ஆபத்தான மாயைக்கு ஆதரவாக இந்தப் பகுதி அதிகமாகப் பயன்படுத்தப்படுகிறது. அது என்னவெனில், ஒருவன் கிறிஸ்தவனாக இருந்தும் அவனுக்கு வரக்கூடிய அனைத்து வெகுமதிகளையும் இழந்து, எந்தவிதமான நற்செயல்களையும் அவன் தன்னில் கொண்டிராமல் இருந்தும் பரலோகம் சென்றுவிடுவான் என்பதுதான். இந்தவிதமான சிந்தனை, பரிசுத்த ஆவியானவரை மிகவும் அவமதிக்கும் செயலாகும். ஏனென்றால், பரிசுத்த ஆவியானவர் அவனுடைய ஆத்துமாவில் அற்புதமான விதத்தில் செயல்பட்டும், அவனில் தங்கியிருந்தும், அவனில் ஆவிக்குரிய கனிகளைக் கொண்டுவர முடியாமல் போய்விட்டது என்று

*சொல்லுவதாகிவிடும். இத்தகைய மோசமான சிந்தனை வேதபோதனைகளின் முரண்பாடற்ற தன்மைக்கு முற்றிலும் எதிரானது. எபேசியர் 2:10 சொல்லுகிறது, தேவனுடைய கிருபையினால் விசுவாசத்தின் மூலமாக இரட்சிப்பை அடைகிறவர்கள், "நற்கிரியைகளைச் செய்கிறதற்குக் கிறிஸ்து இயேசுவுக்குள் சிருஷ்டிக்கப்பட்டு, தேவனுடைய செய்கையாயிருக்கிறார்கள்". நற்செயல்களைத் தன்னில் கொண்டிராதவர்கள் இரட்சிப்பை அடைந்தவர்களாக இருக்க முடியாது. ஏனென்றால், "கிரியைகளில்லாத விசுவாசம் செத்தது" (யாக்கோபு 2:20). "மெய்யாய் நீதிமானுக்குப் பலன் உண்டு" (சங்கீதம் 58:11). "அவனவனுக்குரிய (மறுபிறப்படைந்தவனுக்குரிய) புகழ்ச்சி தேவனால் உண்டாகும்" (1 கொரிந்தியர் 4:5). இவற்றைக் கிறிஸ்தவர்களில் சிலர் அடையமாட்டார்கள் என்று சொன்னால், இந்த வசனங்கள் அனைத்தும் உண்மையாக இருக்க முடியாது.*

*இத்தகைய தவறான வேத விளக்க முறை, கடவுளை மிகவும் அவமதிப்பது மட்டுமல்லாமல், வேதத்திலுள்ள எளிமையான போதனைகளோடு நேரடியாக முரண்படுவதோடு, அந்தப் பகுதி அமைந்திருக்கிற சூழலையும் கருத்தில் கொள்ள மறுக்கிறது. 1 கொரிந்தியர் 3:11–15 வசனங்களை விளங்கிக்கொள்ள வேண்டுமானால், முதலில் 1–10 வரையுள்ள வசனங்களை நாம் கவனிக்க வேண்டும். அதன் மூலமாகவே அப்போஸ்தலனாகிய பவுல் இந்தப் பகுதியில் எதைப் பற்றி விளக்குகிறார் என்பதை நாம் அறிய முடியும். 3 ஆவது அதிகாரத்தின் தொடக்கத்தில், 1:11ல் கொரிந்தியர்களுக்கு எதிராக அவர் தெரிவித்த குற்றச்சாட்டிற்குத் திரும்புகிறார். அங்கு பவுல், கர்த்தருடைய ஊழியர் ஒருவரை மற்றொரு ஊழியருக்கு எதிரானவராகக் காட்டி, அதன் விளைவாக அவர்களுக்குள் ஏற்பட்ட பிளவைக் குறித்து அவர்களைக் கண்டிக்கிறார். 1 கொரிந்தியர் 3:3ல், அத்தகைய நடத்தை அவர்கள் மாம்சப்பிரகாரமாக நடந்துகொள்வதன் அடையாளம் என்று அவர் சுட்டிக்காட்டுகிறார். தானும் அப்பொல்லோவும் "ஊழியக்காரர்தான்" (வசனம் 5) என்பதை அவர் அவர்களுக்கு நினைவூட்டுகிறார். தான் வெறுமனே நட்டதாகவும், அப்பொல்லோ தண்ணீர் பாய்ச்சியதாகவும், கடவுளே அதைப் பன்மடங்கு விளையச் செய்ததாகக் குறிப்பிட்டிருக்கிறார். கடவுள் அவர்கள் இருவருடைய உழைப்பையும் ஆசீர்வதிக்காவிட்டால், இருவருமே "ஒன்றுமில்லை" (வசனம் 7) என்கிறார். ஆகவே வெறும் கருவிகளை முதன்மைப்படுத்துகிறவிதத்தில் நடப்பது, எத்தனை பைத்தியக்காரத்தனம்! ஆகவே, 1 கொரிந்தியர் 3ன் ஆரம்ப வசனங்கள் கடவுளுடைய ஊழியர்களின் விசேஷ பணிகளைக் குறித்து விவரிக்கிறது என்பது சந்தேகத்திற்கு இடமின்றித் தெளிவாகிறது. இது கிரேக்க மொழியில் இன்னும் தெளிவாகக் காணப்படுகிறது. எப்படியென்றால், கிரேக்க மொழியில் "மனிதன்" என்ற வார்த்தை இந்தப் பகுதியில் நேரடியாக இடம்பெறவில்லை. மாறாக, "அவனவனுடைய" என்ற வார்த்தையே இடம்பெற்றிருக்கிறது. இந்த வார்த்தைப் பிரயோகம், பவுலையும், அப்போலாவையும் ஒன்றிணைத்து ஒரு கூட்டத்தைச் சேர்ந்தவர்களாகக் காட்டுகிறது.*

*இதே விளக்கம் 8 ஆவது வசனத்திலும் தொடர்கிறது. அங்கு, கடவுளுடைய ஊழியர்களின் வேலையில் பன்முகத்தன்மை இருந்தாலும், அதாவது ஒருவர் சுவிசேஷகராகவும் மற்றொருவர் போதனையளிக்கிறவராகவும்*

இருந்தாலும், அவர்களுடைய பணி ஒரே எஜமானரிடமிருந்தே வருகிறது. அது ஆத்துமாக்களின் நன்மையையே நோக்கமாகக் கொண்டது. எனவே கர்த்தருடைய ஊழியர்களில் ஒருவரை மற்றொருவருக்கு எதிராக நிறுத்துவதும் அல்லது ஒருவரைவிட இன்னொருவரை உயர்வாகக் காட்ட முற்படுவதும் பாவகரமான முட்டாள்த்தனம். கிறிஸ்து தம்முடைய ஊழியர்களுக்குப் பலவிதமான வரங்களைப் பகிர்ந்தளித்து, அவர்களுக்குப் பலவிதமான ஊழியங்களை வழங்கியிருந்தாலும், “அவனவன் தன்தன் வேலைக்குத் தக்கதாய்க் கூலியைப் பெறுவான்” என்று வாசிக்கிறோம். 10 ஆவது வசனத்தில், பவுல், தான் ஏற்படுத்திய ஊழிய “அஸ்திபாரத்தைப்” பற்றிக் குறிப்பிடுகிறார் (எபேசியர் 2:20லும் இதைக் காணலாம்). அதனைத் தொடர்ந்து, அவருக்குப் பின் வந்த கட்டடக்காரர்கள் பயன்படுத்திய பொருட்களைப் பற்றிக் குறிப்பிடுகிறார். அவர்களுடைய பொருட்கள், அதாவது அவர்களுடைய பிரசங்கங்கள், கிறிஸ்துவை மகிமைப்படுத்துபவையாகவும், விசுவாசிகளைப் பக்திவிருத்தியில் பெருகச் செய்பவையாகவும் இருந்தால், அவர்கள் நிலைத்திருப்பார்கள், அதற்கான வெகுமதியையும் பெறுவார்கள். ஆனால் அதற்குப் பதிலாக, பிரசங்கிகள், குற்றச் செயல்களும், வெடிகுண்டுகளின் அச்சுறுத்தல்களும், யூதர்களுடைய சமீபத்திய செயல்கள் போன்றவை அதிகரிக்கச் செய்வதை நோக்கமாகக் கொண்டு செயல்பட்டால், அத்தகைய பயனற்ற குப்பைகள் வரப்போகும் நியாயத்தீர்ப்பு நாளில் எரிந்து பொசுங்கிப்போகும்; அவர்களுக்கு வெகுமதியும் கிடைக்காது. ஆகவே இந்தப் பகுதி, பிரசங்கிகள் அவர்களுடைய ஊழியங்களில் பயன்படுத்தும் கருவிகளைப் பற்றி விவரிக்கிறதே தவிர, தனிப்பட்ட ஒரு கிறிஸ்தவன் வாழவேண்டிய முறையைப் பற்றி விவரிக்கவில்லை.


## திருமறைத்தீபம் தொகுப்புகள்




1995-2001
910 பக்கங்கள், ரூ. 950
2002-2004
610 பக்கங்கள், ரூ. 750
2005-2007
604 பக்கங்கள், ரூ. 750
2008-2010
604 பக்கங்கள், ரூ. 750
2011-2014
792 பக்கங்கள், ரூ. 950
2015-2017
608 பக்கங்கள், ரூ. 750
2018-2020
544 பக்கங்கள், ரூ. 750

உங்கள் பிரதிக்குத் தொடர்புகொள்ளுங்கள்:
சீர்திருத்த வெளியீடுகள், சென்னை
+91 9445671113

# நெல்லை கண்ட அப்போஸ்தலன்

கருத்துரை - ஷேபா மிக்கேள் ஜோர்ஜ்

நெல்லை அப்போஸ்தலர் ரேனியஸின் சுவிசேஷம் மற்றும் இலக்கியப் பணிகளை சீகன்பால்க், வில்லியம் கேரி, கால்டுவெல், ஜி.யு. போப் என்பவர்களோடு சேர்த்து சீர்திருத்த கிறிஸ்தவ மிஷனரிகள் என்ற ரீதியில் மேலோட்டமாகத் தெரிந்து வைத்திருந்த போதிலும் ஆழமாக அறிந்து கொள்ளும் வாய்ப்பு இதற்கு முன் கிடைத்ததில்லை. எனவே திருமறைத்தீபம் இதழில் வந்திருக்கும் இந்த ஆக்கம் அதற்கு ஒரு நல்ல வாய்ப்பை ஏற்படுத்தித் தந்தது. ரேனியஸின் பன்முகப்பட்ட அருட்பணி ஊழியத்தின் சாராம்சத்தை இதழ் மூலம் அறிந்தபோது மிகவும் ஆச்சரியமாக இருந்தது. அதேவேளை இத்தனை அசாதாரணமான ஆவிக்குரிய எழுப்புதல் நிகழ்ந்த மாவட்டம் இன்று அதன் அடையாளமே இல்லாமல் அவிந்து போனது ஏன்? என்ற கேள்வியும் சேர்ந்து எழுந்தது. அது மட்டுமல்லாமல் ‘எழுப்புதல்’ ‘சீர்திருத்தம்’ என்ற வார்த்தைகளைக் கேட்டாலே ஜெட் வேகத்தில் ஆறு நூற்றாண்டுகள் பின்நோக்கி ஓடும் மூளைக்கு, ஒரு நூற்றாண்டுக்கு முன் பக்கத்து மாவட்டத்தில் நடந்த அற்புதமான சுவிசேஷ எழுப்புதல் குறித்த நிகழ்ச்சிகள் எட்டாமல் இருந்திருக்கிறதே! என்ற ஆதங்கத்தையும் உண்டாக்கியது.

திருமறைத்தீபம் இதழ் ஏற்படுத்திய தாக்கத்தோடு, இதழ் அறிமுகப்படுத்திய தனபால் தேவராஜ் அவர்கள் எழுதிய “ரேனியஸ் வாழ்க்கை வரலாறு” நூலும் கையில் கிடைத்துவிட ஆர்வத்துடன் அதை வாசிக்க ஆரம்பித்தேன். சமாதானபுரம், மெய்ஞானபுரம், பாபநாசம் போன்ற ஊர்களின் பெயர்கள் மட்டுமல்லாமல் தாவீது உபதேசியார், சற்குணம், ஞானாயுதம், மாசிலாமணி, வேதநாயக சாஸ்திரி போன்றவர்கள் பெயர்களோடும் பரிச்சயம் ஏற்பட்டு, அது வாசிப்புக்கு நல்ல உயிரோட்டம் அளித்தது.

ரேனியஸின் மிஷனரி ஊழியம் எப்படி முதல் நூற்றாண்டு பவுல் அப்போஸ்தலரின் ஊழியத்தை ஞாபகப்படுத்தியதோ அதே போல அன்றைய விசுவாசிகள் அனுபவித்த துன்பமும் முதல் நூற்றாண்டு கிறிஸ்தவர்களை ஞாபகப்படுத்தியது. மெய்யாகவே வரலாற்றில் அது ஒரு அற்புதமான எழுப்புதலின் காலம்; உயிர் பயமின்றி, உணவு உடை குறித்த கவலையின்றி கூட்டம் கூட்டமாக விசுவாசிகள் சத்தியத்துக்கு சாட்சி கொடுத்த காலம்; உபதேசிமார்களின் உதடுகள் ஓய்வே இன்றி காலை முதல் மாலை வரை ஆத்துமாக்களைத் தேடித் தேடி ஞான உபதேசம் அளித்த காலம்; சிறியோரும் பெரியோரும் ஆர்வத்துடன் தமிழ் எழுத்துக்களைக் கற்று வேத அறிவில் வளர்ந்த காலம்; விளக்கேற்றும் எண்ணெய் வாங்கும் வசதி இல்லாத பத்து வயது சிறுவனும் இரவு நேரத்தில் பனை ஓலைகளைப் பொறுக்கி நெருப்புக் கொலுத்தி ஆர்வத்துடன் வேதம் படித்த காலம்; வாரநாட்கள் முழுவதும் காலையும் மாலையும் சபையாகச் சேர்ந்து விசுவாசிகள் ஆனந்தமாகக்

கர்த்தரை ஆராதித்து வந்த காலம்; விக்கிரக கோயில்கள் தேவாலயங்களாக மாறி வந்த காலம்; கூட்டம் கூட்டமாக ஆத்துமாக்கள் மனந்திரும்பி புதிது புதிதாக கிறிஸ்தவ கிராமங்கள் உண்டான காலம்; சாதி, இனப் பாகுபாடுகள் ஒழிந்து மனித சித்தம் புதுப்பிக்கப்பட்டு சீர்திருத்த சமுதாயம் மலர்ந்த காலம் அது. இவற்றையெல்லாம் வாசிக்கும் போது உண்டான மகிழ்ச்சிக்கு அளவே இல்லை.

அத்தோடு இந்த ஆச்சரியமான எழுப்புதல் ஊழியத்தில் கர்த்தர் பயன்படுத்திய பாத்திரமாகிய ரேனியஸிடம் காணப்பட்ட பல அற்புதமான கிறிஸ்தவ குணாதிசயங்களில் பரிசுத்த ஆவியானவரின் அழுத்தமான கைரேகைகளைக் காணமுடிந்தது. அத்தகைய குணாதிசயங்கள் நம்மத்தியில் காணப்படுகின்ற பல குறைபாடுகளைச் சுட்டிக் காட்டியது; என்னிலுந்தான். அவற்றில் சிலவற்றை இங்கு குறிப்பிட விரும்புகிறேன்.

1. கர்த்தருக்குள் எடுத்த தீர்மானங்களில் எத்தனை தடைகள் வந்தாலும் உறுதியாக இருந்த ரேனியஸின் குணம், தீர்மானங்களை நிறைவேற்றுவதில் நமக்கு இருந்து வருகின்ற சோம்பலையும், உறுதியற்ற தன்மையையும் இனம் கண்டு கொள்ள உதவியது.

2. ரேனியஸ் ஒரு ரோபோ மனிதனோ? என்ற எண்ணத்தை உண்டாக்கும் அளவிற்கு இருந்த ரேனியஸின் உழைப்போடு நமது உழைப்பை ஒப்பிட்டுப் பார்க்கும்போது மிகவும் வெட்கமாக இருந்தது. குறிப்பாக ஆங்கில சீர்திருத்த கிறிஸ்தவ நூல்களை பொறுமையாக வாசித்து சத்தியத்தை அறிந்து கொள்ள சோம்பல் பட்டு மொழிபெயர்ப்பு நூல்களைத் தேடி அலையும் எனது எண்ணப்போக்கிற்கு சாட்டையடி கொடுத்து ஆங்கில வாசிப்புக்கு அதிகமாக ஊக்கப்படுத்தியது. காலத்தை மீட்டெடுத்து ஞானமாகப் பயன்படுத்துவதில் மேலும் அதிகப்படியான ஜாக்கிரதை உணர்வைக் கொடுத்தது.

3. சரளமாகப் பேசும் நண்பர்களிடம் கூட சுவிசேஷ வார்த்தைகளைப் பேசும் போது திக்கித் திணறும் நமக்கு ரேனியஸின் சுவிசேஷம் அறிவிக்கும் ஆற்றலை விவரிக்க வார்த்தைகளே இல்லை எனலாம். தனிநபரோ, திருவிழா கூட்டமோ என்ற எண்ணிக்கை அவருக்கு ஒரு பொருட்டல்ல! சிறுபிள்ளையோ சாமியாரோ வயது முதிர்ச்சியோ ஒரு தடையல்ல! எந்த வயதினருக்கும் எந்த இடத்திலும் சரியான விதத்தில் ஆத்துமாவைக் குறிவைத்து சுவிசேஷம் அறிவிப்பதில் மிகவும் தேர்ந்தவராக இருந்த ரேனியஸை நமக்குச் சுவிசேஷம் அறிவிப்பதில் மிகப்பெரிய மாதிரியாக எடுத்துக் காட்டுகிறது வரலாறு என்பது நிதர்சனமான உண்மை.

4. அழைத்த கர்த்தருக்கு மிகவும் உண்மையாக இருந்து பொறுப்புடன் தனது கடமைகளை நிறைவேற்றினார் ரேனியஸ். கேட்கிறார்கள் என்பதற்காக எல்லோருக்கும் ஞானஸ்நானம் அளித்துவிடாமல் அவர்கள் மனந்திரும்புதலை ஆராய்ந்து பார்த்து சபையில் சேர்த்துக் கொண்டார் (பொன்னப்ப பிள்ளையின் அங்கத்துவ அனுமதி கடிதம் அதற்கொரு நல்ல எடுத்துக்காட்டு). வெளிப்படையாக பாவம் செய்தவருக்கு திருவிருந்து அளிக்க மறுத்தார். ஞான போதிப்பு முறையை ஏற்படுத்தி அடிப்படை

கிறிஸ்தவ உபதேசங்களை ஆத்துமாக்களின் மனதில் ஆழமாகப் பதியச் செய்தார். சாதிப் பிரிவினை மேலோங்கியபோது எந்தச் சமரசத்திற்கும் இடம் கொடுக்காமல் தைரியமாக செமினரியை இழுத்து மூடினார். உபதேசியார்களின் தவறுகள் நிரூபிக்கப்பட்டபோது அவர்களை பணிநீக்கம் செய்தார்.... இவற்றையெல்லாம் வாசிக்கும் போது, தேவபயத்தோடு முகஸ்துதிக்கு இடம் கொடுக்காமல், பாவத்தோடு எந்தச் சமரசமும் செய்யாமல் கிறிஸ்தவ கடமைகளை நிறைவேற்றுவதில் நாம் எந்த நிலையில் இருக்கிறோம் என்று பரிசோதித்துப் பார்க்க வைத்தது.

5. சி.எம்.எஸ். உடன் ஏற்பட்ட முரண்பாட்டால் திருநெல்வேலியை விட்டு வெளியேறும் நிலையில், "திருநெல்வேலியின் மீது இவ்வளவு பலத்த அடி விழக் கர்த்தர் ஏன் அனுமதித்தார்? என் பாவங்களின் நிமித்தமா? சபையாரின் பாவங்களின் நிமித்தமா?" என்று கூறி தாழ்மையோடு தன்னை சோதித்துப் பார்த்த ரேனியஸின் குணம், பிரச்சினை என்று வந்தால் என்ன? ஏது? என்று நிதானிக்காமல் உடனடியாக மற்றவர்களைக் கைகாட்டும் சிறுபிள்ளைத்தனத்திற்கு முற்றுப்புள்ளி வைத்து, இதில் என் தவறு என்ன இருக்கிறது என்று சோதித்துப் பார்க்கும் பொறுமையைக் கற்றுத் தந்தது.

6. நேசிக்கிறவர்களின் மரணம் குறித்த ரேனியஸின் பார்வை இவ்வாறாக இருந்தது, "உலகப் பொருட்கள் மீது அன்புவைக்காமல், நமது அன்பின் உச்சத்தை நமது கடவுளும் இரட்சகருமானவரிடத்திலேயே வைக்க, காலம் இருக்கும்பொழுதே நாம் பழகியிருப்போமானால், இவ்விதத் துயரங்கள் நமக்கு எவ்வளவு இலகுவான வேதனையாயிருக்கும். ஒரு நாள் அவர்களைவிட்டு நாம் பிரிவோம் அல்லது அவர்கள் நம்மை விட்டுப்பிரிவர். ஆ! ரட்சிப்புக்கேற்ற ஞானமுள்ளவர்களாய் மட்டும் நாமிருக்கக்கூடுமானால் எவ்வளவு மேன்மை!" என்ற வரிகள் நாம் நேசிப்பவர்களின் மரணத்தை ரேனியஸின் பார்வையில் எதிர்கொள்ளும் மனப்பக்குவத்தை வளர்த்துக் கொள்ள உதவியது.

7. ரேனியஸின் சுயநலமற்றப் பொதுக் கல்விப் பணிகள், காலரா காலங்களில் ஆற்றிய பொதுநலத் தொண்டுகள், விசுவாசிகள் அல்லாதவர்களிடம் கொண்டிருந்த பொதுவான நட்புறவு போன்றவை ஒரு விசுவாசியாக நாம் உலகத்திற்கு ஆற்றவேண்டிய பொதுவான கடமைகளில் மேலதிகமான அறிவைப் பெற உதவியது.

அடுத்தபடியாக, மெய்யான எழுப்புதல் குறித்து மங்கலாகக் கொண்டிருந்த எனது எண்ணங்களுக்கு ஒரு தெளிவான வடிவம் கொடுத்து நன்றாக மனதில் இருத்திக் கொள்ளும் வண்ணம் இந்த வரலாற்றுக் குறிப்புகள் அழுத்தமான பாதிப்பை மனதில் ஏற்படுத்தியது. ரேனியஸின் ஊழியத்தில் ஆவியானவரின் விசேஷித்த கிரியையை நன்றாக அடையாளம் காண முடிந்தது. குறிப்பாக இதே காலகட்டத்தில் இந்தியாவின் வடகிழக்குப் பகுதியில் ரேனியஸைப் போன்றே வைராக்கியமாக உழைத்த வில்லியம் கேரியின் அசாதாரண பணிகள் தொடர்ந்துகொண்டிருந்தபோது, அவர் செய்திராதளவுக்குத் திருச்சபைப் பணிகளை அப்போஸ்தலர்களை நினைவுறுத்தும் விதத்தில்

ரேனியஸை செய்யவைத்த ஆவியானவரின் விசேஷித்த கிரியையை திருமறைத்தீபம்பட்டவர்த்தனமாக எடுத்துக் காட்டி எல்லா மகிமையையும் கர்த்தர் ஒருவருக்கே ஏறெடுக்க வைக்கிறது.

திருமறைத்தீபம் இதழை வாசித்தபோது மனதில் வலுவாக எழுந்த ஒரு கேள்வி, 'இத்தனை மகிமையான சுவிசேஷ ஊழியத்தை ருசித்து, அனுபவித்து, கனிகொடுத்த மாவட்டம் மொத்தமாக அதன் அடையாளங்களை இழந்து இத்தனை சீக்கிரமாக வறண்டு போனது ஏன்?' என்பது தான். ஒரு வேளை ரேனியஸின் வரலாற்று நூலில் வாசித்த 'கொங்கராயக்குறிச்சி' சபையைப்போல, கர்த்தர் அளித்திருக்கும் அதிக துன்பமற்ற வளமான வாழ்க்கைதான் குளிருமில்லாமல் அனலுமில்லாமல் இன்றைய கிறிஸ்தவம் அழிந்து கொண்டிருப்பதற்கான காரணமோ? என்ற எண்ணத்தை ஏற்படுத்துகிறது. சங்க காணிக்கை, பிடி அரிசி காணிக்கை, மாதாந்திர ஸ்தோத்திர காணிக்கை என சபையின் பொருளாதார தேவைகளைச் சந்திக்க காலத்தின் நிர்ப்பந்தத்தால் ரேனியஸ் ஏற்படுத்திய வழியை, வெறும் சடங்குகளாக மட்டும் இன்றும் தொடரும் பாரம்பரிய சபைகளில் வினாவிடை உபதேசத்தின் பயன்பாடுகள் சுத்தமாக இல்லாமல் போனதும் ஒரு காரணம். இது வினாவிடைப் போதனைகளைத் தொடர்ச்சியாகக் கற்றுக் கொடுக்க வேண்டியதன் இன்றியமையாத் தேவையை நினைவுபடுத்துகின்றது. அத்தோடு எஸ்ரா, தானியேலைப் போல ஆத்தும பாரத்தோடும் மனந்திரும்புதலோடும் வைராக்கியமாக ஜெபிக்கும் ஜெப வீரர்களும், ரேனியஸைப் போலத் தளராமல் சுவிசேஷம் அறிவிக்கும் சுவிசேஷகர்களும் உருவாக வேண்டியதன் கட்டாயத்தையும் வலியுறுத்தியது.

இறுதியாக, திருமறைத்தீபத்தின் ரேனியஸ் குறித்த இந்த ஆக்கம், இன்றைய விசுவாசிகளில் அவிந்து போகும் நிலையிலிருக்கும் கிறிஸ்தவ வைராக்கியத்தைத் தூண்டிவிடும் சத்தியத் தீப்பொறியாக அமையும் என்று நிச்சயமாக நம்புகிறேன். அதற்கு அவசியமான கர்த்தருடைய கிருபைகளுக்காக ஊக்கத்துடன் ஜெபிக்கிறேன்.

# நூல்களைப் பெற எமது இந்திய முகவரிகள்

**திரு. K. அருள் செல்வம்,** 4/630, கிருபை இல்லம், ஆண்டவர் நகர், நாமக்கல் 637002. கைப்பேசி: +91 9443798315

**போதகர் S.D. ஜெரால்டு, (கிருபை சபை),** 34C, கிருபை இல்லம், நாயக்கமார் தெரு, பைக்காரா, மதுரை 625004. கைப்பேசி: +91 9994874077

**போதகர் T. அண்ணாதுரை, (கிருபை சுவிசேஷ சபை),** வீரியபாளையம் (PO), பஞ்சப்பட்டி (via), K.R. புரம் (TK), கரூர் 639119. கைப்பேசி: +91 9789741732

**போதகர் A. முரளி, (கிருபை சீர்திருத்த பாப்திஸ்து சபை),** 22 LN ரெட்டி கார்டன், கரியானபால்யா, லிங்கராஜாபுரம், பெங்களூரு 560084. கைப்பேசி: +91 9743246003

**போதகர் M. ஜேம்ஸ், (கிருபை சீர்திருத்த சபை),** 6/87 காமராஜர் தெரு, திருவள்ளுவர் நகர், அயனாவரம், சென்னை 600023. கைப்பேசி: +91 9445671113

# சீர்திருத்த வெளியீடுகள்

| எண் | புத்தகத்தின் பெயர் | ஆசிரியர் | விலை (இந்திய ரூபாய்) |
|---|---|---|---|
| 1. | வெற்றிகரமான கிறிஸ்தவ வாழ்க்கை | A.N. மார்டின் | 40.00 |
| 2. | அங்கத்துவ அமைப்பில்லாத திருச்சபையா? | ஆர். பாலா | 20.00 |
| 3. | கர்த்தரின் வேதம் | ஆர். பாலா | 50.00 |
| 4. | அழிவில்லா ஆத்மீக ஆலோசனைகள் | A.N. மார்டின் | 90.00 |
| 5. | பிரசங்கிகளும் பிரசங்கமும் | ஆர். பாலா | 80.00 |
| 6. | சிறுவர்களுக்கான வேத உபதேசம் | ஆர். பாலா | 20.00 |
| 7. | குடும்ப ஆராதனை | ஆர். பாலா | 20.00 |
| 8. | தாம்பத்திய உறவில் நெருக்கம் | அலன் டன் | 90.00 |
| 9. | ஆதிசபையின் அற்புத வரங்கள் | ஆர். பாலா | 80.00 |
| 10. | திருச்சபை வரலாறு (பாகம் 1) | ஆர். பாலா | 100.00 |
| 11. | திருச்சபை வரலாறு (பாகம் 2) | ஆர். பாலா | 100.00 |
| 12. | ஆவிக்குரிய பிள்ளை வளர்ப்பு | ஜெ. சி. ரைல் | 50.00 |
| 13. | கிறிஸ்தவ வினாவிடைப் போதனைகள் | ஆர். பாலா | 80.00 |
| 14. | உப்புத் தன் சாரத்தை இழந்தால் . . . | மொரிஸ் ரொபட்ஸ் | 15.00 |
| 15. | மதில் மேல் பூனை | A.N. மார்டின் | 15.00 |
| 16. | இயேசுவிடம் வர ஏன் சிலருக்கு மனதில்லை? | A.N. மார்டின் | 15.00 |
| 17. | உன்னைப்பற்றிய குற்றப்பதிவேடும் உனக்குள்ளிருக்கும் பொல்லாத இருதயமும் | A.N. மார்டின் | 15.00 |
| 18. | சீர்திருத்த விசுவாசமும் கிருபையின் போதனைகளும் | ஆர். பாலா | 60.00 |
| 19. | கிறிஸ்தவன் யார்? | A.N. மார்டின் | 40.00 |
| 20. | வில்லியம் கேரி | ஆர். பாலா | 80.00 |
| 21. | ஜோன் பனியன் | ஜெரமி வாக்கர் | 40.00 |
| 22. | ஜோன் ஓவன் | ஜெரமி வாக்கர் | 40.00 |
| 23. | இரட்சிப்பின் படிமுறை ஒழுங்கு | ஆர். பாலா | 90.00 |
| 24. | 1689 விசுவாச அறிக்கை | ஆர். பாலா | 60.00 |
| 25. | சட்டையை விற்றாவது புத்தகத்தை வாங்கு | ஆர். பாலா | 80.00 |
| 26. | சீர்திருத்த இறையியலின் தந்தை - ஜோன் கல்வின் | ஆர். பாலா | 80.00 |
| 27. | தேவபயம் | A.N. மார்டின் | 140.00 |
| 28. | தேவகோபம் | ஆர். பாலா | 140.00 |
| 29. | பக்திவைராக்கியம் | டேவிட் மெரேக் | 180.00 |
| 30. | பழைய ஏற்பாட்டில் பரிசுத்த ஆவியானவர் | ஆர். பாலா | 90.00 |
| 31. | பியூரிட்டன்களின் பார்வையில் மனந்திரும்புதல் | ஆர். பாலா | 180.00 |
| 32. | மனித சித்தம் | ஆர். பாலா | 180.00 |

## புதிய வெளியீடு




பியூரிட்டன் ரால்ப் வென்னிங்கின் ஆங்கில நூல் தமிழில் மொழிபெயர்க்கப்பட்டு “பாவம் பொல்லாதது” என்ற தலைப்பில் நூலாக வெளிவரவிருக்கிறது என்பதை மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்கிறோம். நம்முடைய இந்திய முகவரிகளோடு தொடர்புகொண்டு நூலைப் பெற்றுக்கொள்ளலாம்.

# திருமறைத்தீபம்

மலர் 29 ஏப்ரல் – ஜூன் 2023 இதழ் 2


1. பரிசுத்த வேதாகமம் 1
2. மகிமையுள்ள திருச்சபை 24
3. வேதம் முரண்படாது 35
4. நெல்லை கண்ட அப்போஸ்தலன் 45



## திருமறைத்தீபம் இணைய தளம்



- திருமறைத்தீபம் (PDF/Unicode)
- தமிழ் ஆடியோ, வீடியோ பிரசங்கங்கள்
- கிறிஸ்தவ இலக்கியங்கள்
- இறையியல் பூங்கா

இத்தளம் பற்றிய உங்கள் கருத்துக்களையும் எங்களுக்குத் தெரிவியுங்கள். அது தளத்தை மேலும் உங்களுக்குப் பயன்படும்விதத்தில் அமைக்க எங்களுக்குத் துணை புரியும்.

http://www.biblelamp.me

திருமறைத்தீப ஆசிரியரின் பிரசங்கங்கள் மற்றும் வேதபாடங்களைத் தற்போது YouTube ல் கேட்கலாம்.

திருமறைத்தீபம் YouTube TV @Biblelamp




தென்தமிழகத்திலுள்ள வாசகர்கள் நம்முடைய வெளியீடுகளைப் பெற்றுக்கொள்ளுவதற்கான புதிய வசதியைச் செய்திருக்கிறோம். கீழ்வரும் புத்தக நிலையங்களில் நம்முடைய வெளியீடுகள் விற்பனைக்கு உள்ளன.

Diocesan Book Depot CSI
165/69/1, W.C. College Road,
Nagercoil 629001
Mobile: 9245741161

TDTA Diocesan Book Depot
12, Trivandrum Road,
Palayamkottai, Tirunelveli.
Mobile: 9442552964